Registered as a Newspaper in Srilanka

தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்

www.deepam.lk

விலை 40 ரூபா • தீபம் 144 • 03.06.2018

அண்ணா பொதிகள் சேவை
வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் கடிதங்கள் சேவை
AnnA EXPRESS COURIER SERVICE
976, கே.கே.எஸ் வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 5656
070 330 5500



## ‘த.தே.ம.முன்னணியை முழுமையாக தோற்கடிப்போம்... மாவை முதலமைச்சர் வேட்பாளரென சொல்ல முடியாது’

## கிட்டு விரித்த வலையில் சிக்கிய றோ!

## மாட்டிறைச்சியும் தமிழீழமும்!



## ஆனந்தபுரம் BOX

# பிரபாகரன் எங்கே போனார்? அந்த ஒரு சத்தம்தான் கடாபியின் முடிவா?

YARL AHI Ice Cream
யாழ் அகி ஐஸ்கிறீம்


இல. 46, கனகபுரம் வீதி, கிளிநொச்சி
No. 46, Kanakapuram Road, Kilinochchi.
T.P 021 7917585 / 077 0232328










coustomer is king



# மாட்டிறைச்சியும் தமிழ் இராச்சியமும்

நம்மாழ்வார்

“இது இந்துக்களிற்கும் பௌத்தர்களிற்கும் மட்டுமே சொந்தமான பூமி. இங்கு வாழ்பவர்கள் எமது மரபுகளை மதித்து வாழப்பழக வேண்டும். சவுதி அரேபியாவில் வெளிநாட்டவர்கள் போய் பன்றியிறைச்சி சாப்பிடலாமா? இங்கு மாட்டிறைச்சி சாப்பிட முடியாது. எமது மரபுகளை மதித்து வாழ முடியாதவர்கள், எமது நாட்டைவிட்டு வெளியேறிவிடுங்கள்”

இதை யார் சொல்லியிருப்பார்கள்?

ஒரு பார்வைக்கு மஹிந்த ராஜபக்ச மாதிரியும் தோன்றும். ஆனால் அவர் இப்படியான அதி தீவிர, இன்னொரு இனத்தை வெளியேறும்படி சொல்லும் அளவிற்கு முட்டாள்தனமாக இனவாதியல்ல.

ஞானசார தேரர் சொன்னதைபோல தோன்றலாம். அவரது பேச்சின் சாயல்தான் இதில் தெரிகிறது. ஆனால் இதை அவரும் சொல்லவில்லை.

சொன்னவர் மறவன்புலவு சச்சிதானந்தம். சாவகச்சேரியில் வைத்து சொன்னார்.

ஞானசார தேரர் முன்னெடுக்கும் அரசியல் எவ்வளவு ஆபத்தானதென நாம் அச்சம் வெளியிடுகிறோமோ, அதற்கு ஒரு துளியளவும் குறையாத ஆபத்துடைய அரசியலை அண்மையில் சிவசேனையென்ற பெயரில் யாழில் கட்டமைக்க முயற்சித்து வருகிறார்கள். அதன் ஆணிவேராக செயற்படுபவரே சச்சிதானந்தம்.

மறவன்புலவு சச்சிதானந்தத்திற்கு தமிழ் இலக்கிய, அரசியல், சமூக வரலாற்றில் ஒரு மதிப்பார்ந்த இடம் இருந்து வருகிறது. அண்மைய அவரது அரசியல் அதையெல்லாம் தவிடுபொடியாக்கி வருகிறது. பச்சை இனவாதி வேடமமேற்கு, இனங்களை பிரிக்கும் அரசியலை அவரது சிவசேனை மேற்கொண்டு வருகிறது.

வலுவான இந்திய தொடர்புடைய சச்சிதானந்தம், இந்தியாவிலிருந்து இலங்கைக்கு பயனுள்ள எதையும் எடுத்துவராமல் “சிவசேனையை“ மட்டும் எடுத்து வந்திருக்கிறார். கடந்த யாழ் மாநகரசபை தேர்தலில் ஒரு சலசலப்பை ஏற்படுத்த சைவ, கிறிஸ்தவ மோதலை ஏற்படுத்த சிவசேனை முயன்றது. யாழ் மேயர் ஆனல்ட் ஒரு கிறித்தவர். ஏற்கனவே தமிழரசுக்கட்சியில் அதிருப்தியடைந்திருந்தார் சச்சிதானந்தம். ஜனநாயக தமிழரசுக்கட்சியென செயற்பட்டவர்களுடனும் தொடர்பிலும், பேச்சிலும் இருந்தார். தமிழரசுக்கட்சிக்கு ஒரு பாடம் படிப்பிப்பது என்ற ஒன்றை நோக்கத்திற்காக ஆனல்ட் விவகாரத்தை கையிலெடுத்தார்களா, அல்லது மெய்யாகவே ஆனல்ட் விவகாரத்தை கையிலெடுக்க நினைத்து எடுத்தார்களா தெரியவில்லை. ஆனால் இந்துக்களிற்கு வாக்களிப்போம் என பெருந்தொகை பணம் செலவிட்டு, யாழ் நகரம் முழுக்க சுவரொட்டி ஒட்டினார்கள். தமிழ் தேசிய மக்கள் முன்னணியுடனும் சிவசேனையும், அதனுடன் தொடர்பிலிருந்த இந்து மத அமைப்புக்களும் இணைந்து பணியாற்றின.

ஆரம்பத்திலேயே ஒன்றை சொல்லி விட வேண்டும். இந்து என்பது நமக்கு அண்மைக்காலத்தில் இறக்குமதி செய்யப்படுவது. இங்கு சைவ மரபு இருந்தது. சிறுதெய்வ வழிபாட்டை சைவம் எப்படி அழித்ததோ, அதேபோல சைவ மரபை மீறி, இந்து மரபை இங்கு மேலெழ செய்ய அண்மைக்காலமாக நூதனமான செயற்பாடுகள் நடக்கின்றன.



இந்து என்பது நமக்கு அண்மைக் காலத்தில் இறக்குமதி செய்யப்படுவது. இங்கு சைவ மரபு இருந்தது. சிறுதெய்வ வழிபாட்டை சைவம் எப்படி அழித்ததோ, அதேபோல சைவ மரபை மீறி, இந்து மரபை இங்கு மேலெழ செய்ய அண்மைக்காலமாக நூதனமான செயற்பாடுகள் நடக்கின்றன.

இந்த இந்துத்துவ இறக்குமதி இந்தியாவிலிருந்துதான் நடக்கிறது. இந்துத்துவ விஸ்தரிப்பு வாதமாக, கச்சிதமாக அது நடந்து வருகிறது. சாதாரண மக்கள் இதை உணர்ந்து கொள்ளவே முடியாது. மிக நூதனமாக, மிகச்சிறிய மாற்றங்களாக அது நடக்கும்.

ஈழ சைவ மரபில் அனுமான் வழிபாடு இருந்ததில்லை. வட இந்தியாவில் கோலோச்சும் இராம ராஜ்ஜியம் கருத்தை இலங்கையில் வளர்த்தெடுக்க மிக நூதனமாக, இந்திய பின்னணியுடன் முயற்சிகள் நடக்கிறது. சைவ மரபிற்கு மாற்றாக மருதனார்மடத்தில் அனுமன் கோவில், திருகோணமலையில் லக்ஷ்மி நாராயணன் கோவில்கள் அண்மையில் கட்டப்பட்டன. திருகோணமலை கோணேஸ்வரன் ஆலயத்தில் 40 அடி சிலையொன்று உள்ளது. இந்திய நிதியுதவியுடன் அது கட்டப்பட்டது. அதை சிவனென பலரும் நினைக்கிறார்கள். அது சிவனல்ல, ருத்திரன். இந்திய மரபில் சிவனாக ருத்திரனைத்தான் வணங்குகிறார்கள். அந்த சிலைக்கு இராமரைப்போல நீல வர்ணம் தீட்டப்பட்டுள்ளது. “பவளம்போல் மேனியும்“ என பாடப்பட்ட சிவனை, இந்திய இராம கருத்துவருவாக்க நீட்சியில், இராமரின் வர்ணம் பூசப்பட்டுள்ளது.

இலங்கையின் சைவ மரபில் கடவுள் சிலைகள் சாந்தமானவையாகவே அமைக்கப்படும். ஆனால் இந்திய இந்துத்துவ மரபில் சிலைகளில் ஆக்ரோசதன்மையிருக்கும். இந்திய இந்துத்துவம் எதிர்ப்புணர்வை அடிப்படையாக கொண்டவை. அண்மையில் இலங்கையில் அமைக்கப்படும் சிலைகள் எல்லாம், ஆக்ரோசமானவையாக, இந்துத்துவ மரபின் நீட்சியாக அமைக்கப்படுகின்றன. நமது பாரம்பரிய சைவ வழிபாட்டுமுறையை எப்படி, இந்தியாவின் இந்துத்துவாவிற்குள் சிக்கியிருக்கிறது என்பதை மேலோட்டமாக குறிப்பிட்டுள்ளேன்.

தமிழ் அரசியலில் நிலையற்ற தன்மையை பேணவே இந்தியா எப்பொழுதும் விரும்புகிறது. தேர்தலில் வாக்களிப்பதென்னவோ நீங்கள்தான். ஆனால் தமிழரசுக்கட்சியின் தலைவர் யார் என்பதில் தொடங்கி, கூட்டமைப்பின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர்கள், யார் வடக்கு அமைச்சராக நீடிப்பது, முதலமைச்சர் யார் என்பதையெல்லாம் இந்தியாதான் தீர்மானிக்கும். இதையெல்லாம் அவர்கள் எப்படி கையாள்கிறார்கள் என்பதை ஊடகங்களும் பகிரங்கமாக எழுதாததால் சாதாரண மக்களிற்கும் அது தெரிவதில்லை. வடமாகாணசபை உறுப்பினர்கள் மீது விசாரணைக்குழு அமைக்கப்பட்டு, மாகாணசபையில் நிறைய குழப்பங்கள் நடந்ததற்கு பின்னணிக் காரணங்களில் ஒன்றும் இதுதான். இந்திய வர்த்தகர் ஒருவரிற்கு தொழில் அனுமதியை ஐங்கரநேசன் மறுத்ததையடுத்து, அவர் மீது பிரமாஷ்திரங்கள் ஏவப்பட்டன.

சிறிய நாடுகளை கையாளும் பெரிய நாடுகள் எல்லாமே கையாளும் வழக்கமான போர்முலா குழப்பங்கள் தான். தமிழ் சமூகத்தில் எவ்வளவவிற்கெவ்வளவு அதிகமான குழப்பங்கள் ஏற்படுகிறதோ, அது நம்மை கையாள்பவர்களிற்கு வசதியாக இருக்கும்.

இந்த குழப்பங்களை ஏற்படுத்த, பல்வேறு ரூபங்களில் ஆட்களும், அமைப்புக்களும் முளைப்பார்கள். விடுதலைக்காக போராடும் இனமாகிய நாம் ஒவ்வொருவரும் இதில் மிக கவனமாகவும், விழிப்பாகவும் இருக்க வேண்டும்.

சாவகச்சேரியில் சட்டவிரோதமாக மாடுகள் அடைத்து வைக்கப்படும் இடம் இருந்தது, அளவிற்கு அதிகமாக மாடுகள் வெட்டப்பட்டு வெளியிடங்களிற்கு அனுப்பப்படுகிறது என்றால், அது உடனடிய முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு சீர்செய்யப்பட வேண்டிய நிர்வாக பிரச்சனை. நிர்வாக சீர்கேடு நடக்க இலஞ்சம் கொடுக்கப்பட்டதா என்பதையும் ஆராயந்து, அந்த சிக்கலை தீர்க்க வேண்டும். சாவகச்சேரி நகரசபை அதை செய்யாமல் பொறுப்பற்றதனமாக சிக்கலை இழுத்து சென்றதே, இந்த பிரச்சனையை திசைதிருப்ப எத்தனிப்பவர்களிற்கு வாய்ப்பாக அமைந்துவிட்டது.

சாவகக்சேரி கொல்களன் சிக்கலிற்கு மாட்டிறைச்சி சாப்பிடாமல்விடுவதோ, முஸ்லிம்களை வெளியில் போக சொல்வதோ தீர்வல்ல. இந்தவகையில் பிரச்சனையை தீர்த்துகொள்வது முட்டாள்தனம். தலையிடி தீர்விற்கு தலையையே வெட்டிவிடுவதை போன்றது. இது ஏன் முட்டாள்தனம் என்பதையும் சொல்லிவிடுகிறேன்.

இந்த விவகாரத்திற்கு இரண்டு பரிமாணங்கள் உள்ளன. ஒன்று சமூக பரிமாணம். மற்றது அறிவியல் பரிமாணம்.

சமூக பரிமாணத்தில் ஏன் தவறென்பதற்கு அதிக விளக்கங்கள்

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

தேவையில்லை. மாட்டிறைச்சியை யார் சாப்பிடுகிறார்கள் என அன்று சச்சிதானந்தம் கேட்டார். அதாவது, மாட்டிறைச்சி சாப்பிடுபவர்கள் புலையர்கள், சாப்பிடாதவர்கள் உயர்ந்தவர்கள் என்ற மனுநீதி வரையறையை புத்துயிர்ப்பிக்க முனையும் ஆர்வம் அதில் தெரிந்தது.

இலங்கையில் இனி சிறுபான்மையினங்கள் ஒன்றுபடாவிட்டால், அவற்றின் எதிர்காலம் மகிழ்ச்சியளிக்கும் விதமாக அமையாது. முக்கியமாக தமிழர்களின் இனப் பிரச்சனை தீர்க்கப்பட வேண்டுமெனில் முதலில் முஸ்லிம்களுடன் தமிழர்கள் ஒரு இணக்கப்பாட்டிற்கு வர வேண்டும். கடந்த மூன்று தசாப்தத்தில் முஸ்லிம்கள் தம்மை அரசியல்ரீதியாக எல்லாவிதத்திலும் துண்டித்து, தனித்த அரசியல் அடையாளத்தை கட்டமைத்து விட்டார்கள். வடக்கு கிழக்கு தாயாக கோட்பாட்டை தமிழர்கள் கையிலெடுக்கும்போது, அதற்கு விஞ்ஞானபூர்வ, உடனடி சிக்கலாக முஸ்லிம் தேசியம்தான் இருக்கும்.

வெளிப்படையாகவும், நேர்மையாகவும் ஒன்றை இங்கு பதிவுசெய்தே தீர வேண்டும். அதை கையாள, எதிர்கொள்ள தமிழ் தரப்பிடம் எந்த தயாரிப்பும் இல்லை. ஆக, அதை கடக்க முடியாத தடையாக வைத்திருப்பதா, பற்றிப்பிடித்து ஏறிச்செல்லவல்லதாக வைத்திருப்பதா என்பது தமிழர்களின் கையில்தான் உள்ளது.

மனப்பூர்வமாக முஸ்லிம்களை தமிழர்கள் நெருங்கிச்செல்ல வேண்டும். அது முடியவில்லையென்றால் குறைந்த பட்சம் தந்திரோபாய ரீதியிலேனும் அந்த நெருக்கத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

ஆனால், சிவசேனை போன்ற அமைப்புக்களின் நடவடிக்கைகள் அதை சாத்தியப்படுத்தாது. இருக்கும் இடைவெளியை இன்னும் அதிகப் படுத்தும். சாவகச்சேரி தொடக்கம் கொழும்புவரை எல்லோரையும் எதிரியாக வைத்துக்கொண்டு தமிழர்கள் அரசியல் செய்ய முடியாது.

அறிவியல்ரீதியாகவும் மாட்டிறைச்சிக்கு எதிரான கோசம் முட்டாள்தனமானது. மரபுகள், வழக்கங்களில் இருக்கும் மூடத்தனமாக அம்சங்களை, மாற்றப்படவேண்டிய அம்சங்களை காலத்திற்குகாலம் மனிதர்கள் மாற்றிக்கொள்கிறார்கள். அது இயற்கை நியதி. அப்படி நிகழ்வதுதான் இயங்கியலின் அடிப்படை.



ஒருகாலத்தில் மனிதர்கள் மாட்டை தமிழர்கள் புனிதமாக பார்த்தார்கள். அதை வணங்கினார்கள். ஏனெனில், ஆதி மனிதனின் முதல் நட்பும், உபயோகமுமமான கால்நடை மாடுதான். மாடும் மனிதர்களும் ஒருவரையொருவர் சார்ந்த வாழ்க்கையை கட்டமைத்தனர். மாட்டை பாதுகாக்க வேண்டிய தேவை மனிதர்களிற்கு இருந்தது. மாட்டை பாதுகாக்க சுலபமான வழி அதை புனிதமாக்குவது. ஆதி மனிதன் அதை செய்தான்.

ஆதி மனிதனின் பிரதான தொழில் விவசாயம். மாட்டை சார்ந்துதான் விவசாயமிருந்தது. இதனால்தான் இயற்கைக்கு நன்றி சொல்ல தைப்பொங்கலையும், மறுநாள் மாட்டிற்கு நன்றி சொல்ல மாட்டு பொங்கலையும் உருவாக்கினான்.

இன்றைய விவசாயம் மாட்டை நம்பியதல்ல. மாட்டிற்கும் விவசாயத்திற்குமான மிகமிக சிறிய இழை மாட்டு கழிவுகளை உரமாக பாவிப்பது மட்டுமே. அதைவிட சுலபமாக செயற்கை (ஆபத்தான) இரசாயனங்களை பாவிப்பதையே பலரும் விரும்புகிறார்கள்.

இப்பொழுது மனிதர்களிற்கும் மாட்டிற்குமான பிணைப்பு இறைச்சிலும், பாலும் மட்டும்தான். பாலிற்காக மாட்டின் மரபணுவையே மாற்றி, அதன் பாலுறவு இன்பங்களையெல்லாம் இல்லாமல் செய்து, கிட்டத்தட்ட பாலுற்பத்தி இயந்திரமாக மாற்றப்பட்ட மாட்டு இனங்கள் உள்ளன. மிகப்பெரிய கொடுமை அது.

மாடு பாலுக்கு மட்டுமே என்ற நிலைமை உருவானதால்தான் இது. மாடு இறைச்சிக்கு மட்டுமே என்றிருந்தால், புறெயிலர் கோழிகளைபோல இறைச்சிமாட்டை மரபணு மாற்றப்பட்ட மாடுகள் மட்டுமே இங்கேயிருக்கும். மாடு இறைச்சிக்கு மட்டும் என்ற நிலைமையிருப்பதுதான் மாடுகள் நமது பிரதேசத்தில் இன்னும் இயற்கையான மரபணுவுடன், படைப்பின் நியதிகளிற்குட்பட்டு வாழ காரணமாக உள்ளது.

உண்மையிலேயே மாட்டின் மேல் அன்பும், அக்கறையும் இருந்தால் நாம் செய்யவேண்டியவை வேறு விசயங்கள்.

மாட்டிற்கும் மனிதருக்குமான பிணைப்பை எப்படி உருவாக்குவதென திட்டமிட வேண்டும். ஆட்டுக்கடாய்களிற்கும் நமக்குமான ஒருவகை பிணைப்புத்தான் வேள்வி. ஆனால் அது உயிர்வதையுடன் தொடர்புடையது. அப்படியில்லாமல் வேறுவகையான பிணைப்புக்களை சமூக, கலாசார, கலை, விளையாட்டு, நம்பிக்கை, மதம் ஏதோ ஒன்று சார்ந்து உருவாக்கி, வளர்த்தெடுக்க வேண்டும். மாட்டிற்கும் மனிதர்களிற்குமான பிணைப்புக்களில் ஒன்றுதான் மாட்டுவண்டி சவாரி. ஆனால் அதன் கடைசி இழையும் அறும் தறுவாயில் உள்ளது. அதைகூட மீள கட்டியெழுப்ப முயலலாம்.

மனிதர்களிற்கும் மாட்டிற்குமான பிணைப்பை எப்படி புதிதாக உருவாக்குவதென்பதற்கு அதிக கற்பனைத்திறன் கொண்ட, ஒரு சமூகப்புரட்சி அமைப்பு நமக்கு தேவை.

சிவசேனையோ, சச்சிதானந்தமோ உண்மையில் மாட்டின்மேல் அன்புள்ளவர்கள் எனில் அதற்குத்தான் முயல வேண்டும். மாட்டை புனிதமாக்கி, வழிபட வேண்டுமென்றால் சச்சிதானந்தத்தின் வீட்டிலும், சிவசேனையின் பண்ணைகளிலும் மட்டும்தான் மாடு நிற்கும். தொட்டு வணங்குவதற்காக மட்டும் மாட்டை யாரும் பணம் செலவிட்டு வளர்க்கமாட்டார்கள். மாட்டை தனியே வணக்கத்திற்குரிய ஒன்றாக கட்டமைக்க முயல்வது, ஒருவகையில்மாட்டிற்கு செய்யும் துரோகம். அதன் அழிவை ஊக்கப் படுத்தும், நுதன வழிமுறையாகவே அமையும்.

மாட்டின் மேல் அக்கறையுள்ளவர்கள் செய்ய வேண்டிய அடுத்த முயற்சி கொல்களன்களை சீர்படுத்துவது. நமது கொல்களன்கள் உண்மையில் கொலைக்களங்களாக உள்ளன. மிருகங்களை கொல்லும் முறையிலும், இறைச்சிக்காக அவற்றை தயார்படுத்தும் முறையிலும் மேலைத்தேசத்தில் பெரியளவில் சிந்தனை மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. இறைச்சிக்காக வளர்க்கப்படும் விலங்கு கொல்லப்படும் வரையிலும் வலியோ, துன்பமே இன்றி வளர்க்கப்பட்டு, அப்படியே கொல்லப்பட வேண்டும். மாடுகள் முறையான பராமரிப்பில் வளர்க்கப்பட்டு, வலியற்ற முறையில் கொல்லப்படுவதை உறுதிசெய்யும் பொறிமுறை உருவாக்கப்படுவது அவசியம். இதை தனியே நிர்வாக அமைப்பால் உருவாக்க முடியாது. மக்களின் சிந்தனைமுறையில் மாற்றத்தை உருவாக்க வேண்டும். நான் உண்ணப்போகும் இறைச்சிக்குரிய விலங்கு, முறையாக பராமரிக்கப்பட்டு, சந்தோசமாக வாழ்ந்து, வலியின்றி இறந்தது என்பதை உண்பவர்கள் உறுதிப்படுத்தும் மனநிலையை வளர்த்தெடுக்க வேண்டும்.

மிருகங்களை நேசிப்பவர்கள் அடுத்து அக்கறை கொள்ள வேண்டியது அவற்றை கொல்லும் முறையில். மாட்டை கட்டிவைத்துவிட்டு, உச்சந் தலையில் அடித்து கொல்லும் அகோர முறையில் இப்பொழுது கொல்கிறார்கள். ஒரு மாடு வெட்டப்பட்ட இடத்திற்கு அடுத்த மாட்டை கொண்டு செல்லும்போதே, அது கொல்லப்பட போகிறோம் என்பதை உணர்ந்து விடுகிறது. மாடு கொல்லப்படும் இடத்திலும், முறையிலும், அதை செய்பவர்களின் மனநிலையிலும் அடியோடு மாற்றங்களை உருவாக்க வேண்டும்.

மாட்டிறைச்சியை தடைசெய்ய வேண்டுமென்ற கோரிக்கை நடைமுறை சாத்தியமேயில்லை. சிவசேனையின் இப்போதைய உறுப்பினர்களின் ஆயுள்காலத்தில் மட்டுமல்ல, அவர்களின் வாரிசுகளின் காலத்திலும் அதில் வெற்றியடைய முடியாது. ஆனால், மேலே சொன்ன மாற்றங்களில் மாற்றத்தை இந்த சிவசேனையினாலேயே அடைய முடியும். நடைமுறை சாத்தியமானதும் இதுதான்.

மாட்டிறைச்சியை தடைசெய்ய வேண்டுமென சிவசேனை விடாக்கண்டனாக நின்றால், இனங்களிற்கிடையிலான பதற்றத்தை மட்டும்தான் உருவாக்க முடியும்.

தமிழர்கள் விடுதலைப்பயணத்தில் வெற்றிபெற வேண்டுமென உண்மையாக செயற்பட்டால், இப்படியான சில்லறை விவகாரங்களில் கவனத்தை சிதறவிடக்கூடாது. உண்மையான மனஈடுபாட்டுடன், அது முடியாவிட்டால்குறைந்தபட்சம்தந்திரோபாய அடிப்படையிலாவது முஸ்லிம்களுடன் தமிழர்கள் நெருக்கமாக இருக்க வேண்டும்.

சச்சிதானந்தத்தின் பேச்சு சர்ச்சையை கிளப்பியபோது, இளம் முஸ்லிம் நபரொருவர் பேஸ்புக்கில் இப்படி எழுதியிருந்தார் இரண்டு இனங்களும் சிக்கலான விசயங்களை பேசி தீர்த்து ஒற்றுமையாக இருக்க வேண்டும். தேவைப்பட்டால் நாம் மட்டிறைச்சியையும் விட்டுக் கொடுக்கலாம். ஏனெனில் இரண்டு இனத்திற்கும் உண்பதற்கு ஆயிரம் உணவுகள் உள்ளன. ஆனால், வாழ்வதற்கு இந்த ஒரு நிலம் மட்டும்தான் உள்ளது!






▶ இந்த விசயம் கொஞ்சமல்ல நிறைய லேட்டாக சொல்கிறோம். என்றாலும், இணைய விடுப்பென்றால் விட்டுவிடலாமா? யுனஸ்கோவின் பசுமைத்திட்டமொன்றின் தூதராக உருகுவே கால்பந்தாட்ட நட்சத்திரம் சுவாரஸ் நியமிக்கப்பட்டுள்ளார். மலேசியாவில் பசுமைத்திட்டமொன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்காக அடிக்கடி மலேசியா வந்து சென்ற சுவாரஸ், கொஞ்சம் கொஞ்சமாக தமிழையும் தெரிந்து கொண்டிருக்கிறார். சீன புதுவருடத்திற்கு சுவாரஸ் சொன்ன வாழ்த்து இது. இன்னும் அவர் சீன மொழியை கற்கவில்லை போலும்.


▶ சமூக வலைத்தளத்தில் எல்லா பிரமுகர்களும் அக்டிவாகத்தான் இருப்பார்கள். ஆனால் இந்தியாவின் முன்னாள் கிரிக்கெட் வீரர் விரேந்திர சேவாக் கொஞ்சம் வித்தியாசமாக இணையத்தள போராளியாகவே மாறிவிட்டார். அவரது சமூக வலைத்தளங்களில் பாதிக்கப்பட்டவர்கள், விசேட கவனம் தேவைப்படுபவர்கள், ஏழைகள், அநீதிக்கு உள்ளாகுபவர்கள் பற்றிய பதிவுகள் அனேகமாக இடப்பட்டு கொண்டிருக்கின்றன. கிரிக்கெட் ஆடும்போது, பந்துவீச்சாளர்களை ஈவு இரக்கமில்லாமல் அடித்து துவைப்பவருக்குள் இருந்த மனிதாபிமானத்தை, சமூக வலைத்தளத்திற்குள் நுழைந்த பின்னர்தான் கண்டுபிடிக்க முடிந்துள்ளது.



▶ இன்றைய திகதியில் சமூக வலைத்தளங்களில் ஆஹா ஓஹோவென கொண்டாப்படும் சூப்பர் ஸ்டார் அவர்தான். காரணம் சூப்பர் ஸ்டாரையே பார்த்து "யார் நீங்கள்" என கேட்டதுதான். தூத்துக்குடி போராட்டத்தில் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருப்பவர்களை பார்வையிட ரஜினிகாந்த் போன வாரம் சென்றிருந்தார். வைத்தியசாலை கட்டிலில் படுத்திருந்த இவருக்கு பக்கத்தில் ரஜினி போய் கையை நீட்டி, மெதுவாக எழுந்து "யார் நீங்கள்" என கேட்டார். "நான்தான் ரஜினிகாந்த்" என ரஜினி பதிலளிக்க, "அது தெரியுது. 100 நாள் போராடினோமே, அப்ப எங்கயிருந்தீங்க?" என கேட்க, ரஜினி அசடு வழியும் வீடியோ இணையத்தில் செம ரெண்டிங். ஒரே கேள்வியில் சூப்பர் ஸ்டாராகிவிட்டார் இளைஞர்.



▶ சம்பியன் லீக்கில் ஹட்ரிக் கோப்பை வென்ற உற்சாகத்தில் இருக்கிறார் கிறிஸ்டியானோ ரொனால்ட்டோ. கோப்பையை ஏந்தியபடி மகிழ்ச்சியில் "கொண்டாடி தீர்க்க முடியாத மகிழ்ச்சி" என பூரித்திருந்த ரொனால்ட்டோ இன்னொரு சென்ரிமென்டல் கதையையும் இப்பொழுது அவிழ்த்து விட்டுள்ளார். சம்பியன் லீக் ஆரம்பிப்பதற்கு முன்னர், ஹட்ரிக் கிண்ணத்தை, ஹட்ரிக் குழந்தைக்காக கொண்டு வர வேண்டுமென மனைவி செல்லமாக ஒரு நிபந்தனை விதித்திருந்தாராம். அதை நிறைவேற்றிய மகிழ்ச்சியில் இருக்கிறார்.



▶ பிரேசிலின் முன்னாள் உதைபந்தாட்ட நட்சத்திரம் ரெனால்டினோவிற்கு வந்துள்ளது வித்தியாசமான சிக்கல். ஒரே சமயத்தில் இரண்டு பெண்களை திருமணம் செய்ய திட்டமிட்டிருந்தார். ஆனால் உலகெங்கிலுமிருந்து அதற்கு வந்த எதிர்ப்பையடுத்து அப்படியொரு திட்டம் தன்னிடமிருக்கவில்லையென அந்தர் பல்டி அடித்துள்ளார். அவர் தனது பண்ணை வீட்டில் இரண்டு பெண்களுடன் ஒன்றாக வசித்து வருகிறார். ரொனால்டினோவை திருமணம் செய்தே தீர வேண்டுமென அந்த பெண்கள் ஒற்றைக்காலில் நிற்பதால், அவர்களிற்குள் எந்த சிக்கலும் இல்லையாம். திருமணத்திற்கு தேவையான பொருட்களை வாங்க ஒன்றாகவே சென்றார்களாம். ஆனால் ரெனால்டினோவின் சகோதரியே இதை எதிர்த்தார். இது தவறான முன்னுதாரணமாக அமைந்துவிடுமென உலகெங்கிலுமிருந்து கண்டன குரல்கள் எழ, இரண்டு மனைவிகளுடனும் எடுத்துக்கொண்ட புகைப்படங்களை சமூக ஊடகங்களிலிருந்து நீக்கிள்ளார் ரொனால்டினோ!



▶ மும்பை இந்தியனஸ் ஐபிஎல் பிளே ஓவ் இற்கும் தகுதி பெறாததில் இலங்கை ரசிகர்களிற்கும் வருத்தம்தான். மும்பை இந்தியன்ஸின் பயிற்சியாளர் மஹேல ஜெயவர்த்தனவிற்கு இம்முறை அதிர்ஸ்டம் கிடைக்கவில்லை. மொத்த அணியும் சொதப்பிவிட, ஏமாற்றத்துடன் இலங்கைக்கு திரும்பியிருக்கிறார். மும்பை இந்தியன்ஸின் தோல்விக்கு என்ன காரணமென விமானநிலையத்தில் செய்தியாளர்கள் கேட்க, மிஸ்டர் கூல் கொஞ்சம் சூடாகிவிட்டார்.

## ஆனந்தபுரம் BOX

# பிரபாகரன் எங்கே போனார்? அந்த ஒரு சத்தம்தான் கடாபியின் முடிவா?

### யுத்தத்தின் இறுதி நிமிடங்கள்... கட்டுக்கதைகளும் உண்மைக்கதைகளும்



யுத்தத்தின்இறுதிக்கட்டத்தில்நடந்தசம்பவங்கள்தொடர்பாகஉலாவும்கதைகளில்அனேகமானவைஉல்டாகதைகள்தான். அப்படியானசிலகதைகள் தொடர்பானஉண்மைச்சம்பவங்களை இந்ததொடர்வெளிப்படுத்திவந்தது. விடுதலைப்புலிகள் அமைப்பு முற்றாக அழிக்கப்பட்டு,உரிமைகோரவோ, பொறுப்புக்கூறவோ ஆட்களில்லாமல் போனதால், இப்படியான புளுடா கதைகளை யாரும் மறுக்க முடியாதென்ற துணிவில் இந்த கதைகளை உலாவ விடுகிறார்கள்.

இந்த சமயத்தில் இன்னொரு சுவாரஸ்ய விசயத்தையும் சொல்லிவிட வேண்டும். புலிகள் இலங்கையிலும், இலங்கைக்கு வெளியிலும் பினாமிகளின் பெயரில் பல வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். புலிகள் சடுதியாக அழிவை சந்தித்ததும், இந்த வர்த்தகர்களிற்கு வாய்ப்பாகி விட்டது. போரால் பாதிக்கப்பட்டவர்களிற்கு உதவ அந்த பணங்களை திரட்ட முயன்றபோது, கச்சிதமாக ஒரு கதையை அவிழ்த்து விட்டார்கள். 'இந்த பணம் இயக்கப் பணம். தலைவர் நம்பித்தான் எம்மிடம் தந்தார். அவர் எங்காவது இருப்பார். அவர் திரும்பிவந்து, தந்த காசை திருப்பித்தா என கேட்கும்போது, அதை பத்திரமாக ஒப்படைக்க வேண்டிய பொறுப்பு என்னிடமுள்ளது. அதனால் இப்பொழுது பணத்தை திருப்பித்தர முடியாது' என பக்காவாக கதை விடுவார்கள்.

இப்படித்தான் புலிகள் தொடர்பான பல கட்டுக்கதைகள் உலாவிக்கொண்டிருக்கின்றன.

கடந்த சில வாரங்களாக கடாபி, ஆனந்தபுரம் BOX பற்றி குறிப்பிட்டு வந்தோம். இந்த காலப்பகுதியில் பல வாசகர்கள் தொலைபேசி வாயிலாகவும், அலுவலகத்திற்கு நேரில் வந்தும் மேலதிக தகவல்களை கேட்டபடியிருக்கிறார்கள். சிலர் குறிப்பிட்ட சிலரது பெயர்களை குறிப்பிட்டு அவர்களிற்கு என்ன நடந்ததென விசாரிக்கிறார்கள். மேலதிக தகவல்களிற்காக தொலைபேசி அழைப்பேற்படுத்துபவர்களிற்கும், நேரில் வருபவர்களிற்கும் ஒரு அன்பான வேண்டுகோள். தயவுசெய்து உங்களின் சந்தேகங்களை கடிதம் மூலம் தெரியப்படுத்துவதே, உங்களிற்கு உத்தரவாதமாக தகவல் தெரிந்துகொள்ள ஒரே வழி. ஆகவே, மேலதிக தகவல் வேண்டுவோர், சந்தேகம் தெளிவடைய விரும்புபவர்கள் அலுவலக முகவரிக்கு கடிதம் எழுதுங்கள்.

கடந்தவாரம் வாசகர்கள் பலர் ஒரே மாதிரியான கேள்வியை கேட்டிருந்தார்கள். அவர்கள் பலர் கேட்டது, ஆனந்தபுரம் BOX இற்குள் பிரபாகரன் இருந்தாரா? இவர் BOX இற்குள் இருந்ததாகத்தானே சொல்லப்படுகிறது, அப்படி இருந்தால் அவர் எப்படி வெளியேறினார்?, ஆனந்தபுர BOX இல் காட்டிக் கொடுத்ததாக தளபதி பானுவிற்கு புலிகள் தண்டனை கொடுத்தார்களா?

சொல்லிவைத்தால் போல இலங்கையின் பல பகுதிகளிலுமிருந்து இந்த கேள்வியை வாசகர்கள் கேட்டிருந்தனர். இந்த சந்தேகம் வாசகர்களிற்கு ஏற்பட காரணமாகஇருந்ததுஎன்னவென்பதை புரிந்துகொள்ள முடிகிறது. இதற்கெல்லாம் காரணம் போலியான இணையத்தளங்கள்தான். சும்மா கண்ணைமூடிக்கொண்டு ஆளாளுக்கு அடித்துவிட்டு விடுவார்கள். முகநூலை திறந்தாலே, இப்படி அடித்துவிடும் கதைகள்தான். போதாதற்கு குரூப்கள் வேறு கிரியேட் பண்ணி, கட்டாயமாக இழுத்து வைத்து வறுத்தெடுப்பார்கள். இந்த இடங்களில் ஈழப்போரைப்பற்றி படித்தால், இப்படித்தான் எக்குத்தப்பான கதைகள்தான் தெரியவரும். அண்மையில் நின்றுபோன வாரப் பத்திரிகை ஒன்றும் இப்படியான கற்பனை கதைகளை பரபரப்பாக அடித்துவிட்டுக் கொண்டிருந்தது. கற்பனை கதைகளிற்கு ஆயுள் குறைவு அல்லவா!

ஆனந்தபுரம் BOX இற்குள் பிரபாகரன் சிக்கவில்லையென்பதே உண்மை. பிரபாகரன் ஆனந்தபுரத்தில் இருந்தார் என்பதை தீபத்தின் இந்த தொடரிலும் குறிப்பிட்டிருந்தோமே என வாசகர்கள் நினைக்கலாம். ஆனந்தபுரம் என்று குறிப்பிடுவதும் அனந்தபுர BOX என்று குறிப்பிடுவதும் ஒரே நிலப்பகுதியென்றாலும் காலமும், போர்ச்சூழலும் வேறுவேறானவை.

தேவிபுரத்தின் பின்பகுதியின் ஊடாக நகர்ந்த 58வது டிவிசன் இராணுவம் இரணைப்பாலை சந்தியை கைப்பற்றி, அப்படியே தெற்குப்பக்கமாக நகர்ந்து ஆனந்தபுரத்தின் பின்பகுதிக்கு நகர்ந்து, பச்சைப்புல் மோட்டையை கைப்பற்றி, ஆனந்தபுரத்திற்கும் புலிகள் தங்கியிருந்த பிரதான நிலப்பரப்பான பொக்கணை, வலைஞர்மட பகுதிக்குமான தொடர்பை துண்டித்து, முழுமையான இராணுவ முற்றுகைக்குள் உள்ளான பின்னர் நான்கு பக்கமும் இராணுவத்தால் முற்றுகையிடப்பட்ட நிலைமையையே BOX என குறிப்பிட்டனர். இந்த BOX இற்குள் பிரபாகரன் சிக்கவில்லையென்பதே உண்மை. அப்படியாயின் எப்பொழுது வெளியேறினார்? பிரபாகரன் அங்கிருப்பதாக சொல்லப்பட்டது பொய்யா? ஏன் வெளியேறினார்?

இந்த விசயங்கள் எல்லாம் தீபத்தில் வெளியாகும் 'இறுதிப்போரில் நடந்தது என்ன?' தொடரில் விரைவில் வெளியாகும். இப்பொழுது அதை பேச முடியாது. தீபத்தை தொடர்ந்து படித்து வாருங்கள். விரைவில் இந்த கேள்விகளிற்கான பதிலை தெரிந்துகொள்வீர்கள்.

அப்படியானால் பானு விசயம்?

ஆனந்தபுரத்தில் காட்டிக்கொடுத்ததாக பானு கைது செய்யப்பட்டு, புலிகளால் தண்டிக்கப்படுவது ஒரு சொட்டு உண்மையுமில்லாத வடிகட்டிய பொய். அதைப்பற்றியும் 'இறுதிப்போரில் நடந்தது என்ன?' தொடரில் விபரமாக குறிப்பிடப்படும்.

சரி, இனி கடாபி தொடர்பான விசயத்திற்கு வருவோம்.

இறுதியுத்த சமயத்தில் விடுதலைப் புலிகள் அமைப்பிற்குள் கடாபியின் பாத்திரம், ஆனந்தபுரம் BOX எப்ப்டி உருவானது, அதனுள் . என்ன நடந்தது, தளபதிகளின் இறுதி நிமிடங்கள் பற்றியெல்லாம் குறிப்பிட்டிருந்தோம். ஆனந்தபுரத்தில் நிலைகொண்டிருந்த புலிகளின் அணிகளை BOXஅடித்தபோது இராணுவம் நினைத்தது அதற்குள் பிரபாகரனும் சிக்கியிருக்கிறார் என. பிரபாகரன், புலிகளின் தளபதிகள் அனைவரும், சண்டைப்படையணிகள் என புலிகளின் உயிர்நாடியே அதற்குள் சிக்கியதாகவே இராணுவம் நினைத்தது. ஆனந்தபுரத்திற்குள் சிக்கியவர்களின் கதையை முடித்தால், ஈழப்போர் அத்துடன் முடிந்துவிடும் என்று நினைத்தார்கள்.

இராணுவத்தின் கணக்கு ஒரு விதத்தில் சரியானதுதான். புலிகளின் அனுபவம் வாய்ந்த சண்டைப் படையணிகள் அனைத்தும் ஆனந்தபுரத்திற்குள் சிக்கியிருந்தன. அவை அழிக்கப்பட்டால் புலிகளால் தொடர்ந்து போரிட முடியாது. இராணுவம் நினைத்தபடிதான் பிறகு நடந்தது. ஆனந்தபுரத்திற்குள் பெருமளவு படையணிகள் அழிந்துவிட, மாத்தளன், வலைஞர்மடம், பொக்கணை, முள்ளிவாய்க்காலை உள்ளடக்கிய பகுதியின் இயற்கை சாதகத்தையும் புலிகளால் பயன்படுத்த முடியாமல் போய்விட்டது.

ஆளணி பற்றாக்குறையை சமாளிக்க கட்டாய ஆட்சேர்ப்பையும் வரைமுறையின்றி செயற்படுத்த, புலிகளுடன் இருந்த மக்களில் ஒரு பகுதியினர்- இன்றும் விமர்சனம் வைத்திருக்கும் சூழ்நிலையும் இதனால் உருவானது.

ஆனந்தபுரத்தில் புலிகள் விடாப்பிடியாக நிலைகொண்டிருந்தது இராணுவரீதியில் நல்ல முடிவா என்ற கேள்வி இப்பொழுது எழுகிறது. இதில் இராணுவ, தந்திரோபாய நகர்வுகளிற்கு அப்பால் விடாப்பிடியான கொள்கைசார் நிலைப்பாடும் பெருமளவில் செல்வாக்கு செலுத்தியது. ஆனந்தபுரத்தில் புலிகள் ஏன் தங்கியிருக்க முடிவெடுத்தார்கள் என்பதை முழுமையாக புரிந்துகொள்வதென்றால், அந்த சமயத்தில் பிரபாகரன் எடுத்த முடிவுகள், அவரது செயற்பாடுகளை தெரிந்துகொள்ள வேண்டும். யுத்தம் முடிவை நோக்கி சென்றுகொண்டிருப்பதை நன்றாக தெரிந்த பின்னர், தந்திரோபாயத்தைவிட,

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

காவியத்தனத்தை பிரபாகரன் விரும்பியதை புரிந்துகொள்ள முடியும். ஆனந்தபுர BOX சமயத்தில் பிரபாகரனுடன் தொடர்புடைய விசயங்களை 'இறுதிப்போரில் நடந்தது என்ன?' தொடரில் விரைவில் வெளியிடுவோம். அப்பொழுது வாசகர்கள் அதை முழுமையாக தெரிந்து கொள்ளலாம்.

ஆனந்தபுரத்தில் புலிகள் நிலைகொள்ள முடிவெடுத்தபோது, BOX இற்குள் சிக்க நேரிடும் என உண்மையில் நினைத்திருக்கவில்லை. பச்சைப்புல்மோட்டையால் பின்னணி வழங்கல் கிடைத்தபடியிருக்கும், வடக்கு, தெற்கு, மேற்கு முனைகளில் மூன்று முனையில் இராணுவத்துடன் போரிட வேண்டியிருக்கும் என்றுதான் நினைத்தார்கள். இராணுவத்தின் முற்றுகைக்குள் சிக்குவோம் என தெரிந்திருந்தால் புலிகள் ஆனந்தபுரத்தில் நிலைகொள்ளும் முடிவை எடுத்திருப்பார்களா என்பது சந்தேகம்தான்.

இராணுவம் பச்சைப்புல்மோட்டையை கைப்பற்றியது அதாவது புலிகளின் தரைவழி தொடர்பை துண்டித்தது பெரும் மோதலை செய்தல்ல. நந்திக்கடல் நீரேரிக்கரையாக ஏப்ரல் 31ம் திகதி இரகசிய நகர்வொன்றை செய்த படையினர் புலிகளை ஆனந்தபுரத்திற்குள் முற்றுகையிட்டு BOX அடித்தனர். இதன்பின்னரே அந்த பகுதி மீது அகோர தாக்குதல் நடத்தினார்கள்.


தொடர்ந்து BOX இற்குள் நிலைகொள்ள முடியாத நிலைமையேற்பட, அங்கிருந்து வெளியேற வேண்டிய நெருக்கடிக்கு புலிகள் உள்ளாகினர். தொடர்ந்து BOX இற்குள் அணிகளை வைத்திருக்க முடியாதென்றதும், BOX இற்கு வெளியில் இருந்து, முற்றுகை படையினர் மீது புலிகள் தாக்குதல் நடத்தினார்கள். பொட்டம்மான்தான் இந்த தாக்குதல்களை ஒருங்கிணைத்தார். எனினும், முற்றுகையை உடைக்க முடியவில்லை.

இதன்பின்னரே அங்கிருந்த அணிகள், தாங்கள் நிலைகொண்டிருந்த பகுதிகளிற்குள்ளால் பல முனைகளில் உடைத்துக்கொண்டு வெளியேறுவதென முடிவானது. எதுவுமே செய்ய முடியாத சூழலில் புலிகள் எடுத்த முடிவது. கிட்டத்தட்ட ஒவ்வொரு அடி தூரத்திலும் ஒவ்வொரு செல், ஒரு நிமிடத்திற்கும் குறைவான அவகாசத்திற்குள் விழுந்து வெடித்துக் கொண்டிருந்த நிலைமையில், அணிகளை ஒருங்கிணைத்து, உடைப்பை செய்ய புலிகளிற்கு வழியிருக்கவில்லை. ஏற்கனவே அப்படியான முயற்சிகளை செய்து பார்த்துமிருந்தார்கள். ஒரு முனையில் உடைப்பை செய்ய முயன்றால், இராணுவம் அந்த பகுதியில் முழு பலத்தையும் ஒருங்கிணைத்து, தாக்குதலை முறியடித்தது. இதனால்தான் ஒவ்வொரு அணியும் தமக்கு பொருத்தமான பக்கத்தில் உடைப்பை செய்வது என முடிவெடுத்தார்கள்.

இது வாழ்வா சாவா கட்டம். BOX இற்குள் தங்கிருக்க முடிவெடுத்தால், அடுத்தடுத்த நாளில் அனைவரும் உயிரிழக்க வேண்டி வரும். அதைவிட, உடைக்க முயற்சி செய்வது, உடைத்துக் கொண்டு வெளியில் வருபவர்கள், வந்து சேர்வதென முடிவெடுக்கப்பட்டது. யாரையும் யாரும் பார்க்க முடியாது, BOX ஐ உடைத்தவர்கள் வெளியில் வந்து விடலாம் என்பதுதான் முடிவு. விடுதலைப்புலிகளை பொறுத்தவரை இது பயங்கர நெருக்கடியான நிலைமை. இப்படியான முடிவுகளை அவர்கள் ஒருபோதும் எடுத்ததில்லை. சக போராளிகளை, தளபதிகளை அவர்கள் எவ்வளவு பெரியவர்களாக இருந்தாலும், விட்டுவிட்டு தப்பிக்க முடியுமானவர்கள் தப்பியுங்கள் என புலிகளின் வரலாற்றில் முதல்முறையாக எடுக்கப்பட்ட முடிவு அது. ஏனெனில், அவ்வளவு அகோரமாக தாக்குதல் அங்கு நடத்தப்பட்டது.

கடாபியின் அணி நிலைகொண்டிருந்தது மந்துவில் பகுதியில். இப்போது போர் வெற்றி நினைவுச்சின்னம் அமைக்கப்பட்டுள்ள பகுதிக்கு அப்பாலான பகுதி. மந்துவில் குளத்திற்கு அண்மையான பகுதி. அந்த பகுதியுடன் பரிச்சயமானவர்கள், நாம் குறிப்பிடும் லொக்கேஷனை புரிந்துகொள்ள முடியும்.






கடாபியின் அணிகளும் அந்த பகுதியில் ஏப்ரல் 04ம் திகதி அதிகாலையில் உடைப்பு தாக்குதலை நடத்தினார்கள். அந்த அணி பெரும்பாலும் அழியும் நிலைமைக்குள்ளானபோது, இராணுவத்தின் முற்றுகையை உடைத்தார்கள். சமநேரத்தில் பல முனைகளில் புலிகள் உடைப்பு தாக்குதலை நடத்தியதில், உண்மையில் இராணுவம் திண்டாடிவிட்டது. அது இராணுவத்திற்கு சாதகமான களம்தான். ஆனால் சாவு உறுதியான நிலைமையில் வாழ்வா சாவா கட்டத்தில்புலிகள் நடத்திய தாக்குதலில் இராணுவத்தின் முன்னரண்கள் பல இரண்டு மூன்று முனைகளில் உடைக்கப்பட்டது. ஆனால் அந்த உடைப்பை செய்வதற்குள் புலிகளின் அணிகள் பெரும்பாலும் அழிவடைந்து விட்டன. மிகச்சிலர்தான் காயமின்றி ஆனந்தபுரத்திற்குள் இருந்து மீண்டார்கள். காயம், காயமின்றி சில பத்து போராளிகள்தான் ஆனந்தபுரத்திற்குள் இருந்து வெளியேறினார்கள்.

கடாபியின் அணியும், மந்துவிலிற்கு அண்மையில் இராணுவத்தின் முன்னரணை உடைத்து விட்டது, அப்படியானால் கடாபிக்கு என்ன நடந்தது?

நாம் முன்னர் குறிப்பிட்டதுபோல, முன்னரணை உடைக்க முயன்ற அணிகள் எல்லாம் பெரும் அழிவை சந்தித்தன. கடாபியின் அணியும் அதற்கு விதிவிலக்கல்ல. கடாபியின் அணியின் முனையில் ஓரிரண்டு பேர்தான் எஞ்சினார்கள். அவர்கள் முன்னரணை உடைத்தபடியே BOX ஐ விட்டு வெளியேறி விட்டனர். பின்னணி பகுதியில் கடாபியுடன் ஒரேயொரு போராளி மட்டுமே இருந்தார். கடாபியை தூக்கி செல்ல தயாராக இருந்த மற்றைய போராளிகளும் மரணமடைந்து விட்டனர்.

அது அதிகாலை நேரம். மெல்லிய இருட்டாக இருந்தது.

கடாபியை தோளில் தூக்கி வைத்தபடி அந்த ஒரு போராளி மெல்ல மெல்ல நடந்து கொண்டிருந்தார். சாதாரணமாகவே ஒருவரை தூக்கிச் செல்வது சிரமமானது. இராணுவ வலயத்திற்குள், இராணுவம் எங்கு நிற்கிறதென தெரியாத நிலைமையில், சத்தமின்றி, ஆயுதங்களுடன் ஒருவரை தூக்கிச்செல்வது என்பது எவ்வளவு சிரமமானது என்பதை புரிந்துகொள்ளலாம்.

அதேநேரம் இன்னொன்றையும் சொல்ல வேண்டும். இராணுவத்தின் முன்னரணை உடைத்ததென்பதன் அர்த்தம் அதை புலிகளின் அணிகள் முழுமையாக கைப்பற்றிவிட்டன என்ற அர்த்தம் அல்ல. மிகச்சில போராளிகள் மட்டும் உயிர்தப்பி அந்த பகுதியை கடந்தார்கள். இராணுவம் மீண்டும் ந்த பகுதிக்கு வந்திருக்கவும் வாய்ப்புண்டு.

கடாபியை தூக்கி வந்த போராளி, முன்னரணை கடக்கும்போது கடாபியுடன் கடக்கவில்லை. ஏன் தனியாக வந்தார்?

அந்த போராளி புலிகளிடம் வந்து சேர்ந்த பின்னர், என்ன நடந்ததென விளக்கமளித்தார். அவர் சொன்னதை இங்கே தருகிறோம்.

கடாபியை அவர் தூக்கியபடி மந்துவில் குளத்திற்கு அருகாக வந்திருக்கிறார். குளக்கரையில் ஏதோ வித்தியாசமான சில சத்தங்கள் கேட்டதாம். என்ன ஏதென பார்க்க, அங்கிருந்த பற்றையோரமாக கடாபியை இறக்கி வைத்துவிட்டு, பார்த்துவர சென்றாராம். தன்னிடம் ஒரு கைக்குண்டை தந்துவிட்டு போகுமாறு கடாபி கேட்டாராம். இவரும் கொடுத்துவிட்டு போயிருக்கிறார். குளத்தடிக்கு வந்து அந்த பகுதியை அவதானிக்க, தனக்கு பின்னால் கடாபியை இறக்கி வைத்த பகுதிக்கு அண்மையாக சில சப்தங்களும், இராணுவத்தின் பேச்சு சத்தங்களும் கேட்டதாம். அடுத்தடுத்த விநாடியில் கடாபியை இறக்கி வைத்த பற்றை மறைவில் கைக்குண்டொன்று வெடித்ததாம். கடாபிதான் குண்டை வெடிக்க வைத்துள்ளார் என நினைத்த அந்த போராளி, புலிகளின் பகுதிக்கு வந்து சேர்ந்து விட்டாராம்!

அவரது வாக்குமூலத்தின் அடிப்படை சம்பவம் உண்மையாக இருக்கலாம். சில பகுதிகள் 'கற்பனை' ஆகவும் இருக்கலாம். அதற்காக சம்பவமே கற்பனையாக இருக்க வாய்ப்பில்லை.

சரி, இதில் எது கற்பனையாக இருக்கலாம்?

1.குளக்கரையில் சத்தங்கள் கேட்டது, அதை பார்ப்பதற்காக கடாபியை பற்றைக்கரையில் வைத்துவிட்டு வந்தேன் என்பது. உண்மையில் சத்தம் கேட்டிருக்கவும் வாய்ப்பிருக்கிறது. ஆனால், கடாபியை தூக்கிச்செல்ல முடியாமல் வைத்துவிட்டு வருவதற்கும் ஒரு காரணத்தை தேடியிருக்கலாம். அதற்காக குளக்கரையில் சத்தம் கேட்டதாக ஒரு கதையை உருவாக்கியிருக்கலாம்.

2.குளக்கரையில் அவதானித்துக் கொண்டிருந்தபோது, பின்னால் இராணுவம் கதைத்து சத்தம் கேட்டதாக கூறியதில் உண்மையிருக்க வாய்ப்புள்ளதை போல, கற்பனையாக இருக்கவும் வாய்ப்புள்ளது. கடாபியை பற்றை மறைவில் விட்டு விட்டு, குளக்கரைக்கு வந்து அவதானித்து விட்டு, திரும்பி சென்று அவரை தூக்கி வராததற்காக காரணமாக இந்த கதையை உருவாக்கியிருக்கலாம்.

மீண்டும் சொல்கிறோம் அந்த போராளியின் வாக்குமூலம் உண்மையா, பொய்யா என்பது தெரியாது. ஏனெனில், இரண்டிற்கும் வாய்ப்புள்ளது. பொய்யாக இருப்பதற்கான சாத்தியத்தை மட்டுமே மேலே குறிப்பிட்டோம்.

புலிகளும் அதை ஆராயவில்லை. ஏனெனில், ஆனந்தபுரம் BOX இற்குள் இருந்து தப்பிவருவதென்பதே மறுபிறப்புத்தான். தப்ப முடிந்தவர்கள், மற்றவர்களை பார்க்காமல் தப்பி வந்துவிடுங்கள் என்ற உத்தரவை கொடுத்ததே புலிகள்தானே!



# ஹாப்பி பீரியட்ஸ்

சென்ற இதழ் தொடர்ச்சி

**மூன்றாவது நிலை**

**பெரி மெனோபாஸ்**

மாதவிடாய் முழுமையாக நின்றுவிடுகிற நிலையின் பெயர் மெனோபாஸ். இந்த மெனோபாஸ் நிலையை அடைவதற்கு முந்தைய 4 முதல் 5 வருடங்களைத்தான் 'பெரி மெனோபாஸ்' என்போம். இந்த இரண்டு நிலைகளைப் பற்றிய சந்தேகங்களைத் தீர்க்கிறார், மகப்பேறு மருத்துவர் ஜெயஸ்ரீ கஜராஜ்.

**பெரி மெனோபாஸைக் கண்டறியப் பரிசோதனைகள் இருக்கின்றனவா?**

பெரி மெனோபாஸ் கண்டறியப் பரிசோதனைகள் இல்லை. அதற்குப் பதில், பெரி மெனோபாஸைத் தவிர்த்து, பீரியட்ஸ் விட்டுவிட்டு வருவதற்கு மற்றக் காரணங்களான தைரோய்ட், ஹீமோகுளோபின் குறைபாடு, கருப்பையில் நார்க் கட்டிகள், எண்டோமெட்ரியல் பொலிப்ஸ் போன்றவற்றுக்கானப் பரிசோதனைகளைச் செய்து பார்க்கலாம். இந்தப் பரிசோதனைகளின் ரிசல்ட் நோர்மல் என்றால், நீங்கள் பெரி மெனோபாஸ் ஸ்டேஜில் இருக்கிறீர்கள் என்று அர்த்தம்.



**பெரி மெனோபாஸ் நேரத்தில் உடம்பிலும் மனதிலும் என்னென்ன மாற்றங்கள் நிகழும்?**

- மாதவிடாய் 2 முதல் 4 மாதங்களுக்கு ஒரு முறைதான் ஏற்படும். இந்தக் கணக்கு நபருக்கு நபர் மாறுபடும்.
- பீரியட்ஸாகும் நாள்கள் கூடும் அல்லது குறையும். அதேபோல, வெளியேறும் ரத்தத்தின் அளவும் அதிகமாகும் அல்லது குறையும்.
- கருமுட்டையின் உற்பத்தியும், ஹார்மோன் சுரப்பும் குறையும்.
- இரவில் ஏ.சி அறையில் படுத்திருந்தாலும்கூட திடீரென உடல் வியர்க்க ஆரம்பிக்கும்.
- காரணமே இல்லாமல் அழுகை, கோபம், வருத்தம் என்று அவதிப்படுவார்கள்.


**பெரி மெனோபாஸுக்குச் சிகிச்சைகள் இருக்கின்றனவா?**

ஈவினிங் பிரிம் ரோஸ் ஓயில் கப்சூலை தினமும் இரவு உணவுக்குப் பிறகு ஒன்று எடுத்துக்கொள்ளலாம். பக்க விளைவுகள் ஏற்படாது. இதைத் தவிர, வாழ்க்கை முறையிலும் சில மாற்றங்களைச் செய்ய வேண்டும். ஸ்ட்ரெஸ்ஸைத் தவிர்க்க வேண்டும். வாய்விட்டுச் சிரிக்க மறக்காதீர்கள், டீ, கோப்பியைக் குறையுங்கள். காரமும் மசாலாவும் அதிகமான உணவுகள் மற்றும் ஜங்க் உணவுகளைத் தவிருங்கள்.

**நான்காவது நிலை**

**மெனோபாஸ்**

உலகளவில் பெண்களுக்கான மெனோபாஸ் வயது 50.8. ஆனால், இந்தியாவைப் பொறுத்தவரை 46 அல்லது 47 வயதிலேயே மெனோபாஸ் ஏற்பட்டுவிடுவதாகச் சொல்கின்றன புள்ளிவிவரங்கள். ஒரு பெண்ணின் மாதவிடாய் சுழற்சி முற்றுப்பெற்றுவிடும் நிலையைத்தான் மெனோபாஸ் என்கிறோம். தொடர்ந்து 12 மாதங்களுக்கு பீரியட்ஸ் வராமல் இருந்தால், அதை மெனோபாஸ் நிலையை அடைந்துவிட்டதாக உறுதிப்படுத்திக்கொள்ளலாம். ஐந்தாறு மாதங்களுக்கு ஒருமுறை பீரியட்ஸ்



வருவதை, மெனோபாஸ் என்று எடுத்துக்கொள்ளக் கூடாது.

**மெனோபாஸ் அறிகுறிகள்**

உடம்பு திடீரென்று சூடாகிவிடும். சில நேரங்களில் சில்லென்றும் ஆகும். பிறப்புறுப்பு வறண்டுபோகும். இதனால் தாம்பத்ய உறவுகொள்ளும்போது வலி, சில நேரங்களில் லேசான ரத்தப்போக்குகூட ஏற்படலாம். உடல் பருமனாகும். தலைமுடி கொட்ட ஆரம்பிக்கும். மன அழுத்தம் ஏற்படும்.

**தீர்வுகள்**

மெனோபாஸ் காலத்தில் பருத்தி உடைகளை அணியலாம். உறவுக்கு முன்னால் பிறப்புறுப்பில் வஜைனல் க்ரீம் தடவிக்கொள்ளலாம். யூரினரி இன்ஃபெக்ஷன் ஏற்படும்போது ஈஸ்ட்ரோஜென் க்ரீமை உபயோகிக்கலாம். நடைப்பயிற்சி, உடற்பயிற்சி செய்து உடல் எடையைக் கட்டுக்குள் வைக்க வேண்டும். சரிவிகித உணவு எடுத்துக்கொண்டால்முடி கொட்டுவது கட்டுப்பாட்டில் இருக்கும். மன அழுத்தத்துக்கு யோகா செய்வது, இசை கேட்பது மாதிரியான விஷயங்களைப் பின்பற்றலாம். ஈவினிங் பிரிம் ரோஸ் ஓயில் கப்சூலை மெனோபாஸுக்குப் பிறகும் தினம் ஒன்று என இரவு உணவுக்குப் பிறகு சாப்பிடலாம். இந்த மாத்திரையைச் சாப்பிட்ட சில நாள்களுக்குள் வித்தியாசம் தெரியாது என்பதால், மருத்துவர் பரிந்துரைக்கிற காலம்வரை தொடர்ச்சியாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

**இவையெல்லாம் ஆபத்தான அறிகுறிகள்**

- பெரி மெனோபாஸ் பருவத்தில் தொடர்ந்து 15 நாள்கள், 20 நாள்கள் என்று அதிக ரத்தப்போக்கு இருந்தால் உடனே மருத்துவரிடம் செல்லவும்.
- இரண்டு மாதவிடாய்க்கான இடைவேளை நாள்களில் அவ்வப்போது ரத்தப்போக்கு இருந்தால், அது ஆரோக்கியமான விஷயம் கிடையாது.
- தாம்பத்ய உறவுக்குப் பிறகு



ரத்தக்கசிவு இருந்தால், அது உடனே கவனிக்கப்பட வேண்டிய விஷயம்.
- கருப்பையில் பாலிப்ஸ் என்கிற சிறு சிறு கட்டிகள் அல்லது கான்சர் இருந்தால்தான், இப்படிப்பட்ட திடீர் ரத்தப்போக்கு ஏற்படும் என்பதால், மேலே சொன்ன மூன்று அறிகுறிகளையும் அலட்சியப் படுத்தாமல் மருத்துவரிடம் செல்ல வேண்டியது அவசியம்.

மாதவிடாய் நாள்கள் குறித்துப்


தொடர்ச்சி அடுத்தபக்கம்...

பெண்களுக்குஏற்படும்சில அடிப்படை சந்தேகங்களுக்கு விளக்கமளிக்கிறார், மகப்பேறு மற்றும் பெண்கள்நல மருத்துவர் ஆனந்தப்பிரியா.

**உடற்பயிற்சி செய்யலாமா?**

மாதவிடாய் நாள்களின்போதுக் கடுமையான உடற்பயிற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. அந்நாள்களில் ஹார்மோன்களின் சுரப்பினால் உடலில் ஏற்படும் சில மாறுபாடுகள் காரணமாக நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக இருக்கும். வயிறு மற்றும் உடல் வலி இருக்கும். மனமும் உடலும் சோர்ந்து காணப்படும்.

மேலும், அந்த நேரத்தில் உடற்பயிற்சி செய்யும்போது, சில குறிப்பிட்ட நிலைகளில் செய்தால் சிலருக்கு ரத்தப்




போக்கு அதிகமாகலாம். குறிப்பாக வயதானவர்களும், கர்ப்பப்பை பலவீனமாக இருப்பவர்களும் இந்த நாள்களில் உடற்பயிற்சி செய்தால், ரத்தப்போக்கு அதிகரிக்க வாய்ப்பு உண்டு. அப்படி அவசியம் உடற்பயிற்சிகள் செய்ய வேண்டும் என நினைப்பவர்கள் மெதுவான நடைப்பயிற்சி, ஏரோபிக்ஸ் பயிற்சிகள் போன்றவற்றைச் செய்யலாம்.

**யோகாசனம் செய்யலாமா?**

வழக்கமாக யோகாசனம் செய்யும் பழக்கம் உள்ள பெண்கள், மாதவிடாய் நாள்களில் பத்மாசனம் போன்று தரையில் அமர்ந்து செய்யக்கூடிய எளிய வகை ஆசனங்களைச் செய்யலாம். கர்ப்பப்பைக்குச் செல்லும் ரத்த ஓட்டம் மாறுபடும் என்பதால் தலைகீழாக நிற்கும் யோகாசனங்களைத் தவிர்க்கவும். ஓய்வு தேவைப்படும் மாதவிடாய் நாள்களில், உடலுக்குச் சிரமம் தர வேண்டாம் என்பதுதான் மருத்துவர்களின் கருத்து. அதைத் தாண்டி அவரவர் மனம் மற்றும் உடல்நிலைக்கு ஏற்ற எளிய வகைப் பயிற்சிகளைச் செய்துகொள்ளலாம்.


**தாம்பத்யம் வைத்துக்கொள்வது சரியா?**

மாதவிடாய் நாள்களில் கர்ப்பப்பையின் உட்சுவர் சிறிது பலவீனமாக இருக்கும்; அடிவயிற்றில் லேசான வலி இருந்துகொண்டே இருக்கும்; உதிரப்போக்கால் உடல் சோர்வடைந்திருக்கும். இந்நேரத்தில் பெரும்பாலான பெண்கள் தாம்பத்யத்தை விரும்புவதில்லை. மேலும், உதிரப்போக்கு இருக்கும் இந்நாள்களில் உறவுகொள்ளும்போது, தொற்று நோய்க்கு வாய்ப்புகள் அதிகமாகும். சில பெண்களுக்கு, இது அடுத்தடுத்த மாதவிடாய் சுழற்சியில் ரத்தபோக்கு, வலி, எரிச்சல், கர்ப்பப்பையில் கட்டி போன்றவற்றை ஏற்படுத்தலாம். எனவே, அந்த நாள்களில் உறவைத் தவிர்ப்பதே நல்லது.



**மேற்கொள்ள வேண்டிய சுகாதார நடவடிக்கைகள்**

- பொதுவாக மாதவிடாய் நாள்களில் வழக்கத்தைவிட உடல் சற்று சூடாக இருக்கும். எனவே காலை, மாலை என இரண்டு வேளைகள் குளிக்கலாம்.
- மாதவிடாய் காலத் தாம்பத்யத்துக்குப் பிறகு பிறப்புறுப்பை வெந்நீரால் சுத்தம் செய்வது அவசியம்.
- நாப்கின் பயன்படுத்துகிறீர்கள் எனில் நான்கு மணிநேரத்துக்கு ஒரு முறை நாப்கின் மாற்றுவது அவசியம்.
- மென்ச்சுரல் கப் பயன்படுத்துபவர்கள் அதை வெந்நீரில் அலசிக் காயவைத்துப் பின்னர் பயன்படுத்த வேண்டும்.
- ஒவ்வொரு முறை சிறுநீர் கழிக்கும் போதும் பிறப்புறுப்பைச் சுத்தமாகக் கழுவுவது அவசியம்.




**மாதவிடாயின்போது பெண்களுக்கு ஏற்படும் துர்நாற்றம் இயல்பானதா?**

மாதவிடாய் காலத்தில் ஏற்படும் உடல் தொற்றினால் சில நேரங்களில் துர்நாற்றம் ஏற்படலாம். அல்லது, நாப்கினில் சேர்க்கப்படும் நறுமணப் பொருள்களுடன் மாதவிடாய் உதிரம் வினைபுரிந்து ஏற்படும் ரசாயன மாற்றம், ஒருவித ஒவ்வாத மணத்தை உண்டாக்கலாம். அது பற்றிப் பயப்பட வேண்டாம்.

மாதவிடாய் நாள்களில் படுத்தும் வயிற்றுவலி, இடுப்பு வலி மற்றும் இன்னபிற இம்சைகளுக்கு இயற்கையான முறையில் தீர்வுகள் சொல்கிறார் சித்த மருத்துவர் கு.சிவராமன்.

**சூதகவலி**

வயிற்றைச் சுருட்டிக்கொண்டுப் படுத்திருப்பதோ அல்லது கைகளை வயிற்றில் அழுத்திக்கொண்டுப் படுத்திருப்பதோ அல்லது இயல்பான நிலையில் இல்லாமல் இருப்பதோ மாதவிடாய் நாள்களில் நிறைய பேருக்கு ஏற்படும். இந்த நிலையை ஆங்கிலத்தில் 'டிஸ்மெனோரியா' (Dysmenorrhea) என்றும், தமிழில் 'சூதகவலி' என்றும் குறிப்பிடுவார்கள்.



**காரணங்கள்**

இரும்புச்சத்து குறைவாக இருப்பதாலோ, நீர்க்கட்டிகளின் எண்ணிக்கை அதிகரிப்பதாலோ, கருப்பையினுள்ளே இருக்கும் படலத்தின் ரத்த அழுத்தம் குறைவாகவோ அல்லது அதிகமாகவோ இருந்தாலோ இப்படியான வலிகள் ஏற்படக்கூடும்.

**தீர்வுகள்**

- உணவில் தோலோடு கறுப்பு உளுந்தை அதிகளவில் எடுத்துக் கொள்ள வேண்டும்.
- அரிசி ஒரு பங்கும், உளுந்து இரு பங்கும் சேர்த்து மூன்று மடங்கு நீரில் குழைவாக வேகவிட்டு உளுந்தங்கஞ்சியாகப் பருகலாம்.
- ஒரு டீஸ்பூன் கருஞ்சீரகத்தை, ஒரு டம்ளர் நீரில் கொதிக்கவைத்து அதனுடன் தேன் கலந்து குடிக்கலாம். இது கர்ப்பப்பையிலிருக்கும் அழுக்குகளை நீக்கும்.
- பெரும்பங்கு உளுந்தமாவும், குறைந்த அளவு அரிசி மாவும் எடுத்துக்கொள்ள வேண்டும். பின்னர், பனங்கருப்பட்டிப் பாகைக் காய்ச்சி அதனுடன் உளுந்த மாவு, அரிசி மாவு கலவையைச் சேர்க்க வேண்டும். இம்மூன்றையும் சிறிதளவு நல்லெண்ணெய் சேர்த்துக் கிளறி உளுந்தங்களியாக்கிச் சாப்பிடலாம்.
- மாதவிடாய் தொடங்குவதற்கு ஐந்து, ஆறு நாள்களுக்கு முன்னரே உளுந்தங்கஞ்சியையோ அல்லது உளுந்தங்களியையோ உண்ணத் தொடங்கிவிட வேண்டும்.
- முதன்முறையாகப் பூப்பெய்தியுள்ள குழந்தைகளுக்குக் கட்டாயமாக உளுந்தங்களி, உளுந்தங்கஞ்சி கொடுக்க வேண்டும். ஏனெனில், கருப்பையில் இருக்கும் சுவர்களை வலுப்படுத்துவதற்கு உளுந்து உதவியாக இருக்கும்.
- சிலருக்கு ரத்தப்போக்கு சரிவர இல்லாமல் இருக்கும். ஆனால், அதிகளவு வயிற்றுவலி ஏற்படும். அவர்களுக்கு எள் ஏற்றது. பொதுவாக, இரும்புச்சத்தை அதிகரிப்பதற்கு எள் சாப்பிடலாம்.

**வயிற்றுவலிக்கு உடனடித் தீர்வு**

வெந்தயத்தைப் பவுடராக்கியோ அல்லது சிறிதளவு மென்று சாப்பிட்டாலோ உடனடியாக வயிற்றுவலியில் இருந்து விடுபட முடியும். பெருஞ்சீரகத்தைச் சிறிதளவு தண்ணீருடன் காய்ச்ச வேண்டும். இந்தச் சோம்புக் கஷாயம் வயிற்றுவலிக்கு உடனடித் தீர்வாக இருக்கும்.

**அதீத ரத்தப்போக்கிற்கு**


வாழைப்பூ பொரியல் அல்லது வாழைப்பூ சாறு எடுத்துக் கொண்டால் அதீத ரத்தப்போக்கைக் குறைக்கலாம்.

**குளுக்கோஸ் மெட்டபாலிசம்**

சர்க்கரை நோயைக் குணப்படுத்தக்கூடிய ரசாயனங்கள் வெந்தயத்தில் உள்ளன. அதேபோன்று வெந்தயத்தில் நார்ச்சத்தும் இருக்கிறது. பிசிஓடிக்கும் சர்க்கரை மெட்டபாலிசத்திற்கும் சம்பந்தம் இருக்கிறது. ரத்தத்தில் இன்சுலினின் அளவு அதிகரிக்கும்போது தான் நீர்க்கட்டி உருவாகிறது. இதனால், பிசிஓடி உள்ளவர்கள் அதிக அளவில் வெந்தயத்தை எடுத்துக் கொள்வது நல்லது.

உடம்பில் எந்தெந்த செல்களுக்கு ஆற்றல் தேவைப்படுகிறதோ அந்தந்த செல்களுக்கு ரத்தச் சர்க்கரையைக் கடத்துவதற்குப் பயன்படும் மெட்டபாலிசத்தையே 'குளுக்கோஸ் மெட்டபாலிசம்' என்கிறோம்.

தீபம்
989/1, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு, நல்லூர்
தொடர்புகளிற்கு
ஆசிரியர்பீடம் : 0214927562 விநியோகம், விளம்பரம் : 0214927542, 0768255563
அலுவலகம் : 0214927561 கருத்துக்கள், முறைப்பாடுகள் : 0768255562
செய்திகள் அனுப்ப : deepamdesk@gmail.com




# கிட்டு விரித்த வலையில் சிக்கிய றோ!

கே.ராகோத்தமன்

விடுதலைப் புலிகள் அமைப்பில் மிக மூத்த உறுப்பினரும் பிரபாகரனுக்கு வலக்கரம் போல் செயல்பட்டுக் கொண்டிருந்தவரும், அன்றைய திகதியில் லண்டனில் உட்கார்ந்துகொண்டு, புலிகள் இயக்கம் ராஜிவைக் கொல்லவில்லை என்று அறிக்கை விட்டுக்கொண்டிருந்த வருமான கிட்டுவையா இவர் சொல்கிறார்?

'ஆம். சந்தேகமில்லை. கிட்டுதான் றோவின் உளவாளி. அவர் சொன்னால் சரியாகத்தான் இருக்கும்.' படிப்பறிவில்லாத ஒரு சாதாரண பொதுஜனம் கூடக் கேட்ட மாத்திரத்தில் சிரிக்கக் கூடிய இப்படியொரு பதிலைச் சொன்னவர், இந்தியாவின் உளவுத் துறைத் தலைவர்!


சி.சி.பி.ஏ. கூட்டத்தில் றோவின் தலைவர் இப்படிப் பேசினார் என்கிற செய்தியை சுப்பிரமணியம் சுவாமி எழுதிய ராஜிவ் படுகொலை குறித்த புத்தகத்தில் கண்டபோது அதிர்ந்து போனேன்.

இது நான் நேரடியாகப் பார்த்த சம்பவம் கிடையாது. சுவாமியின் புத்தகத்தில் வாசித்ததுதான்.

ஆனால், புலனாய்வுக்காகக் கொழும்பு சென்ற எஸ்.ஐ.டி. அதிகாரிகளைப் பணியாற்ற விடாமல் பாதியில் திரும்ப அழைத்தது இதே றோ தலைவர் பாஜ்பாய்தான்.

அது எனக்கு வெகு நன்றாகத் தெரியும். கிட்டு ஒரு திட்டம் போட்டு, அது மிகத் துல்லியமாக பலித்திருக்கிறது என்பதுதான் இதன் பொருள்.

அதாவது தான் சொல்கிற எதுவானாலும் அதை இந்திய உளவுத்துறைத் தலைவர் அப்படியே நம்பி ஏற்றுக்கொள்ளும் அளவுக்கு அவர் 'தயார் செய்து' வைத்திருக்கிறார்



என்பதுதானே இதன் அர்த்தம்?

கிட்டுவைத் தன் உளவாளி என்று பாஜ்பாய் சொன்னதில் இருந்த குழந்தைத்தனம் அவருக்கே ஒரு சில தினங்களில் வெட்கம் உண்டாக்கியிருக்கும்.

ஏனெனில், ஹரி பாபுவின் புகைப் படங்களை வைத்துக்கொண்டு நாங்கள் ஹரி பாபுவின் வீடு, சுபா சுந்தரம், பாக்கியநாதன் என்று நகரத் தொடங்கியபோதே இது கண்டிப்பாக விடுதலைப் புலிகளின் வேலைதான் என்பதை அறிந்துவிட்டோம்.

இறுதியில் சிவராசனின் தற்கொலை வரை நீண்ட மிக நீண்ட தேடுதல் வேட்டை மற்றும் புலன் விசாரணைகளின் பலனாகக் கிடைத்த ஆதாரங்களை அடுக்கியபோது, இந்திய உளவுத்துறையின் லட்சணம் என்ன என்பது வெட்டவெளிச்சமாகிப் போனது.

இதில் வேதனைக்குரிய விஷயம் என்னவென்றால், அந்த 22ம் திகதி அவசரக் கூட்டம் நடந்து முடிந்ததற்கு ஒருவாரம் கழித்து, அதாவது மே 30ம் திகதியன்று அதே சி.சி.பி.ஏவின் இன்னொரு கூட்டம் பிரதமர் அலுவலகத்தில் நடந்தது.

இடைப்பட்ட நாள்களுக்குள்ளாகவே சி.பி.ஐக்கு விடுதலைப் புலிகள் மீது சந்தேகம் எழுந்து, சிறப்புப் புலனாய்வுக் குழுவின் தலைவர் கார்த்திகேயன், சிபிஐயின் இயக்குநர் ராஜா விஜய் கரன், இன்னும் ஒரு சில உயரதிகாரிகள், ஆதாரம் சேகரிக்க கொழும்பு புறப்பட்டுச் சென்றிருந்தார்கள்.

அவர்கள் கொழும்பு புறப்பட்டுச் சென்றதில் றோ தலைவருக்குக் கடும் கோபம். 'சிறப்புப் புலனாய்வுக் குழு அவசரப்பட்டு, ஒரு முன் தீர்மானத்துக்கு வந்து, விடுதலைப் புலிகள்தாம் காரணம் என்று முடிவு செய்துகொண்டு விசாரணையைத் தொடங்கியிருக்கிறார்கள். புலனாய்வு நிச்சயம் சரியாக நடக்க வாய்ப்பில்லை' என்று அந்தக் கூட்டத்தில் அவர் பேசியிருக்கிறார்.

அதன் தொடர்ச்சியாக, பிரதமர் அலுவலகத்திலிருந்து சி.பி.ஐக்கு ஓர் அவசரத் தகவல் வந்தது. உடனே கொழும்பு சென்ற சிறப்புப் புலனாய்வுக் குழுத் தலைவரும் சிபிஐ இயக்குநரும் டெல்லி திரும்ப வேண்டும் என்பதே அது. இதைப் பார்த்து நாங்கள் அதிர்ச்சியடைந்தோம்.

சிறப்புப் புலனாய்வுக் குழுவின் பணிகளுக்குமுட்டுக்கட்டைபோடுவது தான் றோவின் பணியா? என்ன நடக்கிறது நமது உளவுத்துறையில்? ஒன்றும் புரியவில்லை.

இந்தியாவின் வெளிவிவகாரங்கள் தொடர்பான அனைத்து விஷயங்களையும் தீர்மானிப்பது றோ தான். குறிப்பாக, ராஜிவ் காந்தி பிரதமராக இருந்த சமயம் இந்திய இலங்கை ஒப்பந்தத்தை வடிவமைத்ததிலும் அதனைச் செயல்படுத்த வலியுறுத்தி, அதற்கான அனைத்து ஏற்பாடுகளைச் செய்ததும் அவர்கள்தாம்.

தொடக்கத்திலிருந்தே விடுதலைப் புலிகளைக் குறைத்து மதிப்பிட்டு வந்த அமைப்பு றோ.


குறிப்பாக அதன் தலைவர் பாஜ்பாய். இந்திய அமைதிப்படை இலங்கையில் விடுதலைப் புலிகளுடன் யுத்தம் புரியவேண்டிய அவசியம் ஏற்பட்டபோது, 'அது Boys Army தான் சார்! எழுபத்திரண்டு மணிநேரம் போதும். மொத்தமாகத் தீர்த்துவிடலாம்' என்று சொன்னவர்தான் அவர்.

ஆனால் நடந்தது என்னவென்று அனைவருக்கும் தெரியும். எழுபத்திரண்டு மணி நேரமல்ல. 720 நாள்கள் போராடியும் தோற்றுத்தான் திரும்ப வேண்டியிருந்தது.

இதனால் நமக்கு எத்தனை இழப்பு, அவமானம், கஷ்டங்கள், கெட்ட பெயர்!

ஓர் உளவு அமைப்பு பொறுப்பாக இயங்கவில்லையென்றால் நாட்டை ஆள்பவர்களுக்கு எப்படிப்பட்ட பேரபாயங்கள் எல்லாம் வரும் என்பதற்கு, ஐ.பி.கே.எஃப் நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக நடந்த ராஜிவ் காந்தி படுகொலை வரை நீண்ட சம்பவங்கள் சிறந்த உதாரணம்.

கொலையைச் செய்தது விடுதலைப் புலிகள் அல்ல என்ற றோ தலைவரின்



தடாலடிக் கணிப்புடன் ஒப்பிட்டால், ஐ.பி. தலைவர் எம்.கே. நாராயணன், 'விசாரித்துக்கொண்டிருக்கிறோம். விரைவில் சொல்லிவிடுகிறேன்' என்று நழுவியதே தேவலாம் என்று தோன்றிவிடும்.

இந்த இரண்டு அமைப்புகளாலும் இந்த விஷயத்தில் இறுதிவரை சரியான தகவல்களைத் தர முடியவில்லை என்பதுதான் இங்கே குறிப்பிடவேண்டியது.

24.5.91 அன்றே ஹரி பாபுவின் படங்கள் எங்களுக்குக் கிடைத்து, நாங்கள் விடுதலைப் புலிகளை வட்டமிட்டுச் செயல்பட ஆரம்பித்துவிட்ட பிறகும் 30ம் திகதி அன்றுகூட றோவின் தலைவர் 'விடுதலைப் புலிகள் அல்ல' என்று அபத்தமாகச் சொல்லிக்கொண்டிருந்ததை இப்போது நினைத்தாலும் கஷ்டமாகத்தான் இருக்கிறது. (தொடரும்)

# அதிரியாட்டிக் கடல் தன் கைப்பட எழுதிய கவிதை


## கடலுக்கும் மலைத்தொடருக்கும் நடுவே

சாள்ஸ் ஜே போர்மன்

கிரவேஷியச் சுற்றுலாக் கையேடுகளைத் திறந்தால் அங்கே விபரிக்கப்படும் ஆயிரக்கணக்கான கி.மீற்றர்கள் நீளமான அழகான கடற்கரைகளும், அக்கரையோரங்களை அடுத்திருக்கும் ஆயிரக்கணக்கான அழகான தீவுகளும் அல்ல நான் கிரவேஷியாவுக்கு பயணம் செய்ய எண்ணியபோது அந்த நாட்டைப்பற்றி எனக்குள் இருந்த கற்பனை.

காரணம் 1990 களில் நடந்த பால்கன் போரும் அதனால் கிரவேஷியாவில் ஏற்பட்ட அழிவுகளை நான் அறிந்து கொண்டிருந்ததும் ஆகும். எனவே நான் எதிர்பார்த்திருந்த காட்சிகளும் கண்டு அனுபவித்தவையும் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாவை என்பதை நான் ஆரம்பத்திலேயே குறிப்பிட வேண்டும்.

வழக்கமாக ஒவ்வொரு கோடை விடுமுறைக்கும் எங்கே சுற்றுலா போவது என்ற திட்டம் அவ்வருட



புதிய தொடர்

ஆரம்பத்திலேயே போட்டுவிடுவேன். விமானப் பயணச்சீட்டுகள் கூட மூன்றாம் மாதத்தின் முன்பே வாங்கிக் கொண்டு உடனடியாக, சுற்றுலா செல்லவிருக்கும் நாட்டைப்பற்றி, மக்களைப் பற்றி, புவியியல், கலாச்சாரம் பற்றியெல்லாம் வாசித்துத் தெரிந்துகொள்ள ஆரம்பித்து விடுவேன். அவற்றை அறிந்து கொண்டிருக்கும் சமயத்திலேயே போகவிருக்கும் நாட்டின் எந்தெந்தப் பகுதிகளுக்குப்போய் என்னென்ன பார்க்க வேண்டும் என்ற எண்ணமும் பிறந்துவிடும்.

எங்கே போகலாம் என்ற யோசனையில் இருக்கும்போது யாரோ தாங்கள் கிரவேஷியாவுக்குப் போவதற்காக வாங்கிய விமானப் பயணச்சீட்டுக்களை, தங்களால் போக முடியாத நிலைமையில் இணையத்தளமொன்றில் மலிவு விலைக்கு விற்ற விளம்பரப்படுத்தியிருந்தது என் கண்களில் பட்டது. சுவீடனில் எனக்குத் தெரிந்த சிலர் கிரவேஷியாவுக்கு போய்விட்டு வந்து தங்களது பிரயாணத்தைப்பற்றி சிலாகித்துப் பேசியதும் ஞாபகத்தில் இருந்தது.

சுவீடிஷ்காரர்கள் கோடை விடுமுறைகளில் பெரும்பாலும் கடற்கரைக் குளியலுக்காகவே மட்டும் ஏதாவது நாடுகளுக்கு போவது வழக்கம். அங்கே குறிப்பிட்ட ஒரு நகரில் ஒரு உல்லாசவிடுதியில் தங்கி அருகேயுள்ள கரையிலுள்ள கடற்கரையில் ஒன்றோ, இரண்டோ வாரங்கள் சூரியக் குளியலும் இடையிடையே நீருக்குள் குளியலும் செய்தே தங்கள் விடுமுறையை முடித்துக் கொள்வார்கள். அந்த ஒரே காரணத்துக்காக மட்டும் நான் பயணங்கள் செய்வதில்லை என்பதால்




அவர்கள் “மிக அருமையான பிரயாணம்” என்று சொல்லும்போது அதை நான் பெரிதாக எடுப்பதில்லை.

ஆனாலும் போரினால் பெரிதும் சின்னாபின்னப்படுத்தப்பட்ட அந்த நாடு எப்படி மாறியிருக்கிறது, மக்களின் நிலைமை எப்படியிருக்கிறது என்று பார்க்கும் ஆர்வம் எனக்குள் இருந்ததால் அந்தப் பயணச்சீட்டுக்களை வாங்கி அவைகளில் எங்கள் பெயர்களை மாற்றிக்கொண்டு அந்தநாட்டைப் பற்றிய விபரங்களைத் தேட ஆரம்பித்தேன்.

நவீனகால சரித்திரத்தின்படி பார்த்தால் 1991 இல் சுதந்திரமடைந்த ஒரு இளம் நாடு கிரவேசியா என்று சொல்ல வேண்டும். பெற்றோலியத்தை ஒரு முக்கிய இயற்கை வளமாகக்கொண்ட கிரவேசியா பல தொழிற்சாலைகளையும் கொண்ட நாடாக யூகோஸ்லாவியா என்ற பெயரில் ஆறு நாடுகளை தன்னகத்தே கொண்டிருந்த நாட்டின் சுபீட்சமான பகுதிகளில் ஒன்று.

சமீப வருடங்களில் இந்த நாட்டின் முக்கிய ஒரு வருமானமாக சுற்றுலாத்துறையும் வளர்ந்து கொண்டிருக்கிறது. முக்கிய காரணம், கிரவேஷியாவின் சுமார் 1,800 கி.மீற்றர் நீளமான அழகான கடற்கரை என்று தயங்காமல் சொல்லலாம். பொருளாதார ஆதாயத்துக்காக அந்த இயற்கை அழகு பெரும்பாலான பகுதிகளில் பயன்படுத்தப்படவில்லை என்பது அக்காரணத்துக்குக் கிரீடம் வைப்பது போன்ற உண்மை.

கிட்டத்தட்ட ஒரு கஜூ பருப்பைப் போன்ற அமைப்பைக் கொண்ட நாட்டின் பெரும்பாகம் பால்கன் தீபகற்பத்தில் இருக்கிறது. அந்த கஜூ பருப்பின் வடக்கின் எல்லையில் ஸ்லோவேனியா இருக்கிறது. அவ்வெல்லையிலிருந்து தெற்கிலிருக்கும் எல்லை நாடான மொண்டினேக்ரோவின் எல்லைவரை சுமார் 720 கி.மீற்றர்கள். அதில் சுமார் 600 கி.மீ சாலை கிரவேஷியாவின் நீளமான எல்லையாக இருக்கும் அதிரியாட்டிக் கடலின் அருகிலேயே செல்கிறது. எனவே வாகனமொன்றில் அந்தக்கடற்கரையின் பவளப்பச்சை, நீலநிறங்களை ரசித்துச் செல்வதை கிரவேஷியச் சுற்றுலாவில் ஒரு பாகமாக்கிக் கொள்ளாதவர்கள் பாக்கியம் செய்யாதவர்கள் என்பேன்.

வருடத்தின் ஆறு மாதங்கள் கிரவேஷியாவில் சுற்றுலா செய்ய விரும்புகிறவர்களுக்கு ஏதுவானதாக இருக்கின்றன. இதமான கோடை ஆரம்பமாகும் ஐந்தாம் மாதத்தில் இருந்து வெம்மை மெதுவாகக் குறைந்து செல்லும் பத்தாம் மாதம் வரை அவை நீடிக்கின்றன. அதையடுத்த மாதங்களில் காலநிலை மாற ஆரம்பித்து விடுகிறது. குளிரான காற்றும் பனியும் நாட்டை ஆக்கிரமிக்கத் தொடங்கி விடுகின்றன. அச்சமயத்தில் பல சுற்றுலா விடுதிகளும் தங்கள் கதவுகளை மூடிக் கொள்கின்றன.

குறிப்பிட்ட ஆறு மாதங்களில் ஏழாம், எட்டாம் மாதங்கள் சுற்றுலாப் பயணிகளின் வருகையில் உச்சக் கட்டத்தை அடைகின்றன. விடுதிகள்,

தொடர்ச்சி 18-ம் பக்கம்...

# சி(ரி)த்ராலயா

## அப்பாவையே சிரிக்கவைத்த விகடம்!

டி.ஏ.நரசிம்மன்



செங்கல்பட்டில் கோபுவின் வீடு சின்னமணிக்காரத் தெருவிலும், ஸ்ரீதரின் வீடு அதன் மறுகோடியில் நத்தம் என்ற பகுதியிலும் இருந்தது. கோபுவின் தெருவில் மிஸ் செங்கல்பட்டுகள் நிறையப் பேர் வசித்தனர். அந்தப் பெண்கள் எல்லாருமே தன்னைக் காண்பதற்கு வழிமேல் விழிவைத்துக் காத்திருப்பதாகக் கற்பனை செய்து கொண்டு கோபுவின் வீட்டிலேயே காலரைத் தூக்கிவிட்டுக்கொண்டு தவம் கிடப்பார் ஸ்ரீதர்.

ஆனால், இந்த இளவட்டப் பெண்களுக்கு ஏற்கெனவே காதல் வலை வீசிக்கொண்டிருந்தான் அதே தெருவைச் சேர்ந்த பாக்ஸர் சுந்தரம். அந்தப் பதினாறு வயதில் திருத்தமான தோற்றத்துடன் சலவை செய்த பேண்ட் சட்டையில் கோபுவின் தெருவில் ஸ்ரீதரைப் பார்த்துவிட்டால் முடிந்தது கதை. “ஹோய்ஞ்மைனர்... எங்க தெருப்பக்கம் உனக்கு என்னடா வேலை?” என்று ஸ்ரீதரைப் பிடித்து நிறுத்தி பாக்ஸர் சுந்தரமும் அவனுடைய நண்பன் டெல்லி உள்ளிட்ட இளவட்ட கோஷ்டியினர் வீடு கட்டுவார்கள்.

அதற்கெல்லாம் அசராத ஸ்ரீதரை “என், நண்பனைப் பார்க்க உங்கள மாதிரி கோஷ்டிகிட்ட எல்லாம் பர்மிஷன் வாங்கணுமா? இப்போ என்ன தடுத்தீங்கன்னா நத்தம் பக்கம் ஒரு பய வரமுடியாது!” என்று பதிலுக்கு மிரட்டிக்கொண்டிருக்கும் போதே நண்பனைக் காப்பாற்ற கோபு ஓடிவந்து விடுவார்.

“இப்படித் துணிவுடன் அவன் காதலில் கசிந்துருகியதால்தான் தன் படங்களில் காதலையே முக்கிய கதாபாத்திரம் ஆக்கி அழகு பார்த் தானோ எனத் தோன்றுகிறது” என்று சிரிக்கிறார் இன்றைய 86 வயது இளைஞன் கோபு.

### நாடகம் போட்ட நண்பர்கள்

கோபு ஸ்ரீதரின் இளமைக் காலம் வயதுக்கே உரிய துடுக்கு மற்றும் துள்ளல்களோடு நின்றுவிடவில்லை. கோபு படிப்புக்கு அப்பால் காரைக் குடியில் வெறித்தனமாகத் திரைப்படங் களைப் பார்த்துக் கொண்டிருந்தார். ஸ்ரீதரும் திரைப்படங்களைப் பார்த்தார் எனினும் தான் வேலை செய்துவந்த செங்கல்பட்டு கூட்டுறவுச் சங்க அலுவலகத்தில் வேகவேகமாகத் தனது வேலைகளை முடித்துவிட்டு சின்னச்சின்ன நாடகங்களை எழுதிக் கொண்டிருந்தார். கோபு தனது படிப்பை முடித்துக்கொண்டு மீண்டும் செங்கல்பட்டு வர, அவருக்காகவே காத்திருந்தவர் போல, ஸ்ரீதர் ஓடோடி வந்தார்.

“டேய் கோபு... போர் அடிக்கிறது. ஒரு டிராமா போடலாமா?” ஸ்ரீதர் கேட்டார்.

“டிராமாவா!? அதுக்கு எங்கேடா போறது?” கோபு கேட்டார்.

“அதப்பத்தி ஏன் கவலைப்படுறே... ‘உலகம் சிரிக்கிறது’னு நான் ஒரு நாடகம் எழுதியிருக்கேன். அதைப் போடுவோம்” ஸ்ரீதர் சொல்ல, கோபு முகத்தை சீரியஸாக வைத்துக்கொண்டு கேட்டார்.

“உலகம் சிரிக்கிறது இருக்கட்டும். உன் நாடகத்தைப் பார்த்து ஊர் சிரிக்காம இருக்குமா?” கோபுவின் நக்கலுக்குச் சட்டென்று சிரித்தார் ஸ்ரீதர். “கவலைப்படாதே. அதுல உன்னோட காமெடியும் உண்டு. நாடகத் துக்கு ஆகற செலவுக்கு நம்மகிட்ட தேறாது. அதுக்கு நீ எனக்கு ஸ்பான்சர் மட்டும் பிடிச்சுக் கொடு அப்புறம் செங்கல்பட்டுல நாமதாண்டா கிங்ஸ்!” என்றார் ஸ்ரீதர்.

கோபுவுக்கு உற்சாகம் தீயாகப் பற்றிக்கொள்ள செல்வந்தரான தன் பெரியப்பா மகன் எம். இ .ரெங்கசாமியிடம் ஸ்ரீதரை அழைத்துச் சென்றார். கோபுவின் தந்தை பள்ளியாசிரியர். ஆனால், பிறந்தது பெரிய செல்வந்தர் குடும்பத்தில்.

ரங்கசாமி நாடகத்துக்கு நிதியளித்து உதவினார். ஒரு டிக்கெட்டின் விலை இரண்டு ரூபாய் என்று நிர்ணயித்து ரங்கசாமி டிக்கெட்களை அச்சடித்துத் தந்துவிட்டார். வசூல் எவ்வளவாக இருந்தாலும் என்னிடம் வந்துவிட வேண்டும் என்று ரகசியமாக கோபுவிடமும் சொல்லிவிட்டார். ஆனால், டிக்கெட் எங்கே விற்றது? போவோர் வருவோர்க்கெல்லாம் இடைத்தேர்தல் டோக்கன் போல் வாரி வாரி வழங்கப்பட்டது. கூட்டம் சேர்ந்தால் போதும் என்று டிக்கெட் விற்பனை காந்திக் கணக்காகிப் போனது.

### காதலியாக வேடமிட்ட கோபு

திட்டமிட்டபடி மிகப் பொறுப்பாக ஒத்திகைகள் எல்லாம் பார்த்து ‘உலகம் சிரிக்கிறது’ நாடகம் அரங்கேறியது. எதிர்பாராதவிதமாக செங்கல்பட்டு ரசித்துச் சிரித்தது. ஸ்ரீதர் வழக்கம் போல் ஹீரோ. கதைப்படி ஒரு கட்டத்தில் ஹீரோவைக் கல்லூரியை விட்டு நீக்கிவிடுவார் முதல்வர். காதலியாக நடித்த கோபு நவீன கண்ணகியாகப் பொங்கி எழுந்து, தலைவிரி கோலத்துடன் முதல்வர் அறைக்குள் நுழைந்து, “தீர விசாரிக்காமல் என் தலைவனை நீங்கிய உமக்கு டர்பன் ஒரு கேடா, எதற்கு குஷன் நாற்காலி, ஏனிந்த டாம்பீகம்?” என்றெல்லாம் அவரை நகைச்சுவை வசனங்களால் வருத்தெடுத்துவிட்டு “இந்தக் காதலி கண்ணீருக்குப் பரிகாரம் வேண்டும்.

இந்த ஆண்டு காலேஜ்ரிசல்ட் பணால் ஆகட்டும்! கரஸ்பாண்டெண்ட் உம் சம்பள உயர்வில் கை வைக்கட்டும்” என்று கையை நீட்டி கோபு ஆவேச மாகப் பேசத் தலையில் அணிந்திருந்த சவரிமுடி சடாரென்று தரையில் விழுந்து கோபுவின் சிறிய குடுமி வெளியே தெரிய, ரசிகர் கூட்டம் ஐந்து நிமிடம் சிரித்து ஆர்ப்பாட்டம் செய்தது.

நாடகம் மாபெரும் வெற்றி. ஆனால், ஸ்பான்சர் செய்த பெரியப்பா மகன் ரெங்கசாமிக்கு நஷ்டம். ஆனால், நாடகம் தந்த அனுபவமும் அதற்குக் கிடைத்த பாராட்டும் கோபு ஸ்ரீதர் இருவரையுமே நிலைகொள்ளாமல் செய்தது.

### மெட்ராஸ் திருப்பம்

திடீரென்று ஸ்ரீதரைப் பல நாட்களாகக் காணவில்லை. ஒரு நாள் கோபுவைத் தேடி பரபரப்புடன் வந்தார் ஸ்ரீதர். “டேய் கோபு... ‘ரத்த பாசம்’னு ஒரு நாடகம் எழுதினேன். அதை நாடக ஜாம்பவான்கள் டி.கே. எஸ்.சகோதரர்கள் வாங்கியிருக் காங்கடா. இனிமே ஒத்திகைக்காக நான் அடிக்கடி மெட்ராஸ் போக வேண்டியிருக்கும். அதனால மெட் ராஸ்ல தங்கலாம்னு இருக்கேன்.” ஸ்ரீதர் சொன்னதும் கோபுவுக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. நண்பனுக்குப் பெரிய வாய்ப்பு கிடைத்துவிட்ட மகிழ்ச்சி ஒருபுறம், இனி அவன் செங்கல்பட்டில் இருக்கப்போவதில்லை என்ற வருத்தம் மறுபுறம்.


ஸ்ரீதர் சென்னை கிளம்பிவிட அப்போது ரங்கநாதன் கோபுவுக்குக் கைகொடுத்தான். ரங்கநாதன் என்ற ரெங்குடுவுக்கும் நகைச்சுவை உணர்வு உண்டு. ஒருமுறை இருவரும் விகடன் சந்துருவின் விகடக் கச்சேரிக்கு சென்றிருந்தனர். அதனால் கவரப்பட்ட இருவரும், ‘நாமும் விகடகச்சேரி செய்தால் என்ன’ என்று யோசித்து பிறகு அதைச் செயல்படுத்தினார்கள். முதன்முதலாக கோபுவின் வீட்டு மொட்டை மாடியிலேயே விகட நிகழ்ச்சியை நடத்த, திரண்டிருந்த அக்கம்பக்கத்தினர் விழுந்து விழுந்து சிரித்துக்கொண்டிருந்தபோது கோபு ஆச்சரியமாக ஒருவரைக் கவனித்தார்.

அம்மாவின் நகைச்சுவை வெடிகளில் ஊசிப் பட்டாசாகிவிடும் அப்பா, அத்தனை சீக்கிரம் வாய் திறந்து சிரிக் காத மனிதர். அவரே மகனின் நகைச் சுவைத் தெறிப்புகளுக்குக் குலுங்கிக் குலுங்கி சிரிப்பதைக் கண்டதும் கோபு வுக்குத் தன் மீதிருந்த தன்னம்பிக்கை கடலாகப் பெருகி அலையாக ஆர்ப் பரிக்க ஆரம்பித்தது. அதன் பிறகு கோபுரெங்குடுவின் விகட நிகழ்ச்சி பிரபலம் ஆக, உறவினர்கள் நண்பர்கள், நண்பர்களின் நண்பர்கள் வீட்டுத் திருமணங்களில் இவர்களின் விகட நிகழ்ச்சிக்கு நல்ல விலை கிடைக்கத் தொடங்கியது. இதனால் கோபுவைப் பற்றிய கவலை பெற்றோருக்கு குட் பை சொல்லிவிட்டுச் சென்றது.

### ஆசீர்வதித்த பிரபலம்

ஸ்ரீதர் மெட்ராஸ் போனதுபோலவே இவர்களது விகட நிகழ்ச்சி மெட்ரா ஸுக்குஏற்றுமதியானது. அப்படியொரு மெட்ராஸ் திருமணத்தில் கோபுவின் விகடகச்சேரிக்கு அமோக வரவேற்பு. வந்தவர்கள் விழுந்து விழுந்து சிரித்துக்கொண்டிருந்தனர். அவர்களின் மத்தியில் தன் கண வருடன் இணைந்து தமிழகத்தையே சிரிக்க வைத்துக்கொண்டிருந்த ஒரு பெண்மணியும் மனம்விட்டு நிகழ்ச் சியை ரசித்துக்கொண்டிருந்தார். அவர் டி. ஏ. மதுரம். நிகழ்ச்சி முடியும் வரை காத்திருந்த மதுரம் “பேஷ்... பேஷ்... அபாரம்... நல்லா வரணும்” என்று ஆசீர்வதித்துப் பாராட்டிவிட்டுச் சென்றார். பின்னாளில் மதுரம் தயாரித்த ‘புனர்ஜென்மம்’ படத்தில் ஸ்ரீதரும் கோபுவும் பணியாற்றப்போவதற்கு அந்த நிகழ்ச்சி ஒரு அச்சாரமாக அமைந்துபோனது.

தொடரும்...



# ‘த.தே.ம.முன்னணியை முழுமையாக தோற்கடிப்போம்... மாவை முதலமைச்சர் வேட்பாளரென சொல்ல முடியாது’

## சிறிகாந்தா பரபரப்பு பேட்டி

பீஷ்மர்

ரெலோ செயலாளர் நாயகம் சிறிகாந்தா, அண்மைக்காலமாக அதிரடி கருத்துக்களிற்காக அதிகம் பேசப்பட்டவர். அவரது அலுவலகத்தில் அவரை சந்தித்தோம். உள்ளூராட்சி தேர்தல், ஆசனபங்கீடு, அரசியலமைப்பு பணி, வடக்கு முதலமைச்சர் வேட்பாளர் என பல விசயங்களை பேசியுள்ளார். கடந்தவாரம் வெளியான போட்டியின் தொடர்ச்சி இந்த வாரமும் வெளியாகிறது.

தீபம்: இலங்கை அரசியல் வரலாற்றில் இனப்பிரச்சனை தீர்வு முயற்சிகள் அனைத்திற்கும் ஒரேவிதமான முடிவுகளே கிடைத்துள்ளன. அப்படியிருக்க 2015 இல் இருந்து தீர்வுக்கான தெளிவான கால எல்லையை குறிப்பிட்டு உத்தரவாத மான வாக்குறுதிகள் கொடுத்துக் கொண்டிருந்தீர்கள். மூன்று வருடம் கழிந்து இப்பொழுது அந்த அணுகு முறை சரியென நினைக்கிறீர்களா?

என்.சிறீகாந்தா: (கடந்தவார தொடர்ச்சி) சிங்கள அரசுடன் ஐக்கிய இலங்கையை பற்றி பேசும் கடைசி தமிழ் மிதவாத தலைவராக சம்பந்தன் இருப்பார். இனிவரப்போகும் தலைமை ஒன்றில் இந்த பிரச்சனையை சுயநிர்ணய அடிப்படையில் இந்த பிரச்சனையை சர்வதேச அரங்கிற்கு கொண்டு செல்லும் துணிச்சலான தலைமையாக இருக்கும். அல்லது சலுகைகளிற்கும், வசதி வாய்ப்புக்களிற்கும் மண்டியிடும் சுயலாப அரசியலை முன்னெடுக்கும். இந்த இரண்டுவித நிலைப்பாடுகளையும் கொண்ட அரசியல் தலைவர்கள் இங்கிருக்கிறார்கள். ஆகவே அடுத்த தேர்தலில் மக்கள் தீர்மானிக்கட்டும்.

ஆனால் ஒரு விசயத்தை அழுத்தி சொல்வேன். சாகச அரசியல் விளையாட்டுக்களிற்கு இங்கு இடமில்லை. இப்பொழுது கூட ஒரு தரப்பு அது போராட்டத்துடன் எந்தவிதத்திலும் நேரடியாக தொடர்புமில்லாதது அந்த தரப்பிற்கு தலைவராக முயற்சிக்கின்ற சில தம்பிமார் குடும்பங்களில் இருந்து ஒரு மாவீரன்கூட கிடையாது. இவர் களெல்லோரும் போராட்டகாலத்தில் ஒன்றில் கொழும்பில் படித்துக் கொண்டிருந்தார்கள். அல்லது, வெளிநாடுகளில் இருந்தவர்கள். போரில் மக்கள்பட்ட துன்பங்கள் தீயாக எரிந்து கொண்டிருக்கும் நிலைமையில், அந்த தீயில் அரசியல் குளிர்காய்கிறார்கள்.

இந்த சந்தர்ப்பவாத அரசியலில் இருந்து தமிழ் மக்களை பாதுகாக்க வேண்டும். நண்பர் டக்ளஸ் தேவானந்தாவில் எனக்கு மரியாதையுள்ளது. ஏனெனில் அவர் ஒரு காலத்தில் போராளியாக இருந்தவர். அவர் ஆயுதம் தூக்கி போராடியவர் என்ற அடிப்படையில் அவர் எதையும் கதைக்கலாம். அதற்கு நாங்கள் பதிலளிப்போம். ஆனால் இங்கே தமிழ் தேசியம் பேசும் சிலர், அல்லது மாறிமாறி இரண்டு பெரும்பான்மை கட்சிகளில் இணைந்து சொந்த வியாபார நலன்களை உறுதிப்படுத்தி, கொழும்பில் வாழும் சிலர் இங்கு அரசியல் வியாபாரம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இரண்டு தரப்புக்களும் தோற்கடிக்கப்பட வேண்டியவை. சுயநலமற்ற, சந்தர்ப்பவாதமற்ற, எந்த தியாகத்திற்கும் தயாரான சக்திகளே எமக்கு தேவை. அடுத்த தேர்தலில் இந்த சக்திகளை மக்கள் தோற்கடிப்பார்கள்.

தீபம்: வடக்கு கிழக்கு தமிழர்களின் தாயகம். ஆனால் கிழக்கில் முஸ்லிம்கள் தம்மை தனி இனமாக அடையாளப்படுத்த தொடங்கிவிட்டனர். முஸ்லிம்களுடன் புரிந்துணர்வில்லாமல் தமிழர்களின் தாயக கோட்பாட்டை அடைய முடியாது. தமிழ் தேசிய கூட்டமைப்பு இனப்பிரச்சனை தீர்வு பற்றி பேசி வருகிறது. ஆனால் இனப்பிரச்சனை தீர்வில் முஸ்லிம் மக்களின் பங்கு தொடர்பாக ஒரு திட்டத்தை ஏன் தமிழ் தேசிய கூட்டமைப்பால் உருவாக்க முடியவில்லை.

என்.சிறீகாந்தா: இன்னமும் தமிழ் முஸ்லிம் தலைவர் களிற்கிடையில் நேர்மையான புரிந்துணர்வு ஏற்படவில்லை. முஸ்லிம்களின் அரசியல் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். முஸ்லிம் மக்கள் மத்தியில் முஸ்லிம் காங்கிரஸ் தவிர்ந்த வேறு கட்சிகளும் உள்ளன. அவை

தொடர்ச்சி 21-ம் பக்கம்...



# அபியும் அனுவும்

## சினி விமர்சனம்

நடிப்பு - டொவினோ தாமஸ், பியா பாஜ்பாய், ரோகிணி, சுகாசினி, பிரபு மற்றும் பலர்

இயக்கம் பி.ஆர்.விஜயலட்சுமி

இசை தரண்

தயாரிப்பு யூட்லி பிலிம்

தமிழ் சினிமாவில், ஏன், இந்தியா சினிமாவிலேயே இதுவரை சொல்லப்படாத கதை என இந்தப் படத்தைச் சொல்லலாம். வித்தியாசமான கதைகளை ரசிகர்கள் எதிர்பார்க்கிறார்கள் என்பதற்காக இப்படி ஒரு வித்தியாசமான கதையா?

உறவுகளால், உறவினர்களால் ஏற்படும் சிக்கல்கள் தான் தமிழ் சினிமாவில் வரும் பெரும்பாலான கதைகளில் இருக்கும். ஆனால், உறவே சிக்கல் என்றால்? இம்மாதிரியான கதைகளை நம் ரசிகர்கள் எப்படி ஏற்றுக் கொள்வார்கள் என்று கூட யோசிக்காமல் படமாக எடுத்திருக்கிறார்கள். ஐ.டியில் வேலை பார்க்கும் டொவினோ தாமஸ், பேஸ்புக்கில் பியா பாஜ்பாய் பதிவிடும் வீடியோக்களைப் பார்த்து அவரைக் காதலிக்க ஆரம்பிக்கிறார். அந்த காதலை டொவினோ, பியாவிடம் சொல்ல, பியா, டொவினோவை பிளாக் செய்துவிடுகிறார். அதனால், பியாவைத் தேடிச் செல்கிறார் டொவினோ. நேரில் பார்த்ததும் தன் காதலைச் சொல்லும் பியா, டொவினோவிடம் உடனே திருமணம் செய்து கொள் என்கிறார்.

இருவரும் அவர்களது பெற்றோர்களுக்கும் தெரிவிக்காமல் உடனே திருமணம் செய்து கொள்கிறார்கள். சென்னையில் அவர்களது வாழ்க்கையை ஆரம்பிக்கிறார்கள். பியா தாய்மை அடைய, அந்த சமயத்தில் அவர்கள் இருவருக்கும் பேரதிர்ச்சியான தகவல் ஒன்று தெரிகிறது. டொவினோ, பியா இருவரும் அண்ணன், தங்கை என்ற அதிர்ச்சி தான் அது. கற்பனையிலும் எட்டாத அந்த உறவுச் சிக்கலால் அவர்கள் வாழ்க்கை எப்படி மாறுகிறது என்பதுதான் படத்தின் கதை. முள் மீது சேலை விழுந்தால் அதை எடுப்பது கடினம் என்பார்கள். ஆனால், இந்தக் கதை முள் தோட்டத்தின் மீது விழுந்த சேலை. அதை கிழியாமல் எப்படி எடுப்பது, முடிந்தவரை எடுத்திருக்கிறார் இயக்குனர் விஜயலட்சுமி. எங்கும் கண்ணியக் குறைவான காட்சிகள் இல்லை என்பது பெரிய ஆறுதல்.

தமிழுக்கு ஒரு இனிய அறிமுகம் மலையாள நடிகர் டொவினோ தாமஸ். தமிழில் இந்த மாதிரியான ஒரு சவாலான கதாபாத்திரத்தை ஏற்று நடிக்கும் நடிகர் யாராவது இருக்கிறார்களா என்று அவர் யோசிக்க வைத்துவிடுகிறார். இடைவேளை வரை இனிமையான காதல் நடிப்பில் கவர்பவர், பின்னர் தடுமாற்றமான கணவராக அவ்வளவு இயல்பாக நடித்திருக்கிறார். தனுஷ் உடன் மாரி படத்தில் நடித்துக் கொண்டிருக்கும் டொவினோ அந்தப் படத்திற்குப் பிறகும் தமிழில் நிலையான இடத்தைப் பிடிப்பார் என எதிர்பார்க்கலாம்.

தமிழில் சில படங்களில் விளையாட்டுத்தனமான கதாபாத்திரத்தில் இதுவரை நடித்தவர் பியா பாஜ்பாய். இந்தப் படத்தில் ஒரு சவாலான கதாபாத்திரத்தில் நடித்திருக்கிறார். இதுவரை இவரை யாரும் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். அந்த மொட்டை மேக்கப் மட்டும் நன்றாகத் தெரிகிறது. பியாவின் அம்மாவாக ரோகிணி. மகளின் திடீர் கல்யாணத்தைக் கண்டு கொஞ்சம் கூட அதிர்ச்சி அடையாமல் ஆரத்தி எடுக்கிறார். டொவினோ பிளாட்டின் பக்கத்து பிளாட்டில் இருப்பவர்களாக சுகாசினி, பிரபு. ஒரே ஒரு காட்சியில் மட்டுமே வருகிறார் பிரபு. பணக்கார பெற்றோர்களாக உதயபானு மகேஷ்வரன், தீபா ராமானுஜம். மகன் டொவினோ திருமணம் முடிந்து அப்பா ஆனால், கூட மகனையும், மருமகளையும் வந்து பார்க்காமலேயே இருக்கிறார்கள்.

தரண் இசையில் பாடல்கள் ரசிக்கவில்லை, பின்னணி இசை பரவாயில்லை. அகிலன் ஒளிப்பதிவு அழகு. உறவே சிக்கலாய் அமைந்த கதையை அதிக சிக்கல் இல்லாமல் தெளிவாகப் புரியும்படி கொடுக்க முயற்சித்திருக்கிறார்கள். கிளைமாக்சில் ரசிகர்களுக்குப் புரிய வைத்ததை நாயகன், நாயகிக்குத் தெரியப்படுத்தியிருந்தால் நிறைவாக இருந்திருக்கும்.



### பொலிஸ் உடை பத்திரம்!

சின்னத்திரையில் கடந்த 20 வருடத்திற்கு மேலாக நடிக்கிறார் தேவி பிரியா. தற்போது கலர்ஸ் டிவியில் வந்தாள் ஸ்ரீதேவி "சீரியலில் நடித்து வருகிறார். வில்லி, ரொமாண்டிக், சீரியஸ், காமெடி என பலவித ரோல்களில் நடித்தாலும், பொலிஸ் ரோல்தான் நன்றாக இவருக்கு பிடிக்குமாம். சொர்க்கம் சீரியலில் பொலிஸ் வேடம்போட்டு, மாநில விருது வாங்கியிருக்கிறார். அந்த சீரியலிற்கு காவித்த பொலிஸ் உடையை இப்பொழுதும் பத்திரமாக வைத்திருக்கிறாராம். சென்னையில் வெள்ளம் வந்தபோதும், பெட்டிக்குள் போட்டு பத்திரமாக வைத்திருந்தாராம். தேவி பிரியா டப்பிங்கும் செய்கிறார். புதுப்பேட்டை படத்தில் சினேகாவிற்கு இவர்தான் டப்பிங் பேசியிருக்கிறார். தாமிரபரணி படத்தில் நதியாவிற்கு டப்பிங் பேசியவரும் இவர்தான். சினிமாவிலும் நடித்துவரும் தேவி பிரியா, தற்போது கண்ணே கலைமானே என்ற படத்தில் நடித்து வருகிறார்.



### பூரிக்கட்டையை தூக்கிய ஆர்த்தி!

தூத்துக்குடி படுகொலையை கண்டித்து பேசி வீடியோ வெளியிட்ட சின்னத்திரை நடிகையொருவர் மீது வழக்கு பாய்ந்துள்ளது. இதனால் செம கடுப்பில் இருக்கிறார் ஆர்த்தி. தனது கடுப்பை டுவிற்றரிலும் கொட்டித்தீர்த்திருக்கிறார். "இதெல்லாம் ஒரு கட்சி, ஒரு ஆட்சியென "பாஜக, அதிமுக இரண்டையும் கழுவி ஊற்றிவருகிறார். இத்தனைக்கும் ஆர்த்தி அதிமுகவிலும், ஆர்த்தியின் கணவன் கணேஸ் பாஜகவிலும் இருந்தனர். ஜெயலலிதா இறந்ததுமே அதிமுகவை விட்டு தான் விலகி விட்டேன் என்கிறார் ஆர்த்தி. கணேஸ் இப்பொழுதும் பாஜகவில் இருந்திருந்தால் வீட்டில் இடம் கிடைத்திருக்காது, பூரிக்கட்டையால்தான் அடிவிழுந்திருக்கும் என்கிறார்!



### போகப்போக ஏற்றுக்கொள்வார்கள்!

சீரியல் ரசிகர்களை தற்போது அதிகம் கவர்ந்து வருபவர் கீதாஞ்சலி. நிறம் மாறாத . பூக்கம், ராஜா ராணி சீரியல்களில் பிசியாக நடித்து வருகிறார். நாதஸ்வரம் சீரியலில் அறிமுகமானதில் இருந்தே அம்மணி கலக்கி வருகிறார். நாதஸ்வரம் சீரியலில் இவரது தங்கையாக நடித்தவர், இவரது கூடப்பிறந்த தங்கைதான். அவர் திருமணமாகி செட்டிலாகி விட, இப்பொழுது அடுத்த தங்கை ஐஸ்வர்யாவையும் சீரியலுக்கு அழைத்து வந்திருக்கிறார். நினைக்கத் தெரிந்த மனம் உள்ளிட்ட சீரியல்களில் ஐஸ்வர்யா கலக்கி வருகிறார். தற்போது ராஜா ராணி சீரியலில் வினோ பாத்திரத்திற்கு வைஷாலிக்கு மாற்றாக வந்திருக்கிறார் கீதாஞ்சலி. இதுவரை அந்த பாத்திரத்தில் வைஷாலி நடித்து வந்த நிலையில், திடீரென தன்னை பார்க்க வித்தியாசமாக தெரியும். இலகுவில் ஏற்றுக்கொள்ள சிரமமாகத்தான் இருக்கும். ஆனால் விரைவில் மக்கள் ஏற்றுக்கொள்ளும் விதமான நடிப்பை வழங்குவேன் என்கிறார் கீதாஞ்சலி.



### ராஜாராணியிலிருந்து ஏன் விலகினார்கள்?

விஜய் டிவியில் ஒளிபரப்பாகும் ராஜாராணி சீரியலுக்கு ரசிகர்களிடம் நல்ல வரவேற்பு உள்ளது. விஜய் டெவலிசன் அவார்ட்டில் இந்த வருடத்தின் சிறந்த சீரியல் விருதையும் அதுதான் பெற்றது. இந்த சீரியலில் நடித்த இரண்டு நடிகைகள் விலகியிருப்பது ரசிகர்களிடம் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறது. வினோ பாத்திரத்தில் நடித்த வைஷாலி தனிகா, திவ்யா பாத்திரத்தில் நடித்த பவித்ரா ஆகியோரே விலகியுள்ளனர். இவர்கள் ஏன் விலகினார்கள்? வைஷாலிக்கு திடீரென ஏற்பட்ட சில பிரச்சனைகளால் மூன்று மாதம் ஓய்வில் இருக்க வேண்டுமென வைத்தியர்கள் அறிவுறுத்தியுள்ளனர். மூன்றுமாத பிரேக் விட முடியாதென இயக்குனர் சொன்னதால், அவர் விலக வேண்டியதாகி விட்டது. மற்றும்படி வேறெந்த முரண்பாடும் கிடையாதென்றார். பவித்ராவிற்கு வேறொரு சீரியலில் நல்ல வேடம் கிடைத்துள்ளது. அதை இயக்குனரிடம் சொல்லி, எல்லோர் சம்மதத்துடனும் விலகியுள்ளார்.



### தெய்வமகள் வில்லி எங்கே?

தெய்வமகள் சீரியலில் மென்மையான வில்லியாக வினோ பாத்திரத்தில் மிரட்டியவர் சுஹாசினி. அந்த வில்லி பாத்திரமே அவருக்கு தனி அடையாளத்தை கொடுத்தது. அதன்பின்னர் சீரியல்களில் தலைகாட்டாமல் இருக்கிறார். என்ன நடந்தென விசாரித்தோம். சுஹாசினிக்கு பாடுவதென்றால் பிடிக்குமாம். இப்பொழுது பாடல்துறையில் அதிகமாக ஈடுபடுகிறாராம். மேடைகளில் இசைக்குழுக்களில் பாடி வருகிறாராம். இடையில் சில சினிமா வாய்ப்புக்களும் வந்திருக்கின்றன. ஆனால் சீரியலில் நடிப்பதால் அவற்றை ஏற்காமல் விட்டார். இப்பொழுது அதை நினைத்து இலேசாக வருந்துகிறார். நல்ல சீரியல் வாய்ப்பு வந்தால் நிச்சயம் மீண்டும் நடிப்பேன் என்கிறார்.




சுஷ்மா

# வண்ணத் திரை



தனியா

## ஜெயலலிதா ஆக ஆசை!

மறைந்த நடிகை சாவித்திரி வேடத்தில் தற்போது மகாநதி படத்தில் நடித்த கீர்த்தி சுரேஷுக்கு அளவற்ற பாராட்டுக்கள் தொடர்ந்து குவிந்து வருகின்றன. இதையடுத்து மற்ற சில நடிகைகளும் இதுபோன்ற சுயசரிதை கதைகளில் நடிக்க ஆர்வம் காட்டி வருகிறார்கள். மலையாள நடிகை ரீமா கல்லிங்கலிடம் அப்படி யாருடைய கதாபாத்திரத்தில் நடிக்க விரும்புகிறீர்கள் என கேட்கப்பட்டபோது சற்றும் தயங்கமால் மறைந்த முதல்வர் ஜெயலலிதா வேடத்தில் நடிக்க விரும்புவதாக கூறியுள்ளார். அதுமட்டுமல்ல பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த, நங்கேலி என்கிற புரட்சிப்பெண் கேரக்டரிலும் நடிக்கும் ஆசை ரீமாவுக்கு இருக்கிறதாம். புரட்சிகரமான கேரக்டர்களில் தொடர்ந்து நடிக்கும் நடிகை ரீமா கல்லிங்கலிடம் இருந்து இப்படி ஒரு பதில் வந்ததில் ஆச்சர்யம் ஏதும் இல்லை. தமிழில் பரத் ஜோடியாக யுவன் யுவதி என்ற படத்தில் ரீமா கல்லிங்கல் நடித்திருக்கிறார்.

## ஜூராசிக் வேர்ல்டை சமாளிக்குமா காலா?

ரஜினியின் காலா வரும் ஜுன் மாதம் 7ம் திகதி வெளியாக இருக்கிறது. குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை பெரிதும் கவர்ந்த ஜுராசிக் சீரிஸ் படமான ஜுராசிக் வேர்ல்ட் தி பாலன் கிங்டம் படமும் ஜுன் 7ம் திகதிதான் வெளிவருவது காலாவுக்குக் கொஞ்சம் சிக்கலைத் தரும் என்பது உண்மைதான். ஜுராசிக் சீரிஸ் படங்கள் இந்தியாவில் அதிகமான வசூலைக் குவிப்பது வழக்கம். இப்போது வரவுள்ள பாலன் கிங்டம் படமும் மிகப் பெரும் பொருட்செலவில் தயாரிக்கப்பட்டுள்ளது. சமீப காலமாக இந்தியாவில் ஹாலிவுட் படங்கள் மிகப் பெரிய வசூலைக் குவித்து வருகின்றன. ஏப்ரல் மாதம் வெளிவந்த அவெஞ்சர்ஸ் இன்பினிட்டி வோர் படம் இந்தியாவில் மட்டும் 200 கோடிக்கும் அதிகமான வசூலை ஈட்டியது. அதற்குக் காரணம் குழந்தைகள்தான். காலா படத்தின் டீசர் அது ஒரு சீரியசான ரஜினி படமாகவும், வழக்கமான ரஜினி படமாகவும் இல்லாமல் இருக்கும் என்ற ஒரு எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. அப்படியிருந்தால் படத்தைப் பார்க்க சிறுவர்கள், சிறுமியர்கள், குடும்பத்தினர் அதிகம் வர விரும்பமாட்டார்கள். அவர்களது விருப்பம் ஜுராசிக் வேர்ல்டு பாலன் கிங்டம் படமாகத்தான் இருக்கும். அந்தப் போட்டியை காலா எப்படி சமாளிக்கப் போகிறது என்பதுதான் பில்லியன் டொலர் கேள்வி. அதேசமயம் தூத்துக்குடி ஸ்டெர்லைட் துப்பாக்கிச்சூடு பிரச்னை ஓடிக் கொண்டிருப்பதால் காலா ரிலீஸை தள்ளி வைக்கவும் அதிக வாய்ப்பிருக்கிறது.

## சூர்யாவுடன் நடிக்க மறுத்த வில்லன்!

தமிழில் மிருகம் படத்தின் மூலம் அறிமுகமானவர் ஆதி. அதன் பிறகு ஈரம், யாகாவாராயினும் நாகாக்க, வல்லினம், அரவான், மரகத நாணயம் உள்பட பல படங்களில் நடித்தார். இந்த நிலையில் லைக்கா நிறுவனத்தின் தயாரிப்பில் கே.வி. ஆனந்த் இயக்கத்தில் சூர்யா நடிக்கும் படத்தில் வில்லனாக நடிக்க ஆதியை அணுகினார்கள். காரணம் சூர்யாவின் படங்களுக்கு தெலுங்கில் மார்க்கெட் உள்ளது. ஆதியும் நடித்தால் தெலுங்கு மார்க்கெட் மதிப்பு உயரும் என்று கணக்கு போட்டார்கள். ஆனால் ஆதி நடிக்க மறுத்து விட்டார். காரணம் அவர் தமிழில் ஹீரோவாக மட்டுமே நடித்து வருகிறார். இது குறித்து ஆதி கூறியிருப்பதாவது: எனக்கு சொல்லப்பட்ட கேரக்டரில் சில மாற்றங்கள் சொன்னேன் அதை அவர்கள் ஏற்கவில்லை. இப்போது ஒரே நேரத்தில் 3 படங்களில் நடித்து வருகிறேன். அவர்கள் கேட்ட திகதியை என்னால் கால்ஷீட் ஒதுக்கித்தர முடியவில்லை. நடிக்க மறுத்தேன் என்பது தவறு. சந்தர்ப்பங்கள் சரியாக அமையவில்லை என்றார்.

## விஸ்வாசம் முதற்கட்டம் முடிந்தது!

சிவா இயக்கத்தில் நான்காவது முறையாக அஜீத்குமார் நடித்து வரும் விஸ்வாசம் படத்தின் முதல்கட்ட படப்பிடிப்பு ஐதராபாத்தில் நடைபெற்று வந்த நிலையில், தற்போது அங்கு படப்பிடிப்பை முடித்துக்கொண்டு யூனிட் சென்னை திரும்பி விட்டது. ஆனால் இதையடுத்து இர்ண்டாம்கட்ட படப்பிடிப்பு சென்னையில் நடைபெறுவதாக கூறப்பட்டு வந்த நிலையில், அடுத்தபடியாக மும்பைக்கு செல்கிறார்களாம். அங்கு இரண்டாம்கட்ட படப்பிடிப்பை முடித்த பிறகு மூன்றாம்கட்ட படப்பிடிப்பைதான் சென்னையில் நடத்துகிறார்களாம். மேலும், தீபாவளிக்கு படத்தை திரைக்கு கொண்டு வந்து விடவேண்டும் என்ற வேகத்தில் படப்பிடிப்பு நடைபெறுவதால், மூன்றாம் கட்ட படப்பிடிப்பு சென்னையில் நடக்கும்போதே இறுதிகட்ட பணிகளையும் நடத்த திட்டமிட்டுள்ளார்கள்.

## லைலாவின் மகன்!

தமிழ் சினிமாவில் ஒரு காலத்தின் முன்னணி நடிகையாக இருந்தவர் லைலா. கன்னக்குழி அழகி. பிஸியாக இருந்த சமயத்திலேயே திருமணம் செய்துகொண்டு விட்டார். திருமணத்தின் பின்னர் சினிமா பக்கம் தலையே காட்டவில்லை. கணவர் மெஹதீனும், இரண்டு குழந்தைகளுமாக இருக்கிறார். லைலாவும் மகனும் இருக்கும் புகைப்படமொன்று அண்மையில் சமூக வலைத்தளங்களில் வெளியாகி பரபரப்பாக பகிரப்படுகிறது.

## சிம்புவின் புதிய ஆல்பம்!

நடிகர் சிம்பு சினிமாவில் நடிப்பது மட்டுமின்றி இசையமைப்பது, பாடல்கள் எழுதுவது, பின்னணி பாடுவது என பலமுகம் காட்டி வருகிறார். அதோடு அவ்வப்போது ஆல்பங்களையும இணையதளத்தில் வெளியிட்டு வருகிறார். குறிப்பாக அவர் எழுதி பாடிய பீப் சாங் மிகப்பெரிய சர்ச்சைகளை சந்தித்தது. என்றாலும், ஆல்பம் வெளியிடுவதை அவர் நிறுத்தவில்லை. இந்த நிலையில், தற்போது பெரியார் குத்து என்றொரு ஆல்பத்தில் பாடியிருக்கிறார் சிம்பு. அது விரைவில் வெளியாக உள்ளது. ஆனால் இந்த ஆல்பத்தின் பாடலை சிம்பு எழுதவில்லை. பின்னணி மட்டுமே பாடுகிறார். மற்றபடி மதன் கார்க்கி பாடல் எழுத, தமிழ் மணி இசையமைத்துள்ளார். அதன்காரணமாக இந்த பாடலின் வரிகளில் சர்ச்சைக்குரிய வார்த்தைகள் இருக்காது என நம்பலாம்.

## அர்த்தனா அழுததால் இயக்குனர் சங்கடம்!

சமுத்திரகனி இயக்கிய தொண்டன் படத்தில் அவரது தங்கையாக நடித்தவர் மலையாள நடிகை அர்த்தனா. இவர் தற்போது ஜி.வி.பிரகாஷ் நடித்துள்ள செம படத்தில் அவருக்கு ஜோடியாக நடித்துள்ளார். வள்ளிகாந்த் இயக்கியுள்ள இந்த படத்தை பசங்க பாண்டிராஜன் தயாரித்துள்ளார். இந்த படத்தின் பிரஸ்மீட் சென்னையில் நடைபெற்றபோது தனது கேரக்டர் பற்றி சொல்லும்போதே மேடையில் அழுதார் நாயகி அர்த்தனா. நான் இப்படித்தான் எமோசனல் ஆகிட்டேன்னா அழுதுடுவேன் என்றார். அவர் பேசிட்டு அமர்ந்தபோது அந்த படத்தை தயாரித்துள்ள இயக்குனர் பாண்டிராஜன் மைக் முன்பு ஓடி வந்தார். அர்த்தனா அழுவதைப்பார்த்து, படப்பிடிப்பு நடந்தபோது டைரக்டரும், தயாரிப்பாளரும் ஏதோ பண்ணிட்டாங்க போல அதுதான் அந்த பொண்ணு இப்படி அழுதுன்னு யாரும் தவறா நெனைச்சிடாதீங்க. சாதாரணமா ஒரு சீனை சொல்லி நடிக்கச் சொன்னாலும் எமோசனல் ஆகி அப்படித்தான் அர்த்தனா அழுதுகொண்டேயிருப்பார். அதனால் யாரும் அதை தவறாக புரிந்து கொள்ள வேண்டாம் என்று கேட்டுக்கொண்டார்.

## காலா படத்திற்கு எமோஜி அறிமுகம்!

ரஞ்சித் இயக்கத்தில் ரஜினி நடித்துள்ள காலா படம் ஜூன் 7 ம் திகதி ரிலீசாக உள்ளது. இதற்கான புரோமோஷன் நிகழ்ச்சியை ஐதராபாத்தில் மே 29 அன்று நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. தமிழ், தெலுங்கு, இந்தி உள்ளிட்ட 4 மொழிகளில் ரிலீசாக உள்ள காலா படத்திற்கு டுவிட்டரில் எமோஜி (emoji) உருவாக்கப்பட்டுள்ளது. 4 மொழிகளிலும் இந்த எமோஜி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. காலா படத்தை தயாரிக்கும் தனுஷின் வொண்டர்பார் பிலிம்ஸ் நிறுவனம் இந்த எமோஜியை அறிமுகம் செய்துள்ளது.

# ஸ்பெயினின் நட்சத்திர நாயகன் இனியெஸ்டா

**2010ம்** ஆண்டு ஜூலை 11ம் திகதி ஸ்பெயின் கால்பந்து ரசிகர்களுக்கு ஒரு பொன்னான நாள். ஆம் அந்த நாளில்தான் ஸ்பெயின் உலகக் கோப்பை கால்பந்து சம்பியன்ஷிப்பை முதன்முறையாக வென்றது. ஸ்பெயின் நாடே ஆனந்தக்கூத்தாடியது. கால்பந்து ரசிகர்களின் உற்சாகம் எல்லை மீறிப் போனது. அந்த உற்சாகத்துக்கு வித்திட்டவர்தான் ஸ்பெயின் அணி நடுகள ஆட்டக்காரர் அந்த்ரே இனியெஸ்டா.

2010ம் ஆண்டு உலகக் கோப்பைப் போட்டியில் நெதர்லாந்துக்கு எதிராக கோலடித்து அணிக்கு உலகக் கோப்பையைப் பெற்றுத் தந்தவர்தான் இந்த இனியெஸ்டா.

1984ம் ஆண்டு பிறந்த இனியெஸ்டாவுக்கு சிறுவயது முதல் கால்பந்து என்றால் கொள்ளைப் பிரியமாம். எப்போதும் கால்பந்தும் கையுமாகவே இருப்பாராம். பார்சிலோனா இளைஞர் அகடமியில் இணைந்து தனது கால்பந்து கனவை வளர்த்துக் கொண்டார். பாடசாலையில் கால்பந்துடன் திரிந்தவர் 2002ல் தொழில்முறை கால்பந்து வீரராக மாறினார். 16, 18 19 வயதுக்குட்பட்டோர் ஸ்பெயின் அணிக்காகவும் அவர் விளையாடி வந்தார். பார்சிலோனா அணிக்காக ஆடி வந்த இனியெஸ்டா, 2006ல் முதன்முறையாக சர்வதேச கால்பந்துப் போட்டிகளில் ஆடினார். 2006க்குப் பிறகு அவரது கால்பந்து கள வளர்ச்சி அபரிமிதமாக இருந்தது. 2008ம் ஆண்டு யூரோ2008 கோப்பையை ஸ்பெயினுக்குப் பெற்றுத் தந்தார்.

2010ல் உலகக் கோப்பை கால்பந்துப் போட்டியில் விளையாடும் வாய்ப்பு இனியெஸ்டாவுக்குக் கிடைத்தது. அரிதான வாய்ப்பை நன்றாகப் பயன்படுத்தி சரித்திரமாக்கினார். தனது அற்புதமான ஆட்டத்தால் இறுதிச் சுற்று வரை ஸ்பெயினை அழைத்து வந்தார். இறுதி ஆட்டத்தில் நெதர்லாந்துக்கு எதிராக ஒரு அற்புதமான கோலைப் போட்டு அணிக்கு கோப்பையை வாங்கிக் கொடுத்தார். இந்த ஆட்டத்தில் ஆட்டநாயகன் விருதையும் அவரே வாங்கினார். மேலும் 2010 உலகக் கோப்பைப் போட்டியின் ஓல் ஸ்டார் அணியிலும் அவருக்கு இடம் கிடைத்தது.

புகழ்பெற்ற பார்சிலோனா கிளப் அணிக்காக பல ஆண்டுகள் விளையாடி, ஏராளமான வெற்றிகளை அந்த அணிக்காகக் குவித்திருக்கிறார். 2002ல் பார்சிலோனாவுக்காக ஆடத் தொடங்கியவர், இன்று வரை அந்த கிளப்புக்காக ஆடி வருகிறார்.

கால்பந்து வரலாற்றில் உலகின் சிறந்த வீரர்களில் ஒருவராகக் கருதப்படுகிறார் இனியெஸ்டா. ஐரோப்பிய யூனியன் கால்பந்து அணி விருதுக்காக 2009ம் ஆண்டு முதல் 6 முறை தேர்வு செய்யப்பட்டவர் இனியெஸ்டா. மேலும் பிபா உலக லெவன் விருதுக்காக 9 முறை பரிந்துரை செய்யப் பட்டவர்.

இந்த முறை உலகக் கோப்பையை மீண்டும்ஸ்பெயினுக்காகபெற்றுத்தரும் முனைப்பில் உள்ளார் இனியெஸ்டா. அதிக அனுபவம், அபாரமான திறமை, அற்புதமான செயல்திறனால் தற்போதுள்ள வீரர்களுடன் சிறந்த வீரர் போட்டிக்கு மல்லுக்கட்டுகிறார் இனியெஸ்டா.

ஸ்பெயின் அணியின் பயிற்சியாளர் ஜூலென் லோபேடெகுவின் மேற்பார்வையில் தனது திறமையை மேம்படுத்தி வருகிறார். அணி வீரர்கள் மார்க்கோ அசென்சியோ, சால் நிகுஸ், செர்ஜியோ புஸ்குட்ஸ், டேவிட் சில்வா ஆகியோருடன் நட்சத்திர வீரராக இனியெஸ்டா ஸ்பெயினுக்காக களமிறங்குகிறார்.

2018ம் ஆண்டு உலகக் கோப்பை கால்பந்துப் போட்டிக்கான தகுதிச் சுற்றில் ஸ்பெயின் 10 ஆட்டங்களில் விளையாடியது. இதில் 9ல் வெற்றி கண்டது. ஒரு போட்டி மட்டும் டிராவில் முடிந்தது. இதில் 36 கோல்களை ஸ்பெயின் வீரர்கள் அடித்தனர். மாறாக 3 கோல்களை மட்டுமே ஸ்பெயின் அணிக்கு எதிராக எதிரணி வீரர்கள் அடிக்க முடிந்தது. ஒரு ஆட்டத்தில் கூட தோல்வியடையாமல் இறுதிப் போட்டிக்கு முன்னேறிய ஸ்பெயின் அணி, எதிரணிக்கு அச்சுறுத்தலாக விளங்கி வருகிறது.

கப்டன் செர்ஜியோ ரமோஸின் வழிகாட்டுதல்கள், இனியெஸ்டாவுக்கு கூடுதல் பலமாக அமைந்துள்ளது. சிறந்த நடு கள வீரராகத் திகழும் இனியெஸ்டா எதிரணியின் தடுப்புகளை உடைத்து கோல்களாக மாற்றுவதில் அசாத்திய திறமை படைத்தவர். படுவேகம், லாவகமாக பந் தைக் கடத்தும் திறன், பந்துகளை சக வீரர்களுக்கு பாஸ் செய்வதில் நேர்த்தி, கோலடிக்கும் திறமை, சக வீரர்கள் கோலடிக்க உதவுவதில் அற்புதமான சாமர்த்தியம் போன்றவற்றால் மிளிர்கிறார் இனி யெஸ்டா.

அநேகமாக இவருக்கு இது கடைசி உலகக் கோப்பை கால்பந்துப் போட்டி யாக இருக்கலாம் என கால்பந்து விமர்சகர்கள் கணிக்கின்றனர். அருமையான போர்மில் இனியெஸ்டா இருக்கிறார். எனவே இந்த முறை ஸ்பெயினுக்காக மீண்டும் கோப்பையை அவர் வெல்வார் என்கிறார்கள் கால்பந்துப் போட்டி விமர்சகர்கள். அதைத் தான் ஸ்பெயின் ரசிகர்களும் விரும்புகின்றனர் நடக்குமா ?




## தோனி- பிராவோ போட்டி

ஐபிஎல் இறுதிப்போட்டிக்குப் பிறகு பிராவோ மற்றும் தோனிக்கு இடையே சுவாரஸ்யமான போட்டி நடந்துள்ளது.

மும்பையில் நடைபெற்ற ஐபிஎல் 2018 இறுதிப் போட்டியில் வட்சனின் சிறப்பான ஆட்டத்தால் சன்ரைசர்ஸ் ஹைதராபாத்தை 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று மூன் றாவது முறையாக சம்பியன் பட்டத்தை பெற்றது சென்னை சூப்பர் கிங்ஸ்.

சென்னை சூப்பர் வீரர்கள் மூன்றாவது மூறையாக கோப்பையை வென்றதால் மைதானத்தில் ஆட்டம், பாட்டம் என கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர். இதற்கிடையில் தோனி மற்றும் பிரர்வோ இருவரும் தங்களுக்குள் சுவாரஸ்யமான போட்டி ஒன்றில் பங்கேற்றனர்.

பிராவோ தோனிக்கு இடையே நடந்த ஓட்டப்பந்தயத்தில் தோனி ஒரு நொடி இடைவெளியில் பிராவோவை முந்தினார்.

## ஐபிஎல் புள்ளிவிபரம்

11வது ஐபிஎல் சீசன் போட்டியில் அதிக சதம் அடித்தவர், அதிக அரை சதம் அடித்தவர், சிக்ஸர், பவுண்டரிஅதிகமாக அடித்த வீரர், விக்கெட்டுகள், மெய்டன் எடுத்த பந்துவீச்சாளர் ஆகியோரின் விவரங்கள் இதோ

**அதிக ரன்:** சன் ரைசர்ஸ் அணியின் கப்டன் வில்லியம்ஸன் 17 போட்டிகளில் பங்கேற்று 735 ரன்கள் சேர்த்ததே தனி ஒருவீரர் சேர்த்த அதிகபட்ச ரன்களாகும். இவர் ஒரேஞ்ச் தொப்பி வென்றார். 2ம் இடத்தில் ரிஷாப் பந்த் (684 ரன்கள்), 3ம் இடத்தில் லோகேஸ் ராகுல் (659 ரன்கள்) உள்ளனர்.

**ஒரு ஓவரில் அதிக ரன்:** டெல்லி அணியின் கப்டன் ஸ்ரேயாஸ் அய்யர் கொல்கத்தா அணிக்கு எதிராக ஒரே ஓவரில் 28 ரன்கள் சேர்த்ததே அதிகபட்சமாகும்.

**அதிக பவுண்டரி:** டெல்லி அணி வீரர் ரிஷாப் பந்த் 68 பவுண்டரிகள் அடித்ததே அதிகபட்சமாகும். 2வது இடத்தில் லோகேஸ் ராகுல் (66), வில்லியம்ஸன் (64) 3ம் இடத்திலும் உள்ளனர்.

**அதிக சிக்ஸர்:** டெல்லி அணி வீரர் ரிஷாப் பந்த் 37 சிக்ஸர்கள் அடித்ததே அதிகபட்சமாகும். 2வது இடத்தில் வட்ஸன் (35), 3வது இடத்தில் அம்பதி ராயுடு (34) உள்ளார்.

**அதிக அரைசதம்:** சன் ரைசர்ஸ் அணியின் கப்டன் வில்லியம்ஸன் 8 அரை சதம் அடித்துள்ளார். 2ம் இடத்தில் கே.எல் ராகுல் (6), டிவில்லியர்ஸ்(6) 3ம் இடத்திலும் உள்ளனர்.

**அதிக சதம்:** சென்னை சூப்பர் கிங்ஸ் வீரர் வட்ஸன் 2 சதங்கள் அடித்ததே அதிகபட்சமாகும்.

**விரைவு அரைசதம்:** கிங்ஸ் லெவன் வீரர் கே.எல்.ராகுல் டெல்லி அணிக்கு எதிராக 14 பந்துகளில் அரை சதம் அடித்ததே அதிவேக அரை சதமாகும்.

**விரைவு சதம்:** வட்ஸன் 51 பந்துகளில் சதம் அடித்ததே அதிவேக சதமாகும்.

**அதிகபட்ச ஸ்கோர்:** டெல்லி வீரர் ரிஷாப் பந்த் 128 ரன்கள் சேர்த்ததே அதிகபட்ச தனிநபர் ஸ்கோராகும்.

**சிறந்த் ஸ்டிரைக் ரேட்:** ராஜஸ்தான் வீரர் கிருஷ்ணப்பா கவுதம் 196.37 ஸ்டிரைக் ரேட்.

**மிகப்பெரிய சிக்ஸ்:** பெங்களூர் வீரர் டிவில்லி யர்ஸ் 111 மீட்டர் உயரத்துக்கு அடித்த சிக்ஸரே உயரமான சிக்ஸராகும்.

பந்துவீச்சு

**அதிக விக்கெட்:** கிங்ஸ்லெவன் வீரர் அன்ட்ரூ டை 14 போட்டிகளில் 24 விக்கெட்டுகள் வீழ்த்தியதே அதிகபட்சமாகும்.

**அதிக மெய்டன்:** சிஎஸ்கே வீரர் லுங்கி இங்கிடி 2 மெய்டன் ஓவர்கள் வீசியதே சிறப்பானதாகும்.

**அதிக டொட் போல்:** சன் ரைசர்ஸ் வீரர் ராஷித் கான் 17 போட்டிகளில் 68 ஓவர்கள் வீசி 167 டொட்பந்துகளை வீசியுள்ளதே சிறப்பானதாகும்.

**சிறந்த எக்கனமி:** ராஜஸ்தான் ரோயல்ஸ் வீரர் ஈஷ் சோதி ஒரு ஓவருக்கு 5.86 ரன்கள் கொடுத்ததே சிறந்த பந்துவீச்சு, எக்கனமி ஆகும்.

**அதிக வேகம்:** ராஜஸ்தான் அணி பந்துவீச்சாளர் ஜேப்ரா ஆர்சர் மணிக்கு 152 கி.மீ வேகத்தில் வீசியதே அதிவேக பந்துவீச்சாகும்.

**மோசமான பந்துவீச்சு:** சன் ரைசர்ஸ் அணியின் பந்துவீச்சாளர் பாசில் தம்பி ஆர்சிபி அணிக்கு எதிராக 4 ஓவர்களில் வீசி 70 ரன்கள் வாரிவழங்கியதே மோசமான பந்துவீச்சாகும். அடுத்த இடத்தில் உமேஷ் யாதவ் (59), ஷிவம் மவி (58) ரன்கள் விட்டுக்கொடுத்தனர்.




# கட்டுப்பாடு, தடைகள்... இறக்குமதியாளரிடம் கேட்க வேண்டிய 10 கேள்விகள்!

ஏற்றுமதி செய்தால் லாபம் கிடைக்கும்; நாட்டின் பொருளாதாரம் உயரும் என்பதெல்லாம் சரிதான். ஆனால், நமக்கே பற்றாக்குறையாக இருந்தால், எப்படி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முடியும், தனக்கு மிஞ்சியது போகத்தானே தானமும் தர்மமும்! எனவே, ஏற்றுமதித் தொழிலில் தடைகளும் கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டுள்ளன. அதனால் ஏற்றுமதித் தொழில் செய்யும் ஒருவர், தான் ஏற்றுமதி செய்யப்போகும் பொருளைத் தேர்ந்தெடுக்கும்முன், என்னென்ன பொருள்கள் ஏற்றுமதி செய்யத் தடை செய்யப்பட்டுள்ளன, என்னென்ன பொருள்கள் இறக்குமதி செய்வதற்குக் கட்டுப்பாடுகள் உள்ளன என்கிற விவரங்களை அறிந்து வைத்திருப்பது மிகவும் அவசியம். அவற்றை இப்போது பார்ப்போம்.

பொதுவாகவே, எந்தவொரு அரசும் தன்னிடம் இருக்கும் எல்லாப் பொருள்களையும் ஏற்றுமதி செய்ய அனுமதி கொடுத்துவிடாது. அப்படிப்பட்டக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதற்கு உள்நாட்டுத் தேவை, பற்றாக்குறை, மிக முக்கியமான வளங்கள் ஆகியவை காரணங்களாக உள்ளன. எந்தவொரு பொருளாக இருந்தாலும், நம்முடைய தேவைக்குப் போக மீதமிருந்தால்தான் ஏற்றுமதி செய்ய அனுமதிக்கப்படும். அதாவது, உற்பத்தி அதிகமாக இருக்க வேண்டும். உற்பத்தி குறைவாக இருக்கும்பட்சத்தில் ஏற்றுமதிக்கு அனுமதித்தால், உள்நாட்டில் பற்றாக்குறை ஏற்பட்டு விலையும் உயர்ந்துவிடும். இதனால் நாம் நம் நாட்டிலேயே உற்பத்தி செய்தும் அதிக விலை தந்து வாங்க வேண்டிய நிலை உண்டாகும்.

ஒருநாட்டின் அரசுதான் ஏற்றுமதியை அனுமதிக்கலாமா அல்லது கூடாதா என்கிற முடிவுகளை எடுக்கும். 'நான்தானே உற்பத்தி செய்கிறேன். என் இஷ்டப்படி வர்த்தகம் செய்ய எனக்கு உரிமையில்லையா?' என்றெல்லாம் யாரும் கேட்க முடியாது. அரசு நினைத்தால் எந்தப் பொருளுக்கும், எப்போது வேண்டுமானாலும் தடை போடலாம் அல்லது தடையை நீக்கலாம். அது நம் தேவை, உற்பத்தி அளவை வைத்தே முடிவு செய்யப்படும்.

உதாரணமாக, வல்லப்பட்டைகள். அவை அரிதானவை. ஆனால் உள்ளூரில் தாராளமாக சில சமயங்களில் விற்கப்படலாம். ஆனால் நாட்டிலுள்ளவற்றில் எது தாராளமாக கிடைக்கிறது, எது அரிதாககிடைக்கிறது, எதை ஏற்றுமதி செய்யலாம், எதை பாதுகாக்க வேண்டும் என்பதை அரசு தீர்மானிக்கும்..

### ஏற்றுமதியில் பொருள்களின் தடைகளும் அதன் வகைகளும்

ஏற்றுமதித் தொழிலில் பொருள்களுக்கான தடைகளையும் கட்டுப்பாடுகளையும் கீழ்க்கண்ட வகைகளின்படிதான் முடிவு செய்வார்கள்.

*1.* ஏற்றுமதி செய்யவே கூடாத பொருள்கள் (Prohibited Items) 2.ஏற்றுமதி செய்யலாம்; ஆனால் என்.ஓ.சி (ழிளிசி) இல்லாமல் செய்யக்கூடாது. 3. உரிமம் பெறாமல் ஏற்றுமதி செய்யக்கூடாது.

### 1. ஏற்றுமதி செய்யவே கூடாத பொருள்கள் (Prohibited Items)

இந்த வகையின் கீழ் பட்டியல் இடப்பட்டுள்ள எந்தவொரு பொருளையும் ஏற்றுமதி செய்ய முடியாது. இறக்குமதியும் செய்ய முடியாது. காரணம், இதன் கீழ்வரும் அனைத்துப் பொருள்களும் ஏற்றுமதி செய்யவோ, இறக்குமதி செய்யவோ முற்றிலும் தடை விதிக்கப்பட்ட பொருள்களாகும். உதாரணமாக, மண்டை ஓடு போன்றவற்றைச் சொல்லலாம். மேலும், இந்தப் பொருள்களை ஏற்றுமதி செய்யவோ, இறக்குமதி செய்யவோ விரும்பினால், கட்டாயம் அரசின் அனுமதி பெற வேண்டும்.

### 2. ஏற்றுமதி செய்யலாம். ஆனால், என்.ஓ.சி இல்லாமல் செய்யக்கூடாது

இந்த வகையின்கீழ் வரும் பொருள்கள் ஏற்றுமதி செய்ய அனுமதி பெற்றவைதான். ஆனால், இவற்றை என்.ஓ.சி. என்ற பிரச்னை இல்லா சான்றிதழைப் பெற்ற பின்பே அனுப்ப முடியும். என்.ஓ.சி சான்றிதழ் இல்லாமல் இந்தப் பொருள்களை ஏற்றுமதி செய்யவே கூடாது. உதாரணமாக, நிலக்கடலையைச் (Peanut) சொல்லலாம். இதற்கு என்.ஓ.சி வாங்கிய பின்பே ஏற்றுமதி செய்ய வேண்டும்.

### 3. உரிமம் பெறாமல் ஏற்றுமதி செய்யக்கூடாது (Restricted Items)

இந்தப் பிரிவின்கீழ் வரும் பொருள்களுக்கு ஏற்றுமதி செய்ய கட்டுப்பாடுகள் உள்ளன. இவற்றில் உரிமம் இருந்தால் மட்டுமே ஏற்றுமதிக்கு அனுமதிக்கப்படலாம். ஏற்றுமதி செய்யப்படும் அளவுக்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படலாம். உதாரணமாக, உயிருள்ள விலங்குகள். உயிருள்ள விலங்குகளை ஏற்றுமதி செய்வதாக இருந்தால் உரிமம் பெற்று மட்டுமே ஏற்றுமதி செய்ய வேண்டும். மேற்கண்ட மூன்று வகைகளிலும் இடம்பெறாத பொருள்கள், அதாவது ஏற்றுமதி, இறக்குமதிக்கு எந்தத் தடையும் அற்ற வர்த்தகத்துக்கு அனுமதிக்கப்பட்ட பொருள்களைத் (Free Items) தாராளமாக ஏற்றுமதி செய்யலாம். ஆனால், சில நாடுகளுக்கு ஆயுதங்கள் அனுப்புவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. முக்கியமாக, வைரம் ஏற்றுமதி செய்ய விரும்புபவர்கள் கிம்பெர்லி ப்ரோசஸ் (Kimberley Process) சான்றிதழ் பெற்றிருந்தால் மட்டுமே அனுப்ப முடியும்.

இதெல்லாம் முடிந்தால், அடுத்த விசயம் இறக்குமதியாளர் பற்றிய விசயம்.

ஏற்றுமதி செய்வதற்குமுன் உங்களுடைய பையர் (Buyer), அதாவது இறக்குமதியாளரிடம் நீங்கள் கேட்க வேண்டிய முக்கியமான பத்து கேள்விகள் உள்ளன. இந்தப் பத்து கேள்விகளுக்குமான பதில்களைப் பெற்ற பின்னரே ஏற்றுமதி செய்வதற்கான வேலைகளில் இறங்க வேண்டும்.

### 1. என்ன பொருள், எவ்வளவு?

இறக்குமதியாளருக்கு என்ன பொருள் தேவை, எவ்வளவு தேவை என்பதைக் கேட்க வேண்டும். மேலும், முக்கியமான அந்தப் பொருளில் பல்வேறு வகைகள் இருந்தாலோ, பல்வேறு தரத்தில் இருந்தாலோ என்ன வகை, என்ன தரத்தில் வேண்டும் என்பதையும் கேட்டுக்கொள்ள வேண்டும். பிறகு, அந்தப் பொருள் உங்களிடம் இருக்கிறதா அல்லது வாங்கி விற்கப் போகிறீர்களா என்பதை முடிவு செய்துகொள்ளுங்கள்.

### 2. எதில் அனுப்ப வேண்டும்?

கப்பல் வழிப் போக்குவரத்து, ஆகாய மார்க்கம், தரைவழிப் போக்குவரத்து என எதன் மூலம் இறக்குமதியாளர் பொருள்களைப் பெற விரும்புகிறார் என்பதைக் கேட்டுத் தெரிந்துகொண்டு அதற்கேற்ப பொருள்களை அனுப்பத் தயாராக வேண்டும். பொருள் சென்று சேரும் காலம் என்பது ஒவ்வொரு வகைப் போக்குவரத்துக்கும் மாறுபடும். அதையும் அவர்களிடம் கேட்டுத் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். பொருள்கள் சென்று இறக்குமதியாளரைச் சேரும் வரை

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

அவர் விரும்பும் தரத்தில், அவர் விரும்பும் விதத்தில் இருக்க வேண்டியது அவசியம். எனவே, இந்த விவரங்கள் குறித்து இறக்குமதியாளருக்குத் தெரிந்திருக்கவில்லை என்றால் நீங்களே அதை எடுத்துச் சொல்லலாம். அப்போதுதான் மீண்டும் நம்மிடம் அவர் பிசினஸ் செய்ய முன்வருவார்.

### 3. பேக்கிங் அளவு

பொருள்கள் என்ன அளவிலான பேக்கிங்கில் இறக்குமதியாளருக்குத் தேவை என்பதைக் கேட்டு தெளிவுபடுத்திக்கொண்டு, அதன்படி பேக்கிங் செய்ய வேண்டும். கிலோ கணக்கிலா, கிராம் கணக்கிலா, லிட்டரா, மில்லி லிட்டரா இப்படித் தெளிவாகக் கேட்டுத் தெரிந்துகொள்ளவும்.

### 4. என்ன வகை பேக்கிங்?

பொருள்களை என்ன வகை பேக்கிங்கில் அனுப்ப வேண்டும் என்பதையும் கேட்டுக்கொள்ள வேண்டும். காட்டன் பாக்ஸில் அனுப்ப வேண்டுமா, கன்னி பேக் (Gunny Bag) பேக்கிங்கா என்பதைக் கேட்டு அதற்கேற்ப பேக்கிங் செய்து அனுப்பலாம். மேலும், பொருள்கள் கெட்டுப் போகாத வகையில், பூச்சிகள் தாக்காத வகையில் தரமான பேக்கிங் இருக்க வேண்டும். எந்தப் பொருளுக்கு என்ன பேக்கிங் என்பதை ஏற்கெனவே விரிவாகத் தந்திருக்கிறோம்.

### 5. மொழி

பேக்கிங்கில் என்ன மொழி அச்சிடப்பட வேண்டும் என்பதையும் கேட்டுக்கொள்ள வேண்டும். ஏனெனில், பேக்கிங்கில் நாம் செய்யும் பிரின்டிங்தான் வாடிக்கையாளரைக் கவரும். பொருளின் பிராண்ட் பெயர், பொருளின் அளவு, உற்பத்தி இடம் உள்ளிட்ட விவரங்களை அச்சிடும் போது பொதுவான மொழியிலும், விற்பனை செய்யப்படும் இடத்தினுடைய மொழியிலும் அச்சிட வேண்டும். உதாரணமாக, வளைகுடா நாடுகளில் அரபு மொழியில் கட்டாயம் அச்சிட வேண்டும். பிரான்ஸ் நாட்டுக்கு ஃப்ரெஞ்ச், ஜெர்மனிக்கு ஜெர்மன் மொழி... இப்படி அந்த நாட்டு மொழியை அச்சிட வேண்டும்.




### 6. பேமென்ட் முறைகள்

பேமென்ட் முறைகள் பற்றியும் தெளிவாகக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும். பொருளை எப்படிக் கவனமாக அனுப்ப வேண்டுமோ, அதைவிடக் கவனமாக அனுப்பிய பொருளுக்கான பணத்தைப் பெற வேண்டும். எனவே, அட்வான்ஸ் பேமென்ட் பெறுவது, பொருளை அனுப்பி முடித்த பிறகு மீதமுள்ள தொகையைப் பெறுவது, லெட்டர் ஓஃப் கிரெடிட் மூலம் பெறுவது இப்படி எந்த முறையில் பேமென்ட் செய்யப்பட வேண்டும் என்பதைப் பேசிவிடுங்கள்.

### 7. இன்கோ டேர்ம்ஸ் (Incoterms)

சர்வதேச அளவிலான வர்த்தகங்களுக்குப் பல்வேறு இன்கோ டேர்ம்ஸ் (Incoterms) விதிமுறைகளைச் சர்வதேச வர்த்தக சபை வரையறுத்திருக்கிறது அது குறித்து இறக்குமதியாளரிடம் பேசி தெளிவுபடுத்திக் கொள்ளுங்கள். (பேமென்ட் முறைகள் பற்றியும் இன்கோ டேர்ம்ஸ் பற்றியும் பின்னர் விரிவாகச் சொல்வோம்)

### 8. எப்போது டெலிவரி?

பொருள்கள் எப்போது இறக்குமதியாளரைச் சென்று சேர வேண்டும் என்பதைக் கேட்டுக்கொள்ள வேண்டும். பொருள்களுக்கேற்ப டெலிவரி காலம் மாறும். இறக்குமதியாளர் எப்போது பொருள்களைப் பெறவிரும்புகிறாரோ அதற்கேற்ப பொருள்களை அனுப்புவதற்கான வழிமுறைகளைக் கையாள வேண்டும்.

### 9. என்னென்ன சான்றிதழ்கள் தேவை?

சில நாடுகளில் கடுமையான சட்டமுறைகள் உள்ளன. இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்குப் பல்வேறு சான்றிதழ்கள் அவசியமாக உள்ளன. பொருள்களின் தரம், தடை செய்யப்பட்ட பொருள்கள், கட்டுப்பாடுகள் உள்ள பொருள்கள் இப்படி பல்வேறு காரணங்களுக்காக நாம் அனுப்பும் பொருளுக்கான சான்றிதழ்கள், இறக்குமதியாளர்களுக்கு அவசியமாக உள்ளன. அவர்களிடம் என்னென்ன சான்றிதழ்கள் தேவை என்பதைக் கேட்டு, அந்தச் சான்றிதழ்களைத் தயார் செய்து அனுப்ப வேண்டும்.

### 10. எந்தத் துறைமுகத்துக்குப் பொருள்கள் வர வேண்டும்?

நாம் அனுப்பும் பொருள்கள், அந்த நாட்டின் எந்தத் துறைமுகத்தைச் சேர வேண்டும் என்பதை இறக்குமதியாளரிடம் கேட்டுக்கொள்ள வேண்டும். அப்போதுதான் அவர் எளிதில் பொருள்களைப் பெற முடியும். பெரும்பாலும் இறக்குமதியாளருக்கு அருகில் உள்ள துறைமுகமாக இருக்கலாம்.

இந்தக் கேள்விகளையெல்லாம் கேட்டால்தான் நீங்கள் புத்திசாலித்தனமான ஏற்றுமதியாளர். இந்தக் கேள்விகளுக்கெல்லாம் பதில் சொன்னால் தான், அவர் நம்பகமான இறக்குமதியாளர். எனவே, ஏற்றுமதி ஓர்டர் கிடைத்துவிட்டது என்று நீங்களே வானத்துக்கும் பூமிக்கும் குதிக்காமல், சரியான விதிமுறையைப் பின்பற்றி உங்கள் ஏற்றுமதியை வெற்றிகரமாக அமைத்துக் கொள்ளுங்கள்!

*(ஜெயிப்போம்)*

---

11-ம் பக்க தொடர்ச்சி...

சேவைகளின் விலைகளெல்லாம் அச்சமயத்தில் உச்சக் கட்டத்தை அடைவதுடன் முக்கிய சுற்றுலா நகரங்களெல்லாம் சன நெருக்கடியுடன் இருக்கின்றன. எனவே அந்த இரண்டு மாதங்களை தவிர்த்த நான்கு கோடை மாதங்கள் கிரவேஷியாவில் சுற்றிப்பார்ப்பதற்கு உகந்த மாதங்கள் எனலாம்.

எனது மகன் கதிருக்கு ஏழு வயதாக இருக்கும் போது 2015 இல் நாங்கள் கிரவேஷியாவில் ஸ்பிளிட் நகர விமான நிலையத்தில் இறங்கினோம். கடற்கரை மட்டுமல்ல அந்த நாட்டின் அழகு, உயரமான கரையோரங்களும் அதற்கு இணையான அழகானவை என்று விமானம் தரையிறங்கும்போதும் இறங்கியவுடன் நகரின் மத்திய பேருந்து நிலையத்துக்குப் பேருந்தில் பயணமானபோதும் புரிந்து கொண்டேன்.

அச்சமயத்தில் என் மகனுக்குப் பிடித்த விளையாட்டு "கிக் பைக்" மற்றும் சாகச ஓட்டத்துக்கான துவிச்சக்கர வண்டி. கிக்பைக் என்பது ஒரு காலால் உந்திக்கொண்டு மற்றக் காலை ஒரு தட்டில் வைத்துக்கொண்டு செலுத்தும் வண்டி. இரண்டுக்கும் உடம்பை மிகவும் சமநிலையாக வைத்திருப்பது அவசியம். தரை மட்டத்திலும் இடையிடையே இருக்கும் உயரமான இடங்களிலும் பாய்ந்துபாய்ந்து அவ் வண்டிகளில் விளையாடுவார்கள்.

நாங்கள் பேருந்தில் ஏறியதுமே ஒரு பக்கத்திலிருக்கும் மலைச்சாரல்களை பார்த்துக்கொண்டு அவைகளில் தனது துவிச்சக்கர வண்டியை எப்படியெல்லாம் செலுத்தி பாயலாம் என்று கற்பனை செய்து எனக்குச் சொல்லிக்கொண்டு வந்தான் அவன்.


சுவீடனில் இருந்து அதிகாலையில் புறப்பட்டு மதியத்துக்கு முன்பே ஸ்பிளிட் நகருக்கு வந்துவிட்டோம். சுற்றுலாப் பயணிகள் நிறைந்திருக்கும் ஆடிமாத நடுப்பகுதி அது. வெயிலும் நன்றாகவே கொழுத்தியது. ஆனால், கடற்கரைக் காற்று வெயிலை சமப்படுத்திச் சுகமான ஒரு உணர்வை உண்டாக்கியது. அதுவும் நாங்கள் சுவீடனின் ஆர்லாண்டா விமான நிலைய வாகன நிறுத்தத்தில் எங்கள் வாகனத்தை நிறுத்தும்போது குளிர் மழை கொட்டியது. வெளியே இறங்கி நனைந்து கொண்டே ஓடிப்போய் விமானப் பேருந்தில் ஏறியிருந்தோம் என்று நினைக்கும்போது ஸ்பிளிட் தந்த காலநிலை பிரத்தியேகமான உணர்வை உண்டாக்கியது.

ஸ்பிளிட் மத்திய பேருந்து நிலையம் நகரின் துறைமுகத்துக்கு அருகேயே இருந்தது. ஒரு பக்கம் பேருந்து நிலையம் மறுபக்கம் நீலக்கடலும் தனியாரின் உல்லாசப் படகுகளும் நிறுத்தப்பட்டிந்தன. கண்ணுக்கெட்டிய தொலைவிலேயே பயணிகள் கப்பல்களின் துறைமுகமும் இருந்தது.

எங்கே நோக்கினாலும் மக்கள் கடல். பெரும்பாலானவர்கள் கைகளில் ஏதாவது ஒரு வரைபடத்தையோ, நேர அட்டவணையையோ பார்த்துக் கொண்டிருந்தார்கள். நிலையத்தின் கட்டடத்தைத் தொடர்ந்து இரண்டு பக்கமும் உணவுச்சாலைகள் நிறைந்திருந்தன. எங்கள் திட்டம் டுப்ரோவ்னிக் நகரப் பயணம்.

கைகளில் பயணப் பெட்டிகளுடன் பேருந்து நிலையத்துக்குள் நுழைந்தோம். பெரும்பாலும் ஹ்ர்வாட்ஸ்கி மொழியிலேயே அறிவிப்புப் பலகைகள் இருந்தன. சுவீடனிலிருந்தே பேருந்து நேரங்களைப் பார்த்து வைத்திருந்தேன். இன்னொரு முக்கால் மணிநேரத்தில் புறப்படவிருக்கும் அந்தப் பேருந்துக்கான பயணச் சீட்டு எங்கே எடுப்பது, அவ்வண்டி வெளியே பரந்திருக்கும் 50 க்கும் குறையாத பேருந்து நிறுத்தங்களில் எவ்விடத்தில் வரும் அந்த வண்டி என்று எதுவுமே தெரியாத நிலைமை.

தொடரும்...





# நுண்ணுயிர்களைப் பெருக்கும் வித்தை!

## உதவிக்கு வரும் உயிரியல் 4

முனைவர் அ.உதயகுமார்


இந்த உலகம், மனிதர்களுக்கு மட்டுமானதல்ல; கண்ணுக்குத் தெரியாத நுண்ணுயிர்கள் உள்படக் கோடிக்கணக்கான உயிர்களுக்கும் உறைவிடம். நாங்கள்தான், உலகை ஆட்டிவைத்துக் கொண்டிருக்கிறோம் என எண்ணிக் கொண்டிருக்கிறான் மனிதன். ஆனால், உண்மையில் உலகை ஆட்டிவைப்பவை பூச்சிகளும், கண்ணுக்குத் தெரியாத நுண்ணுயிர்களும்தாம். நுண்ணுயிர்கள் என்றாலே மனிதனுக்கு எதிரானவை என்ற பொதுவான எண்ணம் உண்டு. உண்மையில் அப்படியில்லை. தனது அனைத்து படைப்பிலும் இரண்டு வாசல்களை வைத்தே இருக்கிறது, இயற்கை. ஒரு வாசல் அடைத்தால், இன்னொருவாசல் திறக்கும். அதன்படி, தீமை செய்யும் நுண்ணுயிர்களைக் கட்டுப்படுத்த, சில நன்மை செய்யும் நுண்ணுயிர்களையும் படைத்துள்ளது. அப்படிப்பட்ட நுண்ணுயிர்களைப் பற்றிய புரிதலை ஏற்படுத்துவதே இந்தத் தொடர்.



நுண்ணுயிர்கள்தாம் இந்தப் பூமியில் ஆதியில் தோன்றிய முதல் உயிரினங்கள். அவை, திடநிலையில் இருந்த ஒக்சிசனை சுவாசித்துக் கார்பன் டை ஒக்சைடை வெளியேற்றின. ஏற்கெனவே பூமியில் தண்ணீர், சூரிய ஒளி ஆகியவை இருந்ததால், இந்தக் கார்பன் டை ஒக்சைடைப் பயன்படுத்திப் பச்சையம் அதாவது, தாவரங்கள் உருவாயின. அப்படி முதன்முதலில் தோன்றியவைதான் பெரணி வகைத் தாவரங்கள். அவை, கார்பன் டை ஒக்சைடை எடுத்துக் கொண்டு வாயு நிலையில் ஒக்சிசனை வெளியேற்றின.

இந்த ஒக்சிசனை சுவாசிக்கக்கூடிய நம்மைப் போன்ற உயிரினங்கள் அதற்குப் பிறகுதான் தோன்றின என்கிறது, வரலாறு. தற்போது, புவிவெப்பமயமாதலால் அதிகம் பாதிப்புக்குள்ளாகி இருப்பவை, நுண்ணுயிர்கள்தாம். நுண்ணுயிர்கள் அழிந்தால், தாவரங்கள், உயிரினங்கள் என அனைத்தும் அழியும். ஒரு கிராம் மண்ணில் நூறு கோடி நுண்ணுயிர்கள் இருக்கின்றன. இந்த நுண்ணுயிர்கள், மண்ணுக்கும் உயிரினங்களுக்கும் பயிர்களுக்கும் உதவிக்கொண்டே இருக்கின்றன. அவற்றைக் காக்க வேண்டிய பணி நம்முன்னே பெரும் சவாலாக உருவெடுத்திருக்கிறது.

இத்தனை நன்மை செய்யும் நுண்ணுயிர்களை, வேளாண்மைக்குப் பயன்படுத்தலாம் என்பதை முதன் முதலில் கண்டுபிடித்தவர், சோவியத் ரஷ்யாவைச் சேர்ந்த விஞ்ஞானி, வினகராட்ஸ்கி. அவர் கண்டுபிடித்த, அசோஸ்பைரில்லம்தான் முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட உயிர் உரம். 1929ம் ஆண்டில் இது கண்டுபிடிக்கப் பட்டாலும், இன்னமும்கூட நம் விவசாயிகளை முழுமையாகச் சென்றடைய வில்லை என்பதுதான் வேதனை.



அசோஸ்பைரில்லத்துக்குப் பிறகுதான் ஒவ்வொரு சத்துகளையும் கரைக்கக்கூடிய நுண்ணுயிர்கள் பயன்பாட்டுக்கு வந்தன. சூடோமோனஸ், பாஸ்போ பக்ரீரியா எனப் பலவகையான உயிர் உரங்கள் இப்போது பயன்பாட்டில் உள்ளன. தமிழக விவசாயிகள், தற்போதுதான் உயிர் உரங்களை அதிகளவில் பயன்படுத்தத் தொடங்கியிருக்கிறார்கள்இ ஆனால் இலங்கையில் அதைப்பற்றிய சிறிய விழிப்புணர்வுகூட இல்லை.

செயற்கையாக நாம் கொடுக்கும் உயிர் உரங்கள் ஒரு புறம் இருந்தாலும், மண்ணில் உள்ள கோடிக்கணக்கான நுண்ணுயிர்கள்தாம் ஆண்டாண்டு காலமாக உழவர்களுக்கு உதவியாக இருந்து வருகின்றன என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இவற்றைக் காக்க நாம் என்ன செய்திருக்கிறோம் என்று யோசித்துப் பார்க்க வேண்டியது அவசியம்.

மனிதர்களுக்குத் தேவைப்படுவது போலவே, நுண்ணுயிர்களுக்கு உணவும் உறைவிடமும் அவசியம். மண்ணில் விழும் இலைதழைக் கழிவுகள் போன்ற மட்கும் பொருள்களைச் சிதைத்து, அதில் இருந்துதான் நுண்ணுயிர்கள் தங்களுக்கான உணவை எடுத்துக்கொள்கின்றன. அதைத்தான் நாம் 'மட்குதல்' என்கிறோம். ஒரு பொருளை மட்க வைத்து, தனது உணவுத் தேவையைப் பூர்த்திச் செய்தவுடன், அதைத் தாதுக்களாக மாற்றி, தாவரங்களுக்குக் கொடுக்கும் பணியைச் செய்கின்றன, நுண்ணுயிர்கள்.

பாரம்பர்யமாக விவசாயத்தில் பயன்படுத்தி வரும் தொழுவுரம், நுண்ணுயிர்களுக்கான ஆகச் சிறந்த உணவு. காலப்போக்கில் தொழுவுரங்களைக் குறைத்துவிட்டு, குப்பை உரங்கள் என்ற பெயரில் நகரத்துக் குப்பைகளைக் கொட்டுகிறோம். இதில், எளிதில் மட்காத பிளாஸ்டிக் உள்ளிட்ட பல பொருள்கள் கலந்திருக்கின்றன.

இவற்றைச் சிதைக்க முடியாததால், நுண்ணுயிர்களுக்கு உணவுப் பற்றாக்குறை ஏற்படுகிறது. நாம் இடும் உரங்களில் மூன்று பங்கு தாவரக் கழிவுகளும் (இலை தழைகள்), ஒரு பங்கு கால்நடை கழிவுகளும் கட்டாயம் இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் அது உரம். இல்லையென்றால் வெறும் குப்பைதான். மண்ணுக்கு நல்ல தொழுவுரம் கொடுத்தாலே, நுண்ணுயிர்களுக்குப் போதுமான உணவு கிடைப்பதுடன், மண்ணில் உள்ள அங்ககச் சத்துகளும் அதிகரிக்கும்.

பூமியெங்கும் இருந்த காடுகளையும் மரங்களையும் அழித்து கொங்கிரீட் காடுகளாக்கிக் கொண்டு இருக்கிறோம். அதனால், உணவுத் தட்டுப்பாடு போலவே, இருப்பிடமும் பெரும் பிரச்னையாக உருவெடுத்திருக்கிறது. காடுகள், மரங்கள் வேகமாக அழிக்கப்படுவதால் அதன் கீழே வாழ்ந்த நுண்ணுயிர்களும் அழிந்து போகின்றன. மேலும், மண்ணில் விழும் மட்கும் பொருள்களின் எண்ணிக்கையை விட, மட்காத பொருள்களின் எண்ணிக்கை அதிகரிப்பதும் நுண்ணுயிர்கள் அழிய முக்கியக் காரணம். இவற்றை மீட்டெடுக்க, நிலத்தில் தொழுவுரப் பயன்பாட்டை அதிகரிக்க வேண்டும். அதோடு, வேளாண் காடுகள் வளர்க்கப்பட வேண்டும். மரங்களை உள்ளடக்கிய விவசாயத்தை மேற்கொள்ள வேண்டும்.

தாவரங்களின் இலைதழைக் கழிவுகள்தான் நுண்ணுயிர்களுக்கான உயிராதாரம். அந்த ஆதாரத்தை நாம் உருவாக்கித் தர வேண்டும். நுண்ணுயிர்கள் மீது நாம் செலுத்தும் அதிபயங்கர வன்முறை, இரசாயனப் பயன்பாடு. ஏற்கெனவே, உணவில்லாமல் பட்டினியாய்கிடக்கும் நிலையில், இரசாயன உரங்களை மண்ணில் கொட்டுவது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதற்குச் சமமானது. இதனால், நுண்ணுயிர்கள் அழியுமே தவிர, பெருகாது. இரசாயன உரங்களால் மண்ணின் கார அமில நிலை மாறும்போது, அது நுண்ணுயிர்களையும் பாதிக்கும். வெப்பம், இரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லிகள், பூஞ்சணக் கொல்லிகள் போன்ற பல்வேறு காரணிகளால் நுண்ணுயிர் பெருக்கம் தடைபடுகிறது. இவை அனைத்தையும் குறைத்து, இயற்கை உரங்களை அதிகளவில் பயன்படுத்தினாலே நுண்ணுயிர்களைப் பெருக்கிவிடலாம்.

நுண்ணுயிர்களின் சேவை, மண்ணோடு நின்று விடுவதில்லை. உயிரினங்களின் உடல் உறுப்புகளிலும் இவை பணியாற்றுகின்றன. உதாரணமாக, நாம் உண்ணும் உணவைச் செரிக்க வைப்பது, குடலில் உள்ள 'லேக்டோபேசிலஸ்' எனும் நுண்ணுயிரி. தற்போது தாய்ப்பால் ஜீரணமாகாமல் குழந்தைகள் வாந்தியெடுக்கும் நிகழ்வுகள் அதிகம் நடக்கின்றன. இதற்குக் காரணம், 'லேக்டோ பேசிலஸ்' என்ற நுண்ணுயிரிக் குறைபாடுதான்.

நுண்ணுயிர்கள் அண்ட வெளியெங்கும் நீக்கமற நிறைந்திருக்கின்றன. காற்று, தண்ணீர், நிலம் என அனைத்து இடங்களிலும் இருக்கின்றன. நம் காலுக்குக் கீழே இருப்பது மண் மட்டுமல்ல... அதற்கும் கீழே கோடிக்கணக்கான உயிர்கள் இந்த உலகை உயிர்ப்புடன் வைத்திருப்பதற்காக ஓயாது உழைத்துக்கொண்டே இருக்கின்றன என்பதை நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

சமீபத்தில் நான் ஒரு பள்ளிக்குச் சென்றிருந்தபோது,'நுண்ணுயிர்களைப் பற்றித் தெரியுமா?' என மாணவர்களிடம் கேட்டேன். மூன்றாம் வகுப்பு படிக்கும் ஒரு சிறுமி எழுந்து, 'நுண்ணுயிர்கள்தான் இந்த உலகத்தின் துப்புரவாளர்கள்' எனச் சொன்னாள். என்னால் ஆச்சர்யப்படாமல் இருக்க முடியவில்லை. உண்மைதான், இந்த உலகத்தின் துப்புரவாளர்களைப் பற்றிக் குழந்தைகள் தெரிந்து வைத்திருக்கிறார்கள். ஆனால் நாம்?


பரவும்




### முட்டை கிரேவி

**தேவையானவை:** முட்டை 6, பெரிய வெங்காயம் 2, இஞ்சி பூண்டு விழுது 2 டீஸ்பூன், கரம் மசாலாத்தூள் கால் டீஸ்பூன், மல்லித்தூள் 2 டீஸ்பூன், மிளகாய்த்தூள் ஒரு டீஸ்பூன், மிளகுத்தூள் கால் டீஸ்பூன், மஞ்சள்தூள் சிறிதளவு, கொத்தமல்லித்தழை, கறிவேப்பிலை சிறிதளவு, பட்டை, கிராம்பு தாளிக்க (சிறிதளவு), ஏலக்காய் ஒன்று, நெய் ஒரு டீஸ்பூன், எண்ணெய் ஒரு டேபிள்ஸ்பூன், உப்பு தேவைக்கேற்ப.

**அரைக்க:** (நைசாக ஒன்றாக அரைக்கவும்) தக்காளி 2, சின்ன வெங்



காயம் 10, சீரகம், சோம்பு தலா அரை டீஸ்பூன், முந்திரி 4, கசகசா ஒரு டீஸ்பூன், தேங்காய்த் துருவல் 3 டீஸ்பூன்.

**செய்முறை:** முட்டையை வேக வைத்து ஓடு நீக்கி இரண்டாக வெட்டிவைக்கவும். வாணலியில் எண்ணெய் ஊற்றி, பட்டை, கிராம்பு, ஏலக்காய், கறிவேப்பிலை தாளித்து, நறுக்கிய பெரிய வெங்காயம், இஞ்சி பூண்டு விழுது சேர்த்து வதக்கவும். கரம் மசாலாத்தூள் முதல் மஞ்சள்தூள் வரை சேர்த்து, அரைத்த விழுதையும் சேர்த்து, உப்புப் போட்டு நன்கு சுருள வதக்கவும். பிறகு, நறுக்கிய முட்டைகளைச் சேர்த்து உடையாமல் புரட்டி, நெய் சேர்க்கவும். சிறிதளவு தண்ணீர் சேர்த்து, தீயைக் குறைத்து, ஐந்து நிமிடங்கள் கழித்து இறக்கி, கொத்தமல்லித்தழை தூவிப் பரிமாறவும்.

### முட்டைப் பணியாரம்

**தேவையானவை:** முட்டை 4, கடலைமாவு 2 டீஸ்பூன், பெரிய வெங்காயம், பச்சை மிளகாய் தலா 2 (மிகவும் பொடியாக நறுக்கியது)



நறுக்கிய கொத்தமல்லித்தழை சிறிதளவு, எண்ணெய், உப்பு தேவையான அளவு.

**செய்முறை:** கடலைமாவைச் சிறிதளவு தண்ணீர்விட்டுக் கரைத்து, அதனுடன் மற்ற பொருள்களையும் (எண்ணெய் தவிர) சேர்த்து, கரண்டியால் நன்கு கலக்கிவைக்கவும். பிறகு, பணியாரக்கல்லை அடுப்பில் வைத்து, மாவைப் பணியாரங்களாக ஊற்றி, எண்ணெய்விட்டுத் திருப்பிப் போட்டு வேகவிட்டு எடுக்கவும் (அடுப்பை மிதமான தீயில்வைத்துத் தயார் செய்யவும்).

### முட்டை தக்காளி அடை

முட்டை, தக்காளி தலா 2, துவரம்பருப்பு, கடலைப்பருப்பு, அரிசி



தலா 100 கிராம், சோம்பு ஒரு டீஸ்பூன், பூண்டு 2 பல், காய்ந்த மிளகாய், எண்ணெய், உப்பு தேவையான அளவு. மாவுடன் கலக்கத் தேவையானவை: பெரிய வெங்காயம் ஒன்று (பொடியாக நறுக்கவும்), கொத்தமல்லித்தழை, கறிவேப்பிலை தலா ஒரு டீஸ்பூன் (நறுக்கியது), தேங்காய்த் துருவல் ஒரு டேபிள்ஸ்பூன், மஞ்சள்தூள் கால் டீஸ்பூன்.

**செய்முறை:** அரிசி, பருப்பு வகைகளை இரண்டு மணி நேரம் ஊறவைத்துக் களைந்து, சோம்பு, பூண்டு, காய்ந்த மிளகாய், தேவையான உப்பு சேர்த்து மிக்ஸியில் அரைக்கவும். இறுதியாக, தக்காளி சேர்த்து அரைத்து எடுக்கவும். இந்த மாவுடன், கலக்கக் கொடுத்துள்ள பொருள்களைச் சேர்த்து நன்கு கலந்துவைக்கவும். பிறகு, ஒரு பாத்திரத்தில் முட்டையை உடைத்து ஊற்றி, நன்கு அடித்து, அதை மாவுக் கலவையில் சேர்க்கவும். தோசைக்கல்லைச் சூடாக்கி, எண்ணெய்விட்டு மாவை அடையாக ஊற்றி, இருபுறமும் திருப்பிவிட்டு நன்கு வெந்ததும் எடுத்துப் பரிமாறவும்.

### எக் வெஜிடபிள் நூடுல்ஸ்

**தேவையானவை:** முட்டை 3, பிளெய்ன் நூடுல்ஸ் 200 கிராம், பெரிய வெங்காயம் ஒன்று (நீளவாக்கில் நறுக்கவும்), நீளவாக்கில் நறுக்கிய கேரட் ஒரு டேபிள்ஸ்பூன், முட்டைகோஸ், குடமிளகாய், தக்காளி தலா ஒன்று (நீளவாக்கில் நறுக்கவும்), இஞ்சி சிறு துண்டு (தோல் சீவி, பொடியாக நறுக்கவும்), பூண்டு 6 பல் (பொடியாக நறுக்கவும்), நறுக்கிய கொத்தமல்லித்தழை சிறிதளவு, மிளகாய்த்தூள் தேவையான அளவு, மஞ்சள்தூள் 2 சிட்டிகை, மிளகுத்தூள் சிறிதளவு, கரம் மசாலாத்தூள் கால் டீஸ்பூன், சோயா சாஸ், டொமேட்டோ சாஸ் தலா ஒரு டீஸ்பூன், நெய் 2 டீஸ்பூன், எண்ணெய் ஒரு டேபிள்ஸ்பூன், உப்பு தேவையான அளவு.


**செய்முறை:** ஒரு கப் நூடுல்ஸில் 2 கப் தண்ணீர்விட்டு வேகவைத்து, தண்ணீரை வடிக்கவும். குளிர்ந்த நீரில் மூன்று நிமிடங்கள் போட்டு, தண்ணீரை நன்கு வடித்து எடுத்துக் கொள்ளவும். பிறகு, முட்டையை உடைத்து ஒரு பாத்திரத்தில் ஊற்றிச் சிறிதளவு உப்பு, மிளகுத்தூள் கலந்து, ஒரு வாணலியில் சிறிது எண்ணெய்விட்டு, வறுத்துத் தனியே வைக்கவும். பிறகு, ஒரு வாணலியில் நெய், எண்ணெய்விட்டு, நறுக்கிய வெங்காயம், இஞ்சி, பூண்டு, தக்காளி சேர்த்து வதக்கவும். கேரட், முட்டைகோஸ், குடமிளகாய் சேர்த்து நன்கு வதக்கி, மஞ்சள்தூள்,



மிளகாய்த்தூள், கரம் மசாலாத்தூள், உப்பு சேர்த்துக் கிளறவும். பிறகு சோயா சாஸ், டொமேட்டோ சாஸ் சேர்த்து, வறுத்த முட்டை மற்றும் வேகவைத்த நூடுல்ஸ் சேர்த்துப் புரட்டவும். அடுப்பைச் சிறு தீயில் வைத்து ஐந்து நிமிடங்கள் வேகவிட்டு, கொத்தமல்லித்தழை தூவி, இறக்கிப் பரிமாறவும் (நூடுல்ஸ் சேர்த்ததும் உடையாமல் மெதுவாகப் புரட்டவும்).

### முட்டை வெஜிடபிள் சப்பாத்தி

**தேவையானவை:** முட்டை 4, சப்பாத்தி 6, பெரிய வெங்காயம் 2



(நறுக்கவும்), தக்காளி 2 (பொடியாக நறுக்கவும்), சின்ன வெங்காயம் 10 (ஒன்றிரண்டாகத் தட்டவும்), இஞ்சி பூண்டு விழுது, மல்லித்தூள் (தனியாத்தூள்) தலா ஒரு டீஸ்பூன், மிளகாய்த்தூள் தேவையான அளவு, மஞ்சள்தூள் சிறிதளவு, கரம் மசாலாத்தூள் கால் டீஸ்பூன், கொத்தமல்லித்தழை சிறிதளவு, மிளகுத்தூள் சிறிதளவு, சோம்பு அரை டீஸ்பூன், கறிவேப்பிலை சிறிதளவு, எண்ணெய், உப்பு தேவையான அளவு.

**செய்முறை:** சப்பாத்திகளைச் சிறிய துண்டுகளாக்கிவைக்கவும். வாணலியை அடுப்பில் ஏற்றி, எண்ணெய்விட்டுச் சோம்பு தாளித்து, கறிவேப்பிலை

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

13-ம் பக்க தொடர்ச்சி...

தென்னிலங்கை சிங்கள கட்சி களோடு இருக்கிறார்கள். தமிழர் களிற்கும், தமிழை தாய் மொழியாக கொண்ட முஸ்லிம்களிற்குமிடையில் எந்த வேறுபாடும் கிடையாது. தமிழ் மீது எனக்குள்ள உரிமை ஒவ்வொரு முஸ்லிம் சகோதரனுக்கும், சகோதரிக்கும் உள்ளது. 1956 தொடக்கம் 1960 இன் பிற்பகுதி வரை தமிழர்களின் ஆதரவுடன் தமிழரசுக்கட்சியின் ஊடாக எம்.எஸ்.காரியப்பர், முஸ்தபா, எம்.சி.அஹமட், எம்.ஏ.எச்.முஹமட் அலி போன்றவர்கள் பாராளுமன்றம் சென்றனர்.

1961சத்தியாக்கிரக போராட்டத்தில் முஸ்லிம்கள் சகோதரிகள் குழந்தையை கைகளில் ஏந்தியபடி வந்து கலந்து கொண்டனர்.

நாங்கள் அந்த பொற்காலத்திற்கு திரும்பி செல்ல முடியும். விட்டுக் கொடுப்பு அவசியம். தமிழர் தரப்பு பெரிதாக விட்டுக்கொடுக்க வேண்டும். தமிழினம் என்ற வரையறைக்குள் முஸ்லிம் மக்களும் அடங்குகிறார்கள் என்பதை புரிந்துகொள்ள வேண்டும். ஆனால் முஸ்லிம் மக்களை தொடர்ந்து எம்மிலிருந்து பிரிக்க அந்த தரப்பிலேயே பல சுயநல அரசியல்வாதிகள் முயன்றுகொண்டிருக்கிறார்கள்.

கிழக்கில் தமிழர்களும், முஸ்லிம்களும் பின்னிப்பிணைந்து வாழ்கிறார்கள். நிலப்பரப்பை பிரித்தொடுக்க முடியாது. இந்த விசயத்தில் நாம் பாரிய விட்டுக்கொடுப்புக்களை செய்ய தயாராக இருக்க வேண்டும். ஆனால் தங்களுடைய தலைவிதியை முஸ்லிம் மக்களே தீர்மானிக்க வேண்டும். இதேபோல கிழக்கிலுள்ள தமி மக்கள் அம்பாறையை சேர்ந்த மக்கள் தங்களுடைய தலைவிதியை தீர்மானிக்க வேண்டும். ஒரே நாட்டுக்குள்தான் தீர்வு என்றால், அது அம்பாறை மக்களும் ஏற்றுக்கொள்ளும் தீர்வாகவே அமைய வேண்டுமென்பதில் நாம் உறுதியாக இருக்கிறோம்.. அம்பாறை தமிழ் மக்களை பலிகொடுத்து வடகிழக்கு ஒன்றுமையை சாதிக்க மாட்டோம். 1990களில் கூட இப்படியான முயற்சியொன்று செய்யப்பட்டபோது ரெலோ எதிர்த்து நின்றது.


தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் ஒன்றுபட்டு வாழ வேண்டும். சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்கள் முன்வைக்கும் யோசனையை தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆக்கபூர்வமாக பரிசீலிக்கும். நாங்கள் ஒரு உடன் பாட்டிற்கு வர முடியும். அது சாத்தியமானதே.

**தீபம்: தமிழ்தேசிய கூட்டமைப்பின் அடுத்த வடமாகாணசபை வேட் பாளர் யார்?**

என்.சிறீகாந்தா: மாகாணசபை இன்னும் கலைக்கப்படவில்லை. ஆனால் விரைவில் கலைக்கப்பட்டு தேர்தல் வரும். அப்பொழுது, நிச்சய மாக கூட்டமைப்பு புதியவாரு வரை முதலமைச்சர் வேட்பாளராக நியமிக்கும். விக்னேஸ்வரன் மீது எமக்கு தனிப்பட்டரீதியில் மரியாதை யுண்டு. அவர் நேர்மையானவர். ஆனால் அவருடைய அரசியல் தலை மைத்துவத்தை எம்மால் சிந்தித்து பார்க்க முடியவில்லை. அவர் அரசி யலுக்கு புதியவர். அவரை அங்குமிங்கும் இழுத்துக்கொண்டு, தமது தனிப்பட்ட அரசியல் நிகழ்ச்சிநிரலை அரங்கேற்ற பலர் முயற்சிக்கிறார்கள். அதற்கு நாம் இடமளிக்க முடியாது.

அடுத்த முதலமைச்சர் வேட்பாளர் புதியவராக இருப்பார். எமது கட்சியை பொறுத்தவரை, அவர் போதுமான அரசியல் அனுபவம் கொண்டவராகவும், அங்கத்துவ கட்சிகளின் ஏகோபித்த ஆதரவை கொண்டவராக இருப்பார் என்பது தான் எமது நம்பிக்கை.

ஆனால் அதே நேரத்தில் இவரா அவரா என்ற ஊகங்களிற்கு நான் பதிலளிக்கவில்லை. ஆனால் நிச்சயம்



தமிழரசுக்கட்சியை சேர்ந்தவரா கத்தான் இருப்பார். ஏனெனில் எமது அணியில் கூட்டமைப்பில் முதலாவ தாக பெயரெழுதிய கட்சியென்பதால் அந்த சந்தர்ப்பம் அவர்களுடையது. சரியான, நாமெல்லோரும் ஏற்றுக் கொள்ளும் ஒருவரை முன்மொழிய வேண்டியது அவர்களுடைய கடமை. ஏற்றுக்கொள்ள முடியாத தெரிவென்றால் நிச்சயம் நிராகரிப்போம். தமிழரசுக்கட்சியினால் ஒன்றிற்கு மேற்பட்ட பெயர்களை முன்மொழிய முடியும்.

நாங்கள் ஏற்றுக்கொள்ளும் வேட் பாளரை அவர்களால் தர முடிய வில்லையென்றால் ரெலோ, புளொட், ஜனநாயக போராளிகள் ஆகிய கூட்டமைப்பின் மற்ற கட்சிகள் சேர்ந்து ஒரு தகுதியான வேட்பாளரை எங்களால் முன்மொழிய முடியும்.

ரெலோவில் இருந்துகூட ஒரு வரை என்னால் முன்மொழிய முடியும். அனுபவமுள்ள, அரசியல் துணிச்சலுள் ளவர் இருக்கிறார். அதேபோல புளொட்டிலும் தகுதியான வேட் பாளர்கள் உள்ளனர். ஆனால் இவர்கள் கனவில்கூட இதை சிந்திக்கவில்லை.

தமிழரசுக்கட்சிதான் வேட்பாளரை பெயரிட வேண்டுமென நாம் கோருகி றோம். ஆனால் அந்த வேட்பாளர் ஜனரஞ்சகமானவராக, அரசியல் கவர்ச்சியுடையவராக, மக்களின் நம்பிக்கையை மேலும் கட்டியெழுப்ப கூடியவராக இருக்க வேண்டும்.

நாங்கள் வழிவழியாக சிந்தித்துக் கொண்டிருக்ககூடாது. கொஞ்சம் புரட்சிகரமாகவும் சிந்திக்க வேண்டும். எம்மில் பலருக்கு ஆயுட்காலம் நெருங் கிக்கொண்டிருக்கிறது. சம்பந்தன் ஐயாவிற்கு 85 வயது. விக்னேஸ்வரன் ஐயாவிற்கு 79 வயது, மாவை அண்ணன் கூட 75ஐ கடந்துவிட்டார். நானும், சித்தார்த்தனும் 60 இன் பிற்பகுதியில் இருக்கிறோம். எங்களிற்கு பின்னால் வந்த பிரேமச்சந்திரன், சிவாஜி லிங்கம் போன்றவர்கள் 60ஐ தாண்டி யுள்ளனர். போராட்ட இயக்கத்தில் வந்த ஏனைய தலைவர்களும் 50ஐ கடந்து விட்டார்கள். இந்த விடயத்தில் நாங்கள் கொஞ்சம் புரட்சிகரமாக சிந்திக்க வேண்டும். வயது ஒரு பிரச்சனையல்ல. நாற்பதின் ஆரம்பத்தில்உள்ள ஒருவரை கூட முதலமைச்சர் வேட்பாளராக நியமிக்கலாம். தேவைப்பட்டால் பெண் மணியை கூட நிறுத்தலாம்.

பம்பரம் போல சுழன்று மக்களிற்கு சேவையாற்ற கூடியவராகவும், வெற்றி வேட்பாளராகவும் இருக்க வேண்டும். இந்த தெரிவின் மூலம் அடுத்த தலை முறையிடம் இந்த போராட்டத்தை கையளிக்கும் விதமாகவும் செயற் படலாம். வடமாகாண முதல்வராக வருபவர் வடமாகாணத்தோடு தன்னை மட்டுப் படுத்திக் கொள்ள வேண்டும். தமிழ் தேசிய அரசியலை கூட்டமைப்பின் தலைவர்கள் தீர்மானிப்பார்கள். வடமாகாண முதலமைச்சரென்பது தமிழின அரசியல் தலைமைக்கான ஏணியல்ல.

**தீபம் : ஒருவேளை மாவை சேனாதிராசா வேட்பாளரெனில் அது சிறந்த தெரிவாக இருக்குமா? அதைவிட சிறந்த தெரிவுகள் கூட்டமைப்பற்குள் இருக்க வாய்ப் புண்டா?**

**என்.சிறீகாந்தா:** மாவை சிறந்த வேட்பாளரென்பதில் இரண்டாவது கருத்தில்லை. இன்றுள்ள தமிழ் அரசியல் தலைவர்களில், நீண்ட அரசியலனுபவமுள்ள விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரில் மாவை யும் ஒருவர். அவர் சிறையிலே துன்பப் பட்டவர். மரணத்தின் வாசலுக்கு கடைசிப்படிக்கு சென்று மீண்டவர். முதலமைச்சராகுவதற்கான சகல தகுதி யும் அவருக்குண்டு. ஆகவே, அவரது பெயரும் கட்டாயமாக பரிசீலிக்கப் படும். தமிழரசுக்கட்சியின் முதலமைச் சர் வேட்பாளர் பட்டியலிலுள்ள பெயர்களில் ஒன்றாக அவரது பெயரும் உள்ளது. அதில் ஒளிவுமறைவுக்கு இடமில்லை. ஒருவேளை அவரும் நிறுத்தப்படலாம். ஒருவேளை!

**தீபம் : மாவை சேனாதிராசா வேட்பாளராக நிறுத்தப்பட்டால் ரெலோ ஆதரிக்குமா?**

**என்.சிறீகாந்தா:** நாங்கள் ஒரு முடிவை எடுத்தால் பின்வாங்க மாட் டோம். ஆனால் முடிவெடுப்பதற்கு முன்னர் நான் கூறிய விசயங்களை பலமுறை சிந்திப்போம். அவரை ஆதரிப்போமா இல்லையா என்பது கேள்வியல்ல. அவரை வேட்பாளராக நிறுத்துவதென்றால், அது எங்களின் ஆதரவுடன்தான் நிறுத்த முடியும்.

**தீபம் : அடுத்த வடமாகாணசபை தேர்தலில் விக்னேஸ்வரன் தலை மையில் ஒரு கூட்டணி அமைக் கப்பட்டால், ரெலோ அதில் இணைய வாய்ப்பில்லை?**

**என்.சிறீகாந்தா:** நிச்சயமாக இல்லை. அப்படியொரு கூட்டணி வந்தால், அதை சந்திக்க நாங்கள் தயாராக இருக்கிறோம்.

**தீபம் : கடந்த உள்ளூராட்சி தேர்தலில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் வாக்குகளில் சடுதியான அதிகரிப்பு தெரிந்தது. தமிழ் தேசிய கூட்டமைப்பின் மீதான விமர்சனம்தான் இதற்கு காரணமாக இருக்குமா?**

**என்.சிறீகாந்தா:** அதற்கு பல காரணங்கள் உள்ளன. வேட்பாளரின் தனிப்பட்ட செல்வாக்கையும் புறக்க ணிக்க முடியாது. ஒரு வட்டாரத்தில் எங்களுடைய வேட்பாளராக வயது முதிர்ந்த ஒரு பென்சன் காரரை நிறுத்தினால், எதிர்த்தரப்பிலுள்ள இளைஞர் அவரை சுலபமாக தோற்கடிப்பார். ஆரம்பத்திலேயே நான் கூறியுள்ளேன். எங்களை நாங்கள்தான் தோற்கடித்துள்ளோம். உள்ளூராட்சி தேர்தலில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி பெற்ற வாக்குகளை, அடுத்த மாகாணசபை தேர்தலில் பெற மாட்டாது, பெற முடியாது. இதுதான் அவர்களுடைய உச்சம். எதிர்பாராமல் கிடைத்த வாக்குகள். தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கு உள்ளூராட்சி தேர்த்லில் விழுந்த வாக்குகளில் கணிசமானவை எங்களுடையவை. அடுத்த தேர்தலில் அவற்றை நாம் எடுப்போம்.

---

சேர்க்கவும். பெரிய வெங்காயம் சேர்த்து வதக்கி, ஒன்றிரண்டாக அரைத்த சின்ன வெங்காயம், இஞ்சி பூண்டு விழுது சேர்த்து நன்கு வதக்கவும். நறுக்கிய தக்காளி மற்றும் மல்லித்தூள், மஞ்சள்தூள், மிளகாய்த்தூள், கரம் மசாலாத்தூள், கொத்தமல்லித்தழை சேர்த்து நன்கு சுருள வதங்கியதும், வாணலியின் ஓரமாக ஒதுக்கிவைக்கவும். பிறகு, வாணலியின் நடுவில் 2 டீஸ்பூன் எண்ணெய்விட்டு முட்டைகளை உடைத்து ஊற்றி, வறுத்து, ஓரமாக ஒதுக்கிவைத்த மசாலாவுடன் சேர்க்க வும். அதன்பின்னர், துண்டுகளாக்கிய சப்பாத்தியைச் சேர்த்து நன்கு புரட்டி, தீயைக் குறைத்து, அடுப்பை மூன்று நிமிடங்கள் சிறு தீயில் வைக்கவும். கொத்தமல்லித்தழை, மிளகுத்தூள் தூவி, இறக்கிப் பரிமாறவும்.

முட்டையுடன் கேரட், பீன்ஸ், முட்டைகோஸ் சேர்த்தும் செய்யலாம்.


**முட்டை ஸ்வீட் பணியாரம்**

**தேவையானவை:** முட்டை ஒன்று, மைதா, ரவை, அரிசி மாவு தலா ஒரு டேபிள்ஸ்பூன், சர்க்கரை 2 டேபிள்ஸ்பூன், பால் ஒரு



டேபிள்ஸ்பூன், தேங்காய்த் துருவல் ஒரு டேபிள்ஸ்பூன், ஏலக்காய்த்தூள் சிறிதளவு, நெய் தேவையான அளவு.

**செய்முறை:** ஒரு பாத்திரத்தில் முட்டையை உடைத்துப்போட்டு, நெய் தவிர்த்து மற்ற அனைத்துப் பொருள்களையும் சேர்த்து நன்றாகக் கலக்கவும். சிறிதளவு தண்ணீர் சேர்த்து, இட்லி மாவுப் பதத்துக்குக் கரைத்து, அரைமணி நேரம் ஊறவிடவும். பிறகு, பணியாரக்கல்லை அடுப்பில் ஏற்றி, நெய்விட்டு, ஒவ்வொன்றாக எல்லாக் குழிகளிலும் மாவு விடவும். அடுப்பை மிதமான தீயில் வைத்து, பணியாரத்தைத் திருப்பிப்போட்டு, மீண்டும் சிறிது நெய் ஊற்றி, இருபக்கமும் சிவந்ததும் எடுக்கவும்.





# உலக யன்னல்

தேசமித்ரன்

“ஆகுமா, ஆகாதா, ஆகினால் என்னாகும் ஆகாவிட்டால் என்னாகும்?” என்ற கேள்வி ஒன்றாக சர்வதேசரீதியில் ஒரு கேள்வி ஒன்று குழப்பிக் கொண்டிருந்தது, இதை நான் எழுதிக் கொண்டிருக்கும் போதும் தொடர்கிறது. அது 12.06 சிங்கப்பூரில் நடக்கப் போவதாக அறிவிக்கப்பட்ட டிரம்ப் கிம்யொங் உன் சந்திப்பாகும்.

“சரித்திரத்தில் ஒரு வேதனையான நிகழ்வு” என்று சொல்லி திட்டமிடப்பட்டிருந்த தனது சந்திப்பை நிறுத்தி விட்டதாக அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் அறிவித்தார்.

“நீங்கள் சமீபத்தைய அறிக்கைகளில் காட்டிவரும் வெறுப்பும், விரோத மனப்பான்மையும் நாங்கள் திட்டமிட்டிருந்த நேரடிச் சந்திப்பை இப்போதைக்கு நடாத்துவது பிரயோசனமில்லை என்று காட்டுகிறது,” என்று கிம்யொங் உன்னுக்கு வெள்ளை மாளிகையிலிருந்து அதிகாரபூர்வமாகச் செய்தி அனுப்பப்பட்டது.

ஓரிரு வாரங்களுக்கு முன்பு தென்கொரியா, அமெரிக்க இராணுவத்துடன் சேர்ந்து நடத்திய இராணுவப் பயிற்சிகளை சுட்டிக்காட்டி வடகொரியா தான் தென்கொரியாவுடன் நடத்தவிருந்த சந்திப்பொன்றை நிறுத்தி விட்டது. அது அமெரிக்க வடகொரியச் சந்திப்பு நிறுத்தப்படுவதற்கான சைகை என்று கணித்த டிரம்ப், தனது முடிவை எடுத்து அறிவித்தார்.

இதற்குக் காரணம் சீனாவாக இருக்கலாம் என்று தான் சந்தேகப்படுவதாக டிரம்ப் தெரிவித்திருக்கிறார். சமீபத்தில் வடகொரிய அதிபரும் சீனாவும் சந்தித்த பின்புதான் வடகொரிய அதிபரின் நடப்புக்கள் விரோதமாக மாறியிருப்பதை தான் கவனிப்பதாக டிரம்ப் தெரிவித்திருக்கிறார்.

அதேசமயம் வடகொரியா தனது அணு ஆயுதப் பரிசோதனைகளை செய்த ஆராய்ச்சி சாலையை இன்று சர்வதேச நிருபர்களை அழைத்து அவர்கள் முன்பு தரைமட்டமாக்கியது. அது பற்றிய எவ்வித சொந்த ஆராய்வுகளை செய்ய வடகொரியா அனுமதிக்கவில்லை. நிருபர்கள் தங்களுடன் கொண்டு போயிருந்த செயற்கைக்கோள் தொலைபேசிகளும், அணுசக்தி ஆராய்வுக் கருவிகளும் வடகொரிய இராணுவத்தால் கைப்பற்றப்பட்டன.

தகர்க்கப்பட்ட ஆராய்ச்சி நிலையம் ஒருவேளை பாவிப்புக்கு உகந்ததாக இல்லாததாகியிருக்கலாம், அல்லது வடகொரியா ஏற்கனவே தனது பேச்சுவார்த்தைகளில் பாவிப்பதற்கு ஏற்றபடி தேவையான அளவு அணு ஆயுதங்களை தயாரித்து முடித்திருக்கலாம் என்று அரசியல் வல்லுனர்கள் தெரிவிக்கிறார்கள்.

ஆனால், அமெரிக்காவின் உத்தியோகபூர்வமான சந்திப்பு நிறுத்தல் அறிவிப்பு வந்தவுடன் சீனா அதற்கு வருத்தம் தெரிவித்தது. அதையடுத்து வடகொரிய அதிபர், “சந்திப்பு நடத்தி எங்கள் அணு ஆயுதங்களையெல்லாம் அழித்து விடலாம், உலகத்துக்கு நல்லது நடந்திருக்குமே” என்று அங்கலாய்ப்பு தெரிவித்ததாகச் செய்தி வர, படபடவென்று காரியங்கள் நடக்க ஆரம்பித்தன.

வடகொரியா அதிகாரிகள் மீண்டும் தென்கொரிய அதிகாரிகளை தங்கள் எல்லைகளில் சந்தித்ததாகச் செய்திகள் வந்தன. அதையடுத்து முழு நம்பிக்கையில்லாத நிலையில் அமெரிக்க அதிகாரிகளும் வடகொரிய அதிகாரிகளும் சந்தித்திருக்கின்றனர். திட்டமிட்ட நாளில், இடத்தில் அமெரிக்க வடகொரிய அதிபர்கள் சந்திப்பு நடக்கும் என்று தற்போதைய நிலையையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஐரோப்பிய அளவில் ஆகுமா, ஆகாதா என்ற சந்தேகத்தில் இரண்டுமாதங்களாக இழுபறியில் இருந்த விடயம் இத்தாலியில் ஒரு அரசு அமையுமா இல்லையா என்பதாகும். ஒருவழியாக குசேப்பெகொன்தெ என்ற சட்ட வல்லுனரை 5 நட்சத்திரக் கட்சியும், லாலீகா அணியும் பிரேரித்து ஜனாதிபதியால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பதாகச் செய்திகள் வந்த சூடு ஆற முதல் “என்னை விடுங்கள், நான் தப்பி விடுகிறேன்” என்று கொன்தெ விலக வேண்டியதாயிற்று.

கொன்தெ முன்வைத்த அமைச்சரவையில் இருந்த பொருளாதார அமைச்சரை இத்தாலியின் ஜனாதிபதி ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டார். காரணம் ஐரோப்பிய ஒன்றிய எதிர்ப்பாளரான அவரது பெயர் முன்வைக்கப்பட்ட உடனேயே இத்தாலின் பொருளாதார நிறுவனங்களின் பங்குகள் பெறுமதி இழக்க ஆரம்பித்தன. சர்வதேச வர்த்தகச்சந்தை ஐரோப்பிய ஒன்றியத்தின் அங்கத்தவரான இத்தாலியை ஒன்றியத்தை எதிர்த்து நடவடிக்கைகள் எடுக்கும் ஒரு பொருளாதார அமைச்சரை ஏற்கத் தயாராக இல்லை என்பதைப் புரிந்துகொண்டதாலேயே ஜனாதிபதி அம்முடிவை எடுத்தார்.

அரசாங்கம் அமைக்கவிருக்கும் கட்சிகள் மக்களுக்குக் கொடுத்திருக்கும் வரிக் குறைப்பு, குடிமக்களுக்கு சம்பளம் போன்ற பல திட்டங்கள் இத்தாலியின் வரவு செலவு திட்டத்தில் செலவுப் பக்கத்தை மிகவும் அதிகமாக்கும் என்று கருதப்படுகிறது. ஐரோப்பிய ஒன்றியம் திட்டமிட்டுச் செயல்படுத்திக் கொண்டிருக்கும் செலவுக் கட்டுப்பாட்டை தாம் மீறப்போவதாகவும் அரசாங்கம் அமைக்கவிருக்கும் கட்சிகள் பறைசாற்றியிருந்தன என்பதும் அவர்கள் முன்வைத்த அரசை இத்தாலிய ஜனாதிபதி ஏற்றுக்கொள்ளாததற்கு காரணமாக குறிப்பிடப்படுகிறது.

தற்போதைய நிலையில் இத்தாலிய சரித்திரத்தில் முதல் தடவையாக தேர்தலில் பங்கெடுத்து வென்றவர்கள் முன்வைத்த அரசாங்கத்தை ஜனாதிபதி ஏற்க மறந்தது நடந்திருக்கிறது. ஜனாதிபதியே கார்லோ கொத்தரல்லி என்ற பொருளாதார நிபுணரின் தலைமையில் வெவ்வேறு அமைச்சர் பதவிகளுக்கு வெவ்வேறு நிபுணர்களை தேர்ந்தெடுத்த ஒரு மந்திரிசபையை உருவாக்கியிருக்கிறார்.

இந்த மந்திரிசபையை பாராளுமன்றத்தில் ஆதரிப்பார்களா, அப்படி ஆனாலும் கூட அடுத்த தேர்தல் இன்னும் எத்தனை வாரங்களில் நடக்கும் என்பது புதிய கேள்விக் குறியாகியிருக்கிறது.

கடந்த மூன்று வாரங்களாக சவூதி அரேபியாவில் பெண்களின் உரிமைகளுக்காக போராடி வரும் பெண்கள் கைது செய்யப்பட்டு வருவதாக அம்னெஸ்டி உட்பட்ட மனிதாபிமான அமைப்புக்கள் குற்றஞ்சாட்டி வந்தன. சவூதிய அரச குடும்பத்துக்கு எதிராக குரலெழுப்பி வருபவர்களையே இப்படி கைது செய்து வருவதாகக் குறிப்பிடப்படுகிறது. மேலும் சில பெண்ணுரிமை அமைப்பின் அங்கத்தவர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதும் தடைசெய்யப்பட்டிருக்கிறது.

கைதுகளை செய்தவர்கள் சவூதிய அரசன், இளவரசன் ஆகியோருக்குக் கீழே பணியிலிருக்கும் பிரத்தியேக காவலர்கள் என்று குறிப்பிடப்படுகிறது. பெண்களுக்கான உரிமைகள் பலவற்றை அனுமதிக்கப் போவதாக தனது சர்வதேசப் பேட்டிகளில் பகிரங்கமாக அறிவித்த இளவரசர் முஹம்மது பின் சல்மான் இக் கைதுகளுக்கு பின்னணியில் இருப்பதாகவே கருதப்படுகிறது. அதனால் விரைவில் அனுமதிக்கப்பட இருக்கும் பெண்கள் காரோட்ட அனுமதி போன்றவை உண்மைதானா என்ற கேள்வி எழுந்திருக்கிறது.

எனினும் 24.05 வியாழனன்று கைது செய்யப்பட்டவர்களில் மூன்று பெண்கள் விடுதலை செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. விசாரணைக்காக கைது செய்யப்பட்டு தொடர்ந்தும் தடுப்பில் வைக்கப்பட்டிருக்கிறவர்கள் யாருடனும் தொடர்பு கொள்ள அனுமதிக்கப்படுவதில்லை. அவர்கள் எதற்காக கைது செய்யப்பட்டார்கள் என்ற விபரங்


தொடர்ச்சி அடுத்தபக்கம்...

பிரபல அமெரிக்க நடிகர் மோர்கன் ப்ரீமன் தங்களுடன் தகாத முறையில் நடந்து கொண்டதாகவும், தொல்லைகள் கொடுத்ததாகவும் 16 பெண்கள் குற்றஞ்சாட்டியிருக்கிறார்கள்.

2017 ம் ஆண்டு முதல் மீடூ என்ற பெண்கள் குற்றச்சாட்டு அலை ஆரம்பித்தது முதல் பிரபல நடிகர்கள் உட்பட உலகின் அதிகாரத்தில் இருந்த ஆண்கள் பலரும் குற்றஞ்சாட்டப்பட்டுப் பெரும்பான்மையானவர்கள் விலாசம் தெரியாமலே போய்விட்டார்கள்.

தற்போது 80 வயதான மோர்கன் ப்ரீமன் சுமார் 50 வருடங்களாக ஹோலிவூட்டில் கோலோச்சி வருபவர், 2005 இல் ஒரு ஆஸ்கார் பட்டமும் பெற்றவர். தனது படப்பிடிப்புக்களில் யாருடைய மனதையாவது தான் புண்படுத்தியிருப்பின் அவைக்காக மன்னிப்புக் கேட்பதாக ப்ரீமன் அறிவித்திருக்கிறார்.

அதேசமயம் மீடூ அமைப்பு உருவாக காரணமாக இருந்த ஹார்வி வைய்ன்ஸ்டீன் என்ற பிரபல ஹொலிவூட் தயாரிப்பாளர் மீதான குற்றச்சாட்டுக்கள் விசாரணைக்கு எடுக்கப்பட அவர் தன்னைப் பொலீஸில் ஒப்படைத்தார். ஹாலிவூட்டின் மிகப்பெரும் தயாரிப்பாளராக இருந்த அவரது நிறுவனம் அவர் மீது பல பிரபல நடிகைகளால் சாட்டப்பட்ட குற்றங்களின் பின்பு திவாலாகி விட்டது.





மலேசியத் தேர்தலில் வெற்றி பெற்ற மஹாதிர் முகம்மது உறுதியளித்தபடியே முன்பிருந்ததை விடச் சிறிய அமைச்சரவை ஒன்றை அறிவித்தார். 25 அங்கத்தினர்களைக் கொண்ட அமைச்சரவை 13 ஆகக் குறைந்திருக்கிறது.

மலேசியாவின் துணை பிரதமர் பதவி மஹாதிர் முஹம்மது ஒரு வாரத்துக்கு முன்னர் சிறையிலிருந்து விடுவித்த அரசியல்வாதி அன்வர் இப்ராஹிமின் மனைவி டாடுக்ஸெரிவான் அஸீசாவுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

மஹாதிர் முஹம்மதுவின் மிக நெருங்கிய அரசியல் தோழராக இருந்து அவராலேயே ஒதுக்கி வைக்கப்பட்ட அன்வர் இப்ராஹீம் சிறையிலிருந்து வந்தபின் தான் உடனடியாக எந்த அரசியல் பதவியையும் ஏற்கப்போவதில்லை என்று குறிப்பிட்டிருந்தார். அவரது மனைவி டாடுக்ஸெரிவான் அஸீசா தான் மலேசியாவின் துணைப் பிரதமராகியிருக்கும் முதலாவது பெண் ஆகும்.

முதல் தடவையாக அமைச்சரவை கூடிய சந்தர்ப்பத்தில் சகல அமைச்சர்களின் ஊதியங்களும் 10 விகிதத்தால் குறைக்கப்படும் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

## உலக யன்னல்

“வோட்டர் எய்ட், யுனிசெப் ஆகிய மனிதாபிமான அமைப்புக்கள் சேர்ந்து நடாத்திய ஆராய்வின்படி தெற்கு ஆசியாவின் மூன்றிலொரு பகுதி மாணவிகள் தமது மாதவிலக்கு காலத்தில் பாடசாலைக்குப் போவதில்லை. அதன் காரணங்களாக இருப்பவை மலசலகூட வசதியின்மையும், பிற்போக்கு கலாச்சார எண்ணங்களுமே என்று குறிப்பிடப்படுகிறது.

சிறீலங்காவின் மூன்றிலிரண்டு பகுதி மாணவிகள் தங்கள் முதலாவது மாதவிலக்கு வரை அது என்னவென்றே அறியாமல் இருக்கிறார்கள் என்று குறிப்பிடப்படுகிறது.

தென் ஆசியாவில் இருக்கும் 1.7 பில்லியன் பாடசாலைகளில் பெரும்பாலானவைகளில் பிள்ளைகளுக்கு வசதியான மலசலகூடங்கள் இல்லை. அத்துடன் மாதவிலக்குப் பட்டைகளும் தேவையான அளவுக்குக் கிடைப்பதில்லை. அதனால் பாடசாலை மாணவிகள் தங்கள் மாதவிலக்குக் காலத்தில் வீட்டிலேயே இருந்து விடுகிறார்கள். அச்சமயத்தில் பெண்கள் “சுத்தமற்றவர்கள்” என்ற பழங்காலக் கருத்தும் பல நாடுகளில் சாதாரணமாக நிறைந்திருக்கிறது. ஆப்கானிஸ்தானில் பெரும்பாலான பெண்கள் மாதவிலக்குக் காலத்தில் தங்களைக் கழுவிக் கொள்வதில்லை. மேற்கு நேபாளில் அந்த நாட்களில் பெண்கள் வீட்டுக்கு வெளியே ஒரு குடிசையில்தான் தங்க வேண்டும் என்ற வழக்கம் நிலவுகிறது.

கிழக்கு நேபாளத்தில் இருக்கும் சில பிராந்தியங்களில் 170 மாணவர்களுக்கு ஒரு மலசலகூடம்தான் இருக்கிறது என்கிறது அறிக்கை.

உலக சுகாதார ஸ்தாபனம் 25 மாணவர்களுக்கு ஒரு மலசலகூடம் இருக்க வேண்டும் என்று பரிந்துரைக்கிறது. மற்ற கிழக்கு ஆசிய நாடுகளும் அந்த எண்ணிக்கையை நிறைவு செய்யவில்லை என்று குறிப்பிடப்படுகிறது. “ஒவ்வொரு நாட்டு அரசாரங்கமும் நாட்டிலிருக்கும் ஒவ்வொரு பாடசாலைகளிலும் தேவைக்களவான நீரும், சுகாதாரமான மலசலகூடங்களுக்கும் இருக்க வேண்டும் என்ற கட்டாயத்தைக் கொண்டுவர வேண்டும்,” என்கிறார் வோட்டர் எய்டின் உயரதிகாரி.



களும் குடும்பத்தினருக்கு அறிவிக்கப்படவில்லை.

பலஸ்தீனாவின் காஸா பிராந்தியத்தின் எகிப்துப் பக்க எல்லைகளை ரமஜான் சமயத்தில் திறந்துவிடும் முடிவை எகிப்து அறிவித்திருக்க, இஸ்ரேலின் எல்லைப் பக்கத்தில் எவ்வித மாற்றங்களும் இல்லை. எட்டு வாரங்களாக பலஸ்தீனர்கள் நடத்திய எல்லைப் போராட்டங்கள் பல பலஸ்தீனர்களின் உயர்களைப் பறித்து, ஆயிரக்கணக்கான பலஸ்தீனர்களை அங்கவீனராக்கி, காஸா பிராந்திய சுகாதார அதிகாரத்தின் நிலைமையை கட்டுமீற வைத்ததைத் தவிர ஹமாஸ் இயக்கத்தின் மீது பலஸ்தீனர்களுக்குளரிச்சலையும் உண்டாக்கியிருக்கிறது.

அதே சமயத்தில் உலகில் இரசாயன ஆயுதங்களை பரவாமல் இருக்கத் தடுக்கும் ஐ.நாவின் ஒப்பந்தத்தில் பலஸ்தீனர்கள் [23.05] கைச்சாத்திருக்கிறார்கள்.

தனியாக பலஸ்தீனா என்ற நாடு உருவாகாத பட்சத்திலும் ஐ.நாவின் பொதுச்சபையில் பலஸ்தீனா ஒரு விருந்தினர் ஸ்தானத்தில் பங்கெடுத்து வருகிறது. அதன் மூலம் ஐ.நாவின் சர்வதேச ஒப்பந்தங்களில் பங்கெடுக்க இடங்கொடுக்கப்படுகிறது.

பலஸ்தீனாவை அப்படியான ஒப்பந்தங்களில் சேர்த்துக் கொண்டால் குறிப்பிட்ட ஐ.நாவின் அமைப்புக்களுக்கு அமெரிக்கா தனது பங்கு உதவித் தொகையை கொடுக்காது என்று அமெரிக்கா உறுதியாகச் சொல்லியிருப்பினும் ஐ.நா இந்த முடிவை எடுத்திருக்கிறது. ஏற்கனவே யுனெஸ்கோ அமைப்பில் பலஸ்தீனாவைச் சேர்த்திருப்பதால் அவ்வமைப்புக்கான உதவிகளைச் செய்வதை அமெரிக்கா நிறுத்தி விட்டிருக்கிறது. ஐ.நாவின் பலஸ்தீன அகதிகள் அமைப்புக்கும் உதவித்தொகை கொடுப்பதை அமெரிக்கா நிறுத்தி விட்டது.

இஸ்ராயேல், எகிப்து, வடகொரியா, தென்சூடான் ஆகிய நாடுகள் மட்டுமே இரசாயன ஆயுதங்கள் பரவுவதைத் தடுப்பது பற்றிய ஐ.நாவின் ஒப்பந்தத்தில் இதுவரை கைச்சாத்திடாத நாடுகள் ஆகும்.

# “குறி” சொல்லும் ஊடகங்கள்!



## இறுதி யுத்தத்தில் நடந்தது என்ன 77

பீஷ்மர்

ஊடகவியலாளர் தராக்கி சிவராம் கொலையை யார் செய்தார்கள் என்ற பெரிய கேள்வி இதுவரை விடை தெரியாத பெரும் மர்மமாக இருந்து வந்தது. ஒரு மர்மம் இருந்தாலே போதுமே ஏகப்பட்ட ஊகங்களும், கட்டுக்கதைகளும் உலாவும். சிவராம் கொலை விவகாரத்திலும் அப்படியான கதைகளும், ஊகங்களும் உலாவின. சிவராம் கொலை தொடர்பில் எழுத தொடங்கியபோதே, ஏழு முழ கயிற்றுடன் தென்மேற்க மூலையில் மாடு மேய்ந்து கொண்டிருக்கிறது என ஊரில் மை போட்டு பார்ப்பவர்களை போல, தமிழ் ஊடகப்பரப்பிலும் சிலர் “குறி” சொல்லிக் கொண்டிருந்ததையும் குறிப்பிட்டிருந்தோம்.

இளநீரை யாரோ குடித்துவிட்டு செல்ல, கோம்பை சூப்பியவன் மாட்டுப்பட்ட கதையாக, இந்த விவகாரத்தில் புளொட்டின் பெயர் எப்படி அடிபட்டதென்பதையும் குறிப்பிட்டிருந்தோம்.

கடந்தவாரம் தீபத்தை படித்துவிட்டு பல வாசகர்கள் தொலைபேசி மூலமும், நேரிலும் எம்மை தொ்டர்புகொண்டு, சிவராமை கொன்றது யார் என்பதை பூடகமாக குறிப்பிட்டுள்ளோம், கொஞ்சம் வெளிப்படையாக குறிப்பிட்டிருக்கலாம் என அபிப்பி ராயப்பட்டார்கள்.

இலங்கையில் எல்லா விடயங்களையும் பகிரங்கமாக பேசும் சூழல் உருவாகி விட்டதா என்று பதில் கேள்வியொன்று நம்மிடம் உள்ளது. அந்த அச்சமும், சந்தேகமும் இருக்கும்வரை இந்த விவகாரங்களில் யார் தொடர்புபட்டார்கள் என்பதை எழுத முடியாது.

சிவராம் கொலை விவகாரத்தில் சம்பந்தப் பட்டவர்கள் பரந்த மறைவிடத்தில் இருந்த நிலை யில், அவர்களை குறிப்பிட்ட வட்டமொன்றிற்குள் சுருக்கியுள்ளோம். இனிமேல் வாசகர்களின் மூளைக்கு வேலை கொடுக்கப்பட்டுள்ளது.

கடந்தவாரம் தொடரை படித்துவிட்டு, அலுவல கத்திற்கு நேரில் வந்த ஒரு வாசகர் பழைய பேப்பர் கட்டிங்குகள், இணையத்தள கட்டுரைகளின் பிரிண்ட் அவுட்களுடன் வந்தார். கருணா பிளவு நடைபெற்ற காலப்பகுதியில் கொல்லப்பட்ட இரண்டு பத்திரிகை யாளர்களான நடேசன், சிவராம் ஆகியோரின் கொலையில் கருணா குழு தொடர்புபட்டதாக குற்றம்சாட்டப்படுவதாக குறிப்பிட்டு, தீபத்தில் வெளியான சிவராம் கொலை விவகாரத்தில் கருணா குழுவை காப்பாற்ற முயற்சிக்கிறோமா என ஆதங்கப்பட்டார்.

கிழக்கிலும், கொழும்பிலும் நடத்தப்பட்ட சில கொலைகளிற்கு கருணா குழுவை குற்றம் சுமத்தப்படுகிறது தான். ஆனால், சிவராம் விசயத்தில் கருணா குழு அமைப்புரீதியாக தொடர்புபட்டிருக்கவில்லை. அதை விட “பெரிய கை”கள் தொடர்புபட்ட விசயம் இது.

ஊடகவியலாளர் நடேசனின் கொலை விசாரணை இன்னும் நடக்கவில்லை. அதனால் கொலை யாளிகள் பற்றிய எந்த தகவலும் கிடைக்க வில்லை. ஆனால், நடேசன் சுட்டுக் கொல்லப் பட்டபோது அந்த பகுதியில் நின்றவர்களின் தகவல்களின் அடிப்படையில், மரண விசாரணையின் போது கருணா குழுவின் பெயரை ஊடகவிய லாளர்கள் சிலர் நீதிபதியிடம் குறிப்பிட்டுள்ளனர். எனினும், இந்த விசயத்தில் சிறிய முன்னகர்வும் இருக்கவில்லை.

நடேசன் கொலை தொடர்பில் பலர் பத்திரிகை களிலும், இணையங்களிலும் எழுதியுள்ளனர். பலர் கருணாகுழு மீதே குற்றம்சாட்டியுள்ளனர். நடேசனை சுட்டுவிட்டு, திருகோணமலை வீதியால் மோட்டார் சைக்கிளில் சென்றுவிட்டு, ஐந்து நிமிடத்தில் திரும்பி வந்து, மக்களோடு மக்களாக கொலையாளிகளும் நின்று நடக்கும் சம்பவங்களை அவதானித்து கொண்டி ருந்ததாக, சம்பவ இடத்தில் இருந்த பத்திரி கையாளர்கள் எழுதியிருக்கிறார்கள். ஆனால் நடேசன் விவகாரத்தில் முறையான விசா ரணைகள் நடத்தப்படவில்லை. விசாரணை நடந்திருந்தால் ஒருவேளை சம்பந்தப்பட்ட வர்கள் சிக்கியிருக்கலாம்.

வாசகர்கள் அடுத்து அதிகமாக கேட்ட விசயம் சிவராமிற்கு ஐரோப்பாவில் உள்ள தமிழ் ஊடகவிய லாளரான பெண் ஒருவருடன் நெருக்கம் இருந்தது என குறிப்பிட்டிருந்தோம். அந்த பெண் மூலமே சிவராமிற்கு புலிகளின் கதவு திறந்தது. இதைப்பற்றி ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம்.

அந்த பெண் யார் என்பதை அறிவதில், வாசகர்கள் காட்டிய ஆர்வம் உண்மையிலேயே எங்களிற்கு ஆச்சரியமாக இருந்தது. ஒருவேளை, சிவராமை யார் கொன்றார்கள் என்பதை வெளிப்படையாக மிக துல்லியமாக குறிப்பிட்டால் கூட, அந்த பெண்ணின் பெயரை வெளியிட முடியாதென்பதை வாசகர்கள் புரிந்துகொள்ள வேண்டும். யாருடைய தனிப்பட்ட வாழ்க்கையையும் கிளறுவது இந்த தொடரின் நோக்கமல்ல.

சிவராம் புலிகளிற்காக ஆயுதம் கடத்தினார் என குறிப்பிடுவது ஒரு ஊடகவியலாளரின் பணியை குறைத்து காட்டுவதாக அமையாதா என்று சில வாசகர்கள் கேட்டிருந்தனர்.

வரலாற்றை “பொலிஷ்” செய்ய முடியாதென்பதைதான் அவர்களிற்கு புரிய வைத்தோம். ஒருவர் தன் வாழ்க்கையின் மூலமே தன்னைப்பற்றி அல்லது தனது தொழில் தொடர்பான பிம்பத்தை கட்டியெழுப்ப முடியுமே தவிர, அவர் இல்லாத போது அவரைப்பற்றி புனைந்து எழுதுவதால் அல்ல. சிவராம் புலிகளிற்காக சில பொருட்களை கொழும்புக்கு கொண்டு வந்தது அவரது நெருங்கிய நண்பர்களிற்கு நன்றாக தெரியும். நெருங்கிய நண்பர்களுடன் அதைப் பற்றி பேசியிருக்கிறார். சிவராமின் வீடு இராணு வத்தால் சோதனையிடப்பட்டதாக சில வாரங்களின் முன்னர் குறிப்பிடப்பட்டிருந்தது வாசகர்களிற்கு நினை விருக்கும். அந்த சமயத்தில் சிவராம் நாட்டிலிருக்கவில்லை, இராணுவத்துடன் தொடர்பில் இருந்த சில “சோஸ்களை” தொடர்புகொண்டு அந்த பிரச்சனையை வெட்டிவிடுமாறு கேட்டதை குறிப்பிட்டிருந்தோம். இப்படியான விசயங்களில் உதவி கேட்கும்போது, உண்மையை சொல்ல வேண்டிய நெருக்கடி உதவி கேட்பவரிற்கு உண்டு. சிவராமும் உதவிகேட்டவர்களிடம் ஆயுத விசயங்களை சொல்லியிருக்கிறார்.

இதெல்லாவற்றையும்விட, சிவராம் புலிகளின் பொருட்களை கொழும்புக்கு கொண்டு வருவதை பற்றி பாதுகாப்பு தரப்பும் அறிந்திருந்தது!

அது எப்படி?

இதில் ஒரு கம்பசூத்திரமும் கிடை யாது. அதைப்பற்றி சிவராமே அவர்களிடம் சொல்லியிருந்தது. தேவைப்பட்டால் அந்த ஆவணங் களை அவர்களின் பார்வைக்கும் இரகசியமாக கொடுத்து எடுத்தார்!

இரட்டை உளவாளிகளா செயற்படுபவர்கள் இரண்டு தரப்பாலும் பாதுகாக்கப்படுவார்கள் என சிலர் தவறாக நினைக்கலாம். உண்மையில் ஏதாவது ஒரு தரப்பின் உளவாளி, மறுதரப்பிலிருந்துதான் ஆபத்தை எதிர்கொள்வார். ஆனால் இரட்டை உளவாளி அப்படியல்ல அவருக்கு இரண்டு தரப்பிலிருந்தும் ஆபத்து உண்டு. பொதுவாகவே இரட்டை உளவாளிகளை யாரும் அவ்வளவாக நம்புவதில்லை. சந்தர்ப்பத்திற்கு ஏற்ப செயற்படுபவர்கள், தமது தேவை களிற்காக எதையும் செய்யக்கூடியவர்கள் என்ற இமேஜ் இரட்டை உளவாளிகள் மீது எப்பொழுதும் உண்டு.

சிவராம் விசயத்தில் இதற்குமேல் பேசுவதற்கு ஒன்றுமில்லை. இனி பேசுவதற்கு இருக்கும் ஒரேயொரு விசயம் அவரது கொலை விசாரணை.


கொல்லப்பட்ட மற்ற ஊடகவியலாளர்கள் தொடர்பான நீதி விசாரணை இடம்பெறாதபோது, சிவராம் கொலை விசாரணை ஓரளவு நகர்ந் ததற்கு அமெரிக்காவும் ஒரு காரணம். அவ்வளவு அழுத்தம் கொடுத்தார்கள். சிவராம் வெளிநாட்டு தூதரகங்களுடன் நெருங்கிய தொடர்பில் இருந்தார். அவர்களின் தகவல் மூலங்களில் ஒருவர். அதனால் அவர்கள் இலங்கைக்கு அழுத்தத்தை கொடுத்தார்கள்.


தொலைபேசியின் சிம் கார்ட் எங்கிருக்கிற தென்பதை கண்டுபிடிக்கும் தொழில்நுட்பம் இலங்கையில் முதன்முறையாக பாவிக்கப்பட்டது சிவராம் கொலை விசாரணையில்தான்! அதன் பின்னணி அமெரிக்கா.

சிவராம் கொலை விசாரணையில் உண்மை யில் கொலையாளிகள் அடையாளம் காணப்பட வில்லை. யார் கொலை செய்யவில்லையென்பதுதான் கண்டறியப்பட்டது.

சிவராமிற்கு மட்டுமல்ல, கொல்லப்பட்ட எல்லா ஊடகவியலாளர்களிற்கும் நீதி விசாரணை அவசியம் என்பதை மீளவும் வலியுறுத்தும் நேரமிது. சிவராம் கொலை விவகாரத்தை இத்துடன் முடித்துக்கொள்கிறோம்.

(தொடரும்)


ஐ.நடேசன்


கருணா குழு உறுப்பினர்கள்


யோசெப் பரராஜசிங்கம் கொலை வழக்கில் சிக்கியுள்ள பிள்ளையான்



சிவராம்

# 16 சென்றதும் வென்றதும்!

இபின் பதூதா

மெக்கா, மதினா இரண்டையும் தரிசித்து முடித்த பிறகும் இபின் பதூதாவுக்கு தாகம் அடங்கவில்லை. இந்த உலகம் பெரியது அல்லவா? நிலத்தில் மட்டுமே பயணம் செய்தால் போதுமா? கடல் கடந்து, தூர தேசங்களுக்குப் போக வேண்டாமா?

அதன் பிறகு, இபின் பதூதா ஒரு நிமிடத்தைக்கூட வீணாக்கவில்லை. வழியில் ஒரு குழு தட்டுப்பட்டால் ஓடிப்போய், 'ஐயா, நீங்கள் எந்த ஊருக்குப் போகிறீர்கள்? நானும் உங்களுடன் வரலாமா?' எனக் கேட்டு அவர்களோடு சேர்ந்துகொள்வார். எகிப்து, பாலஸ்தீனம், சிரியா, ஈராக் என்று பதூதா சுற்றத் தொடங்கியது இப்படித்தான்.



ஆப்பிரிக்காவும் ஆசியாவும் பதூதாவைத் தூண்டில் போட்டு இழுத்தன. இந்த இரு கண்டங்களிலும் உள்ள எல்லா நாடுகளையும் பார்த்தே தீர்வது என்று சபதம் போட்டுக்கொண்டார். என்ன சாப்பிடுவது, எங்கே தங்குவது என்பதைப் பற்றியெல்லாம் கவலையே படவில்லை. யார் எதைக் கொடுத்தாலும் வாங்கிச் சாப்பிட்டார். வழிபாட்டு இடங்களில் கும்பலோடு கும்பலாகப் படுத்து உறங்கினார்.

அப்போதெல்லாம் பதூதா போன்ற பயணிகளுக்கு உணவும் இருப்பிடமும் அளிக்க ஊர் பெரிய மனிதர்கள் ஆர்வம் காட்டினார்கள். சாப்பிட ஏதாவது கொடுத்துவிட்டு, "அப்புறம் எங்கே போய் வந்தாய் சொல்?" என்று கதை கேட்பார்கள். பதூதாவுக்கும் கதைச் சொல்வதென்றால் கொள்ளைப் பிரியம்.



எளிய குடிசை வீட்டில் ஒருநாள் தங்குவார். மறுநாள், அந்த நாட்டின் அரண்மனையில் மன்னரிடம், தான் சென்ற இடங்களைப் பற்றிச் சொல்லி, விருந்தாளியாகத் தங்குவார். அரண்மனை வாழ்க்கை சில நாட்கள் கிடைக்கும். பிறகு, மூட்டை முடிச்சோடு கப்பல் ஏறிவிடுவார்.

இந்தியாவுக்குப் போக வேண்டும் என்று கனவு காண ஆரம்பித்தார் இபின் பதூதா. 'இந்து குஷ் மலைத்தொடர் பகுதியைக் கடந்தால்தான் இந்தியா போகமுடியும்' என்றார்கள். 13,000 அடிகள் உயரம்கொண்ட 'காவாஸ் பாஸ்' எனப்படும் பகுதியைக் கடந்து சென்றார். அதைப் பற்றி அவர் எழுதிய குறிப்பு இது.

'மிகவும் உயரமான மலை அது. முழுக்க பனியால் மூடப்பட்டிருந்தது. அதை, 'இந்து குஷ்' என்று அழைக்கிறார்கள். இந்துக்களைக் கொல்லும் குளிர் என்பது இதன் அர்த்தம். இங்கு வரும் பலர் குளிர் தாங்காமல் இறந்துவிடுவார்களாம்.'

அங்கிருந்து ஆப்கானிஸ்தான் வழியாக, சிந்து நதிக்கரைக்கு செப்டம்பர், 1333ம் ஆண்டு வந்து, டெல்லி சென்றார். அப்போது, சுல்தானாக இருந்த முகமது பின் துக்ளக்கைச் சந்தித்தார். அவருக்குப் பதூதாவைப் பிடித்து விட்டது. மெக்கா சென்றவர், இஸ்லாமியச் சட்டங்களைப் பயின்றவர் என்பதால், பதூதாவை அரசவை நீதிபதியாக நியமித்தார்.

உல்லாசமாக ஊர் சுற்றிக்கொண்டிருந்த பதூதா ஓரிடத்தில் உட்காருவாரா? இந்தியாவை வலம் வர ஆரம்பித்துவிட்டார். சிந்து நதிக் கரையில் சுற்றிக்கொண்டிருந்த காண்டாமிருகங்களைப் பற்றி விரிவாக தன் டைரியில் எழுதினார். விரைவில் அவருக்கு போரடிக்க ஆரம்பித்துவிட்டது. "சுல்தான், நான் இன்னொரு முறை மெக்கா போகலாம் என்று நினைக்கிறேன்" என்றார். துக்ளக் ஒப்புக்கொள்ளவில்லை. பதூதாவும் பிடிவாதத்தை விடவில்லை.

"சரி, ஒரு வேலை செய்யுங்கள். சீனா போய் வாருங்கள்" என்று படை, பரிவாரங்களுடன் அனுப்பிவைத்தார் துக்ளக்.



மகிழ்ச்சியோடு புறப்பட்டார் பதூதா. ஆனால், பயணத்தில் தனியாக சுற்றிக் கொண்டிருந்த போது, கொள்ளைக்காரர்கள் அவரை மடக்கி விட்டார்கள். அவரிடம் இருந்ததைத் திருடிவிட்டார்கள். இனி சீனாவுக்குப் போகமுடியாது என்பதால், கடல் வழியே கோழிக்கோடு போனார் பதூதா. (இரண்டு நூற்றாண்டுகள் கழித்து இதே இடத்துக்குதான் வாஸ்கோ ட காமா வந்துசேர்ந்தார்.)

அங்கிருந்து கொல்லம் சென்றார். அங்கே ஒரு மசூதி இருப்பதை அறிந்து அதைப் பார்க்கப்போனார். அதற்குள் பெரும் சூறாவளி ஒன்று, பதூதாவின் கப்பலைக் கவிழ்த்துவிட்டது. கப்பல் மட்டுமா கவிழ்ந்தது? துக்ளக்கின் ஆட்சியும் கவிழ்ந்துவிட்டது என்னும் செய்தி வந்துசேர்ந்தது.

அடுத்து எங்கே போவது? புறப்பட்டது சீனாவுக்கு என்பதால், அங்கேயே போய்விட முடிவெடுத்தார். இடையில், மாலத்தீவுக்கு கடல் வழியாகவே சென்றார். குட்டித் தீவுதானே ஒரே நாளில் பார்த்துவிடலாம் என்று நினைத்தார். ஆனால், அங்கே ஒன்பது மாதங்கள் தங்கினார். காரணம், அங்கிருந்த ஓமர் என்னும் ராஜா. ஒரு பௌத்த நாடாக இருந்த மாலத்தீவு, இஸ்லாமிய நாடாக மாறியிருந்தது. இஸ்லாமிய சட்டம் தெரிந்த பதூதா, அங்கே இருப்பது நல்லது என்று ஓமர் நினைத்ததால், அவரைப் பிடித்து இழுத்து, நீதிபதி பதவியில் உட்காரவைத்துவிட்டார்.

இதென்ன, எங்கே போனாலும் வேலை செய்யச் சொல்கிறார்களே என்று பதூதா நினைத்திருக்கவேண்டும். அங்கிருந்து விடுவித்துக்கொண்டு, இலங்கை சென்றார். இலங்கையில் கால் பதிப்பதற்குள் அவருடைய கப்பல் கிட்டத்தட்ட முழுமையாக மூழ்கிவிட்டது. 'அடடா, நாம் நினைத்ததைவிட ஒவ்வொரு நாளும் சாகசம் அதிகமாகிக்கொண்டே போகிறதே' என்று உற்சாகம் அடைந்தார் பதூதா. ஆம், அதுதான் இபின் பதூதாவின் சிறப்பம்சம். கப்பல், ஆட்சி எது கவிழ்ந்தாலும் அவருக்குக் கவலையில்லை. வழி தவறினால், கொள்ளைக்காரர்கள் வந்தால் கவலையில்லை. 'என் லட்சியம் பயணம் செய்வது மட்டுமே' என்று ஒவ்வொரு முறையும் சொல்லிக்கொள்வார். சுமத்ரா, வியட்நாம், சீனா, ரஷ்யா என்று பல நாடுகளைச் சுற்றிவந்தார்.

1348ம் ஆண்டு டமாஸ்கஸ் வந்து சேர்ந்தார் இபின் பதூதா. இதுவரை எங்கெல்லாம் சென்று வந்தோம் என்று பட்டியல் போட்டுப் பார்த்தார். எல்லா இஸ்லாமிய நாடுகளையும் இபின் பதூதா வலம் வந்திருந்தார். அடுத்து எங்கே என்று சிலர் கேட்டார்கள். "நான் போயே தீரவேண்டிய ஓரிடம் இருக்கிறது, அங்கேதான் போகப்போகிறேன்" என்றார் பதூதா.

அந்த இடம், மொராக்கோ. ஆம், அவருடைய வீடு. தொடரும்...

- இபின் பதூதா, அவர் வாழ்ந்த காலத்தில் எங்கெல்லாம் இஸ்லாமிய ஆட்சி நடைபெற்றதோ, அங்கெல்லாம் சென்றுவந்தார். அப்படி சென்ற முதல் பயணி அவர்தான்.
- கிட்டத்தட்ட 75,000 மைல்களை பதூதா பயணம்செய்து கடந்திருந்தார். அவருக்கு முன், இவ்வளவு தொலைவு வேறு யாரும் சென்றது இல்லை.
- செங்கடல், அரபிக் கடல், இந்தியப் பெருங்கடல் மூன்றிலும் பயணம் செய்தார் பதூதா. இங்கெல்லாம் இஸ்லாமிய மன்னர்கள் நல்ல செல்வாக்குடன் ஆட்சி புரிந்துவந்தனர் என்பதை பதூதாவின் பயணத்துக்குப் பிறகே உலகம் தெரிந்துகொண்டது.
- 'இதோ வருகிறேன்' என்று சொல்லிவிட்டுக் கிளம்பிய பதூதா, வீட்டுக்குத் திரும்பியபோது பல கெட்ட செய்திகள் காத்திருந்தன. அவர் அப்பா 15 ஆண்டுகளுக்கு முன்பே இறந்துபோயிருந்தார். 'பிளேக்' என்ற கொள்ளை நோய் அவருடைய நாட்டில் பரவிக்கொண்டிருந்தது.
- அரபு நாடுகளில் அதிகம் சுற்றும் நபர்களை 'இபின் பதூதா' என்று செல்லப் பெயரிட்டு அழைத்தார்கள்.


மூன்று கில்லாடிகள்!
1941-ல் இரண்டாம் உலகப்போர் நடந்துகொண்டிருந்தது. பிரான்ஸின் தென்கிழக்குப் பகுதி படைத்தளத்துக்கு ரிச்சர்டு விரைந்துகொண்டிருந்தார். மிக நெருக்கடியான காலகட்டம். ரிச்சர்டுக்கு பொறுப்புகள் கூடுதலாக இருந்தன.
தரைப்படைக்கு போர் வீரர்கள் போதிய அளவு இல்லை. புதிதாகத் தேர்ந்தெடுக்கப்படும் வீரர்களுக்குப் பயிற்சியளிக்கக்கூட கால அவகாசமில்லை.
பயிற்சியின்போது, தேர்ச்சி பெறாமல் வீட்டுக்கு அனுப்பப்பட்ட இளைஞர்களை மீண்டும் பணியில் சேர்த்துப் பயிற்சி கொடுங்கள். இந்த வேலையை விரைந்து செய்யுங்கள்.
அனைவருக்கும் தந்தி கொடுக்கப்பட்டுவிட்டது.
பனிக்காலம் தொடங்கிய அதிகாலை வேளை... மூரே (முதல் கில்லாடி) டைஜன் பகுதியில் உள்ள ஒரு பண்ணையில் வேலை செய்ய குதிரையில் சென்றுகொண்டிருந்தான்.
ம்... பண்ணை வேலையில் சேர தாத்தா கடிதம் கொடுத்துள்ளார். பண்ணையில் பசு மேய்க்கிற வேலையோ... பன்றி மேய்க்கிற வேலையோ தெரியவில்லை.
ராணுவத்தில் வேலை கிடைத்தும்... பயிற்சியில் சொதப்பியதால், அந்த வேலையும் பறிபோய்விட்டது. தாத்தா அடிக்கடி சொல்வார், 'நீ எந்த வேலைக்கும் லாயக்கில்லை'னு!
படிக்கிற காலத்தில் குத்துச் சண்டை வீரனா ஆகணும்னு ஆசை, அது நிறைவேறவில்லை. ஆனால், மனசு மட்டும் சொல்லுது, ஏதாவது சாதிக்கணும்னு!
எதுவுமே சரியா வரல மொத்தத்துல காமெடி பீஸாயிட்டேன்.
அடப் பாவமே! குதிரை நொண்டுகிறதே... மேலும் பயணத்தைத் தொடர முடியாதுபோல தோணுது. இந்த ஒற்றை வீட்டில் ஏதாவது உதவி கிடைக்குதான்னு பார்ப்போம்.
போச்சுடா! குதிரைக்கு நான் கட்டிய லாடமே கழண்டுடுச்சு. இதை தாத்தா பார்த்திருந்தால், 'நீ லாடம் கட்டக்கூட லாயக்கில்லை'னு திட்டியிருப்பார்.
ஹலோ, எனக்கு உதவ முடியுமா?!
அம்மா! யாரோ வந்திருக்காங்க...
வீட்டுக்குள் வர அனுமதி கிடைத்தது
என் குதிரையில் மேலும் பயணிக்க முடியவில்லை. எனவே, உங்கள் உதவியை நாடினேன்.
உங்களை கொள்ளைக்காரர் என்று நினைத்தேன்.
அப்படியென்றால், இங்கு கொள்ளையர்கள் வருவார்களா? அப்படி வருவது தெரிந்தால் கூறுங்கள், நான் உடனே சென்று பதுங்கிக்கொள்கிறேன்.
வேடிக்கையாகப் பேசுகிறீர்கள்.
என்னை நன்கு உபசரித்தீர்கள். உணவளித்தீர்கள்! மிக்க நன்றி. நான் இரவுக்குள் பண்ணைக்குச் செல்ல வேண்டும். புறப்படுகிறேன்.
வாருங்கள் உங்கள் குதிரைக்கு லாடத்தை மாற்றி விடலாம்.
அதே வேளை மற்றொரு நபர், குதிரையில் அந்த ஒற்றை வீட்டை நோக்கி வந்தார்.
யார் நீ? இங்கு எதற்கு வந்தாய்!
அதிர்ச்சியடைந்தான் மூரே.
(தொடரும்...)


வெளிநாட்டு பார்சல் சேவை
உலக நாடுகள் அனைத்திற்குமான துரிதகதி ஆவணங்கள், பொருட்கள் என்பவற்றை
மிக விரைவாகவும் உத்தரவாதத்துடனும் பிரபல்யம் வாய்ந்த கம்பனிகள் ஊடாக
அனுப்புவதற்கு நீங்கள் நாடவேண்டிய இடம்
சஜீஸ்
கொமினிகேசன்
வெளிநாட்டு பார்சல் சேவை
இல.22, பஸ் நிலையம்,
வவுனியா.
தொ.பே.இல:024 2222166
DHL
எமது கிளைகள்
சஜீஸ் வெளிநாட்டு பார்சல் செவை
A9, வீதி, நீதிமன்றம் முன்பாக,
கிளிநொச்சி.
021 2285574
சஜீஸ் வெளிநாட்டு பார்சல் சேவை
தபால் கந்தோர் அருகாமை,
முள்ளியவளை.
024 3248954
M.S.K. என்டர்பிறைசஸ்
(கந்தசாமி கோவில் முன்பாக)
கந்தசாமி கோவில் வீதி,
வவுனியா.
024 3244263
M.S.K. என்டர்பிறைசஸ்
7ம் வட்டாரம்,
முல்லைத்தீவு வீதி,
புதுக்குடியிருப்பு.
021 3003424


Suthan Hardware
& Multi Trade Center
சுதன் பல்பொருள்விற்பனை நிலையம்
கட்டிடத்திற்கு தேவையான பொருட்கள்
மற்றும் ஹாட்வெயார் பொருட்கள்
என்பவற்றை மலிவான விலையில்
பெற்றுக் கொள்ள முடியும்.
விலாசம்
தேவி புரம் சந்தி
புதுக்குடியிருப்பு
உரிமையாளர்
P.இராஜவர்மன்
T.P: 077-4631579


Sentamilkumaran
Multi Shop &
N.V.T SUPER MARKET
உங்களுக்கு தேவையான அனைத்துப்
பொருட்களையும் பெற்றுக் கொள்வதுடன்
உங்கள் உறவுகளுக்கான பொதிகளை
நம்பிக்கையாகவும் விரைவாகவும் அனுப்ப முடியும்
முள்ளியவளை வீதி, தண்ணீருற்று, T.P: 0772881874







இந்தப்பத்திரிகை நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிற்ரட் நிறுவனத்தால் பருத்தித்துறை வீதி, 5ம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியில் உள்ள நாவலர் பிரிண்டர்ஸில் அச்சிட்டு 03.06.2018 அன்று வெளியிடப்பட்டது.